கல்வெட்டு

ஓர் அறிமுகம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

12160·1

கல்வெட்டு

(ஓர் அறிமுகம்)

தொகுப்பாசிரியர்கள்

நடன. காசிநாதன்

இயக்குநர் (ஓய்வு), தொல்லியல் துறை

கு. தாமோதரன்

இயக்குநர் (ஓய்வு), தொல்லியல் துறை

பொதுப்பதிப்பாசிரியர்

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்** இஆப,

முதன்மைச் செயலாளர்(ம)ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2009

நூல் சேர்க்கை
எண் 2160·1
சென்னை-600 008

தொல்லியல் துறை வெளியீடு எண் 31
மூன்றாம் பதிப்பு 1980
நான்காம் பதிப்பு 2009 - 1000 பிரதிகள்.

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தொகுப்பாசிரியர்கள்
நடன. காசிநாதன்
கு. தாமோதரன்

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இஆப,

விலை: ரூ.34

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
சென்னை - 600 008.

அச்சிட்டோர்
தரமணி மகளிர் கூட்டுறவு அச்சகம்.
இராயப்பேட்டை.
சென்னை - 600 014.

<u>அட்டைப்படம்</u>

இசைக்கல்வெட்டு
அரச்சலூர், ஈரோடு மாவட்டம்.

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008
14-10-09

பதிப்புரை

தமிழகத்தில் காலத்தைக் கடந்து ஆயிரக்கணக்கான அளவில் உள்ள கோயில்கள், அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் ஒவ்வொன்றும் வரலாற்றுக்கு உதவும் சான்றுகளாகும். வரலாற்று ஆதாரமாக உள்ள தமிழ் பிராமி கல்வெட்டுகள் தொடங்கி அண்மைக் காலம் வரை கிடைக்கக் கூடிய கல்வெட்டுகளின் எண்ணிக்கை ஏராளம். இந்தியாவிலேயே அதிகளவிலான கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடிகள் சான்றுகள் தமிழகத்தில் தான் கிடைக்கின்றன. தமிழகத்தில் மட்டும் சுமார் 25,000 கல்வெட்டுகள் உள்ளன.

வரலாற்றுக்கு தேவையான அடிப்படைச் சான்றுகளை இக்கல்வெட்டுகளின் அருமை காரணமாக அவற்றைப்படிக்க வேண்டி “கல்வெட்டு முனைப்புத் திட்டம்' என்ற சிறப்புத்திட்டத்தின் கீழ் 2004 செப்டம்பர் மாதம் தொடங்கி கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு வருகின்றன. இக்கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் வாயிலாக மட்டும் ஆகஸ்ட் 2009 வரை 14,531 கல்வெட்டுகளும் ஏற்கனவே படியெடுத்த 7,833 கல்வெட்டுகளும் ஆக மொத்தம் 22,364 கல்வெட்டுகளும் இதுவரை இத்துறையில் படியெடுக்கப்பட்டுள்ளன.

இத்துறையின் ஓய்வு பெற்ற இயக்குநர்கள் திரு. நடன. காசிநாதன் மற்றும் திரு. கு. தாமோதரன் ஆகியோர் செப்பேடுகள், பிராமி கல்வெட்டுகள் நடுகல் கல்வெட்டுகள், பாடல் கல்வெட்டுகள் மற்றும் தமிழ் கல்வெட்டுகளில்

முக்கியமானவற்றைத் தொகுத்து உரிய விளக்கவுரையுடன் சிறப்புற எழுதியுள்ளனர்.

'கல்வெட்டு ஓர் அறிமுகம்' என்னும் இந்நூல் வரலாற்று ஆய்வு மாணவர்கள் மற்றும் வரலாற்று ஆர்வலர்களிடையே உள்ள வரவேற்புக்கிணங்க மறுபதிப்பு சிறப்புடன் வெளிவருகின்றது.

இந்நூலின் மறுபதிப்புப் பணியினை மேற்கொண்டு சிறப்புற வெளிக் கொணர்ந்த இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத் மற்றும் திரு. இரா. சிவானந்தம் ஆகியோருக்கு மனமார்ந்த பாராட்டும். மேலும் இந்நூலின் அட்டைப்பட வடிவமைப்புச் செய்த இத்துறை ஓய்வு பெற்ற நிழற்படம் எடுப்பவர் திரு. மு. த. ஸ்ரீதரன், டி.டி.பி. மற்றும் பிழைத்திருத்தம் செய்தளித்த அச்சுப்பிரிவு பணியாளர்கள் ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூல் வரலாற்று ஆய்வாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோருக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நாள் : 14-10-09
இடம் : சென்னை - 8.

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்.

1. பல்லவமன்னன் சிம்மவர்மனின் பள்ளன்கோவில் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

கோ விசைய *ஸிංஹவசூ*ற்கு[1] யாண்டாறாவது வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டார் காண்க தந்நாட்டு அமண் சேர்க்கை பருத்திக் குன்றில் *வஜ்ரநதி*க்குரவர்க்குப்[2] பள்ளிச்சந்தமாகக் கொடுத்தோந் தாங்களும் படாகை நடந்து கல்லுங் கள்ளியுந் நாட்டி அறையோலை செய்து கொ[3]

டுத்து விடுதகவென்று நாட்டார்க்குத் திருமுகம் விட நாட்டாருந் திருமுகம் கண்டு தொழுது தலைக்கு வைத்து படாகை நட[ந்]து கல்லுங் கள்ளியு நாட்டி நாட்டார் விடுத்த அறையோலைப்படிக் கெல்லை கீழ்பாலெல்லை ஏந்தலேரியின் கீழைக் கடற்றின் மேற்கு மோமைக் கொல்லை எல்லை இன்னும் தென்பாலெல்லை வேள்வடுகன் கேணியின் வடக்கும் கடற்றினெல்லை இன்னுந் நீலபாடி

எல்லை இன்னும் விலாடன் குற்றேத்தத் தெல்லை இன்னும் மேல் பாலெல்லை மாவேத்தத்து வதியின் கிழக்கும் மும்முலை ஏத்தத்தெல்லை இன்னு மாற்றெல்லை இன்னும் வடபாலெல்லை பெருங்கொல்லையின் தெற்கு இன்னும் பாண்டியன் கயத்தெல்லை இன்னும் முருக்கங்கேணி எல்லை இவ்விசைத்த பெருநான்கெல்லை யகத்துமகப்பட்ட நிலம் நீர் நிலமும்

புன்செய்யும் களரும் கன்று மேய் பாழும் காடும் பீடிலிகையும் கிடக்குங் கேணியும் மனையும் மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உண்ணில னொழிவின்றி கோவும் பொறியும் மாற்றி குடிநீக்கி இவ்வூர் பெற்ற *வஜ்ரநதி*க்குரவர்க்கே பள்ளிச்சந்தமாக தாமிரிலும் பதினாறரைப்பட்டி நிலங்கொடுத்தோம் இந்நிலத்திற் கெல்லை கீழ் பாலெ

ல்லை புலிகிழார் பட்டியின் மேற்கும் தென்பாலெல்லை முள்ளெறி [பாக்க]த் தெல்லையின் வடக்கும் மேல்பாலெல்லை போக்குவாய்ச் செறுவின் கிழக்கும் வடபாலெல்லை பல்லாங்குழிக் காவின் தெற்கும் இந்நான்கெல்லை யகத்தும் அக[ப*]பட்ட *ஹூமி*யும்[4] பருத்திக் குன்றில் *வஜ்ரநந்தி*க்குரவர்க்கே[2] பள்ளிச்சந்தமாக *பரதத்தி*[5] சென்றது *நரஹ*யணாணத்தியால்[6] ।*ஸ்வஸ்தி*॥

---

1. ஸிம்ஹவர்மர்க்கு
2. வஜ்ரநந்திக்குரவர்க்கு
3. செப்பேட்டின் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு பத்தியாக உள்ளது.
4. பூமியும்
5. பரதத்தி
6. நரபயணாணத்தியால்

விளக்க உரை :

தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள செப்பேடுகளில் தமிழில் அரச ஆணையைக் கொண்டுள்ள மிகவும் தொன்மையான செப்பேடு இதுவேயாகும். தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி தாலுக்கா பள்ளன்கோயில் என்ற இடத்தில் இச்செப்பேடு கிடைத்தது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனுடைய பாட்டன் சிம்மவர்மனின் ஆணையை இச்செப்பேடு கூறுகிறது. இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. இதில் முதல் பகுதி சம்ஸ்கிருதத்திலும், இரண்டாம் பகுதி தமிழிலும் உள்ளன.

சிம்மவர்மனின் மகனும் மகேந்திரனின் தந்தையுமாகிய சிம்மவிஷ்ணு பல்லவர் ஆட்சியைக் காவிரிக்கரை வரையில் விரித்ததை இச்செப்பேட்டின் சம்ஸ்கிருதப் பகுதி கூறுகிறது. மேலும் திருப்பருத்திக்குன்றில் வாழ்ந்த நந்திசங்கத்தைச் சார்ந்த வஜ்ஜிரநந்தி என்ற சமணப் பெரியாருக்கு ஒரு ஊரைப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்ததைச் சம்ஸ்கிருதப் பகுதி கூறுகிறது.

அதே ஆணை சற்று விரிவாகத் தமிழ்ப் பகுதியிலும் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ்ப் பகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது.

செப்பேட்டின் காலம் சற்றேறக்குறைய கி.பி. 550 ஆகும்.

இச்செப்பேட்டிலிருந்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே அரச ஆணை எவ்வாறு அளிக்கப்பட்டது என்றும் அதை எவ்வாறு ஊரார் பெற்று அதன்படி நடந்தனர் என்றும் அறியலாம். கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே எவ்வளவு தெளிவாக ஆட்சி தமிழில் செயல் பட்டது என்பதற்கும் இச்செப்பேடு எடுத்துக்காட்டாகும்.

“பெருநகர நாட்டு நாட்டார் காண்க” என்பது அரச ஆணை. ஆணை எழுதப்பட்டு அனுப்பப்பட்ட ஓலைக்குத் திருமுகம் என்று பெயர். தானம் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு எல்லைகள் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என கிழக்கே தொடங்கி வலமாக குறிக்கப்படுவது தொன்றுதொட்டு வரும் மரபு. தானம் கொடுக்கப்பட்ட நிலத்தில் எவை எவை உட்பட்டன என்பதை “நான்கு எல்லையகத்தும் அகப்பட்ட நிலம், நீர் நிலமும், புன் செய்யும், களரும், கன்றுமேய் பாழும், காடும், பீடிலிகையும், கிடங்கும், கேணியும், மனையும், மனைப்படைப்பும், உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உள் நிலம் ஒழிவின்றி” என்று வருவதிலிருந்து அறியலாம். இவ்வாறு கொடுக்கப்படும் நிலத்துக்கு அரசனுக்குச் சேர வேண்டிய வரியையும் நிலவகைப் பெயரையும் மாற்றிக் கொடுக்கப்பட்டது என (கோவும் பொறியும் மாற்றி) அறிகிறோம். உழும் குடிகளைச் சிலசமயம் அகற்றிவிட்டு நிலத்தைக் கொடுப்பவர்க்கு முழு உடைமையாகக் கொடுப்பது மரபு. இதை “குடிநீக்கி” என்ற சொல்லால் குறிப்பது உண்டு. இச்செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிலம் குடி நீக்கிய பள்ளிச்சந்தம். “பள்ளிச்சந்தமாக” என்பது அரச ஆணை. தாமர் என்ற ஊரிலும் பதினாறரைப் பட்டி நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது. நரபயன் என்ற அதிகாரி இவ்வாணையை ஒழுக்குபவனாக (செயலாற்றுபவனாக) குறிக்கப்படுகிறான். அவனை முற்கொண்டு இத்தானம் (பரததத்தி-பிறருக்கு கொடுக்கப்படுவது) அளிக்கபட்டது.

2. முதலாம் பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமும் ஞும்மனம்பாக்கமு . . . [ஞங்கணத] . . . [ட] விச்சாவிநீதப் பல்லவரசன் விலைக்காணக கெயிக் கொடுத்து [ச்சி] . . . [ெ] ண[1] செயிது ஆயிரத்தி[ரு] நூற்றுக் குழிப்படியால் விற்றுக் கொண்ட நிலம் த[ளி] எடுப்பதற்கு ஓடு சுடக்கொண்ட நிலம் தலெப்பாடகத்துள் சூளை மேட்டுப்பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுங்கூட அயிந்தே கால் பட்டி நிலமும் விற்று கொண்டு விச்சாவிநீத பல்லவ பரமேச்சுரகரம் எடுத்து ஏரி தோண்டி இத்தளி வழிபாடு செயிவார்க்கு இருக்கும் மனையும் மனைப்படப்பும் வகுத்து இதநுள் மிக்க நிலம் ஒழுக்க விக்கு வி[ளை] நிலமா[க]வும் இன் நிலத்துக்கு

[கீழ்பா] லெல்லை முதுகாட்டு வழியின் மேற்கும் தென்பாெ[லல்லை ஊ]ர் புகு [வழியின் வடக்கு]ம் மேல்பாலெல்லை ஊர் புகு வழி நின்றும் வடக்கு நோக்கி நாட்டுக் காலு[க்]கே போன வ[ழி]யின் கிழக்கும் வடபாலெல்லை நாட்டுக்காலுந் தெற்கும் இன் நான் கெல்லெ அகத்து[ம்] தளி[யு]ம் ஏரியும் வழிபாடு செயிவார்[க்]கு மனையும் மனைப்படப்புன் நீக்கி மிக்க நிலமும் சூளை மேட்டுப் பட்டியும் ஒழுக்கவிக்கு விளைநிலமாக கொடுத்[த]து இத்தளிக்கு வேண்டுந் தேவகருமநவகருமஞ் செயிவதற்கும் இருபதின்மர் சதுர்ப்பேதிகளுக்குப் பிரமதேயங் கொடுப்பதற்கும் மணயிற் கோட்டத்துப் பன்மா நாட்டுப் பரமேச்சுரமங்கலத்துள் அகப்பட்டவளெயில் சுற்று நிலம் அத்தனையும் இருப[த்]

தையிந்து பங்காயி இதனுள் மூன்று பங்கும் கூரத்துத் தளிக்கு [தே]வ [கரும] நவகருமஞ் [செய்]வதாகவும் கூரத்து மண்டக[த்து]க்கு

தண்ணீர்[க்]குந் தீக்கும் ஒரு பங்காகவும் இம்மண்டகத்தே பாரதம் வாசிப்பதற்கு ஒரு பங்காகவும் நின்ற இருபது பங்கும் இருபதின்மர் சதுர்ப்பேதிகளுக்கு பிரமதேயமாக கொடுத்து[2] இவ்வூர் மனையும் மனைப்படப்பும் ஊராள்சியும் செக்கும் தறி[யும்] கூலமும் தரமும் கத்திக் காணமும் மற்றும் பொதுவிநால்லுள்ளதெல்லாம் இ[ப்]பங்கு இருபத்தைன்தின் வழியாலே பங்கிட்டுண்பா[ர்]ராகவும் இவ்வூர் பரமச்சுர தடாகத்துக்கு பாலாற்று நின்றும் தோண்டின பெரும்பிடுகு காலி[ந்]புழுதி பாடும் நீ[ர்]ரீந்த வழியா[லே தலை] வாயும் தலெப் பேழையும் ஊ[ற்]று[க்] காலும் தோண்[டின நில] மெல்லாம் [பரமேசு]

வரமங்கலத்து நி[ல]மாக இக்காலுள் குற்றே[த்த] மையும் நாட[ா]ழ்ச்சியு[ள்] நாட்டுப்பண்ணிக்கெயு[ம்]....

தானங் கொடுத்த மூன்று பங்குநுளும் [ஒன்றரைப் பங்[கு]. . .
நார் [அ]னந்தசிவ ஆசாரியர் மக்கள் மக்கள் ம[ரு]மக்கள் . . .
ப்புற[ம]க் கொண்டு வழிபாடு செயி[து பலி] போ[சன] . . .
ம் கொண்டு பு[ல்ல]ச[ரு]மர் மக்க[ள் மக்கள] வகருமமும் இவ் விருவர் மக்கள் மக்கள் . . . .

தேவதஊகா[3] நின்ற வஷூஹடூாா[4] கருங் கா . . . . க்காத்து கொடுக்க

---

1. சிராவணை என்று அந்தச் சொல்லைப் பூர்த்தி செய்யலாம்
2.. கொடுத்தது
3. தேவதமாகா
4. பப்பபட்டார

விளக்க உரை :

முதலாம் நரசிம்மவர்மனின் பெயரனும் இரண்டாம் மகேந்திரவர்மனின் மகனும் ஆன முதல் பரமேச்வரவர்மனால் அளிக்கப்பட்ட ஆணையை இச்செப்பேடு கூறுகிறது. செப்பேட்டின் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி, சற்றேறக்குறைய கி.பி. 675 ஆகும்.

இச்செப்பேடு காஞ்சிபுரத்திற்கருகில் கூரம் என்ற ஊரில் கோயில் தர்மகர்த்தாவிடம் இருந்து வாங்கப்பட்டது. இப்பொழுது சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

இச்செப்பேடும் சம்ஸ்கிருதத்திலும், தமிழிலுமாக இரு பகுதியாக உள்ளது. சம்ஸ்கிருதப் பகுதியில் பல்லவர்களுடைய வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. முதல் நரசிம்மவர்மனைப் பற்றி இச்செப்பேடு "சோழர், சேரர், களப்பிரர், பாண்டியர்களை நரசிம்மன் மீண்டும் மீண்டும் முறியடித்தான். சாளுக்கியன் இரண்டாம் புலிகேசியைப் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். வாதாபி நகரை அழித்தான்" என்று கூறுகிறது. பரமேச்வரவர்மன் சாளுக்கியன் முதலாம் விக்ரமாதித்தனைத் தோற்கடித்துத் துரத்தியதைச் சம்ஸ்கிருதப் பகுதி மிக அழகாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கிறது. அப்போரின் முடிவில் விக்ரமாதித்தன் ஒரு கந்தையால் தன் மானத்தை மறைத்துக் கொண்டு ஓடினான் என்று கூறுகிறது. தானம் கொடுக்கப்பட்ட செய்தி மிகவும் சுருக்கமாகவே சம்ஸ்கிருதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதி கொடுக்கப்பட்ட தானத்தை மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் கூறுகிறது. தமிழ்ப் பகுதி மட்டும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

பல்லவ பரமேச்சுரனுக்குக் கீழ்ப்படிந்த வித்யாவினீத பல்லவரசன் என்ற ஒரு சிற்றரசன் பணம் கொடுத்து நிலம் வாங்கிக் கூரம் என்ற ஊரில் ஒரு சிவாலயம் எடுப்பித்தான். அக்கோயிலுக்கு "விச்சாவினீத பல்லவ பரமேச்சுரம்" என்று பெயர். ஊரில் ஒரு மண்டபமும் கட்டுவித்தான் அம்மண்டபத்தில் பாரதம் வாசிக்கப்பட்டது.

கோயிலிலே வழிபாடு செய்வதற்கும், அவ்வப்போது திருப்பணிகள் செய்வதற்கும் வழிபாடு செய்வார் வாழ்விற்கும், வேதம் ஓதுவதற்கும் நிலம் கொடுக்கப்பட்டதை இச்செப்பேடு கூறுகிறது. கோயிலுக்கு அருகில் ஒரு ஏரி தோண்டப்பட்டது. இவ்வேரிக்குப் 'பரமேச்சுர தடாகம்' என்று பெயர். இதற்கு நீர் கொண்டு வர பாலாற்றிலிருந்து ஒரு கால்வாய் தோண்டப்பட்டது. அதற்குப் 'பெரும்பிடுகுகால்' என்று பெயர். இச்செப்பேட்டில் 1200 குழி கொண்டது ஒரு பட்டி என்று குறிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த சில வரிகள் இச்செப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன அவை மனை, மனைப்படப்பு, ஊராட்சி, செக்கு, தறி, கூலம், தரகு, கத்திக்காணம் முதலியன. கொடுக்கப்பட்ட நிலம் 25 பங்குகளாகப் பிரிக்கப்பட்டன. அரசனுக்குச் சேரவேண்டிய மேற்குறிக்கபட்ட அனைத்து வரிகளும் இந்த 25 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அவரவர் பெறும்படி ஆணையிடப்பட்டது. இச்செப்பேட்டில் இப்பகுதியில் வழக்கிலிருந்த சில வழக்குச் சொற்களைக் காண்கிறோம். அயிந்தே, செயிவார், செயிவதற்கு, என வழங்கப்பட்டுள்ளது காணலாம். பங்கு ஆயிற்று என்பது "பங்காயி" எனக் குறிக்கப்பட்டுள்ளது. கொடுத்தது என்பது 'கொடுத்துது' என வந்துள்ளதும் காணலாம்.

சம்ஸ்கிருதப் பகுதியிலிருந்து விச்சாவினீத பல்லவரசன் வேண்டிக் கொள்ள, பல்லவ அரசன் பரமேச்வரவர்மன் இவ்வாணை பிறப்பித்தான் என்று அறிகிறோம். கூரம் ஊரில் அப்பொழுது எடுக்கப்பட்ட கோயிலின் ஒருபகுதி இன்றும் எஞ்சியுள்ளது. பரமேச்சுர தடாகம் என்ற ஏரியையும், பாலாற்றிலிருந்து இதற்கு நீர் கொண்டு வரும் கால்வாயையும் இன்றும் காணலாம்.

3. பாண்டியன் பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேடுகள்

ஓங்குதிரை வியன்பரப்பில் *உஜயி*[1] ஆலயமாகத் தேங்கமழ் மலர் நெடுங்கட்டிசை மகளிர் மெய்காப்ப விண்ணென் பெயரெய்திய மேகஞாலி விதானத்தின் றண்ணிழற் கீழ் *ஸஹஸ்ரஹணஉணி*[2] கிரணம் விளக்கிமைப்ப *ஃஜஂமஉவாரஸ்லுரஹோமி*[3] என்னும் பொங்கணை மீய்மிசைப் பயந்தரு தும்புரு நாரதர் பனுவனரப்பிசை செவி உறப் பூதல மகளொடு பூமகள் *வாஉஸ்லுபடு*[4]னை செய்யக் கண்படுத்த கார் வண்ணன் றின்படைமால் *ஸ்ரீஹவெதி*[5] ஆதி *வாரஷன்*[6] அமரநாயகன் அழகமை *நாஹிஉணு*[7]லத்துச் சோதி மரகத துளைத் தாட் சுடர்பொற்றாமரை மலர்மிசை விளைவுறு *கூஉகூணிப*[8] மென மிளர்ந்திலங்கு சடைமுடிஒடள வியன்ற *கூஉணூ*[9] வோடகூ்ஷ மாலைஒடு தோன்றின *வகஹஜந*[10] *வசுவடுகூந*[11] *வசுவேஉதி*[12] *வசுஓயாகூ்ஷந*[13] மதுக்கமழ் மலர்க்கமல யோனி மனந்தந்த மாமுனி *ஊதி*[14] அருமரபிற் பல காலந் தவஞ்செய்வுழி அவன் கண்ணி லிருள்பருகும் பெருஞ்சோதி *ஜஞஂகிரணங*[15] வெளிப்பட்டனன் மற்றவற்கு மகனாகிய மணிநீள்முடிப் புதனுக்கு கற்றைச் செங்கதிர் கடவுள் வழிவந்த கழல் வேந்தன் ஏந்தெழிற்றோள் இளனொரு நாளீசனது சாபமெய்தி பூந்தளவமணிமுறுவற் பொன்னாகிய பொன்வயிற்றுள் போர் வேந்தர் தலைபனிப்ப வந்து தோன்றிய *வாரஒர*[16] வர்ப்பின் பார்வேந்த ரேனைப் பலரும் பார்காவல் பூண்டு[ய்] த்தபின் திசை யானையின் குஂஹ[17] கூடத் துலவிய செழுமகரக் குலம் விசை ஒடு விண் மீ[ன்] னொடு போர்மிக்கெழுந்த கடற்றிரைகள் சென்று தன் சேவடிப்பணிய அன்று நின்ற ஒருவன் பின் விஞ்சத்தின் விஜஂஹணையும்[18] பெறல் *நஹீஷந* *உஷவிஓாவஸமும்*[19] வஞ்சத்தொழி

ல் வாதாவி சீராவியு *உஹோஉயி*களின்[20] சுருங்காத பெருந்தன்மையும் *ஷீகேகூவஸதை*[21] *ஷஞரெஷயு*[22] மொருங்கு முன்னாள் மடிவத்த சிறுமேனி

உயர்தவத்தோன் மடலவிழ் பூமலையத்து மாமுனி புரோசிதன்னாக கடல் கடைந்தமிர்து கொண்டுங் கயலினை வடவரைப் பொறித்தும் *ஹரிஹயந*[23] தாரம்பூண்டு மவன்முடிஒடு வளை உடைத்தும் விரிகடலை வேலின் மீட்டும் *ஷேவாஸுரஞ்*[24] செரு வென்றும் அகத்தியனோடு தமிழாய்ந்தும் மிகத்திறனுடைய வேந்தழித்து *நுபவஷநன்*[25] சார்பாகச் சந்து செய்து *நாகபுரஷூர்*[26] படை முழுதுங் களத்தவிய *ஹாரதத்துப்*[27] பகடோட்டியும் மடைமிகுவேல் வானரயூஜன்[28] *வஸுபாப*[29] மகல்வித்துஃ[30] *ஹரிபூநூன்ன*[31] கரழித்தவன் பரி*பூநும்*[32] பலகவர்ந்தும் நாற்கடலொரு பகலாடி நாற்கோடி பொன்னியதி நல்கி நூற் கடலைக் கரை கண்டு நோன் பகடாயிரம் வழங்கியும் உரம் போந்த திண்டோளரைசுகசுரம் போகித்துறக்க மெய்தியும் பொன்னிமையப் பொருப்பதனில் கன்னிமையிற் கயலெழுதியும் பாயல் மீமிசை நிமிர்ந்து பல்லுண்டி விருப்புற்றுங் காயல் பாய் கடல்போலக் குளம் பலவின் கரையுயரியும் மன்னெதிரா வகை வென்று தென்மதுராபுரஞ் செய்தும் அங்கதனி[ல்] லருந் தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும் ஆலங்கானத் தமர் வென்று ஞாலங்காவல் நன்கெய்தியும் கடிஞாறு கவினலங்கற் களப்பாழர் குலங்களைந்தும் முடி சூடிய முரண் மன்னர் ஏனைப் பலரு முன்னிகந்தபின் இடையாறையும் எழில் வெண்பைக்குடியிலும் வெல்கொடி எடுத்த குடைவேந்தன் றிருக்குலத்துக் கோமன்னர் பலர் கழிந்தபின் காடவனைக் கருவூரில் கால் கலங்கக்களிறுகைத்த கூடலர்கோன் *ஸ்ரீவராநகன்*[33] குரைகழற் கோச்சடையற்குச் சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் *ஸ்ரீவஜுஹன்*[34] வேய் போலுந் தோளியர்கேள் *விஷ்ணாயமரஹிரணாமஹபுநு*[35] குண்ணூரிலமர் வென்றுங் குரைகடலீழங் கொண்டும் விண்ணாள வில்லவற்கு விழிஞத்து விடை குடுத்தும் காடவனைக் கடலாணூர்ப் பீடழியப் பின்னின்றுங் குடகுட்டுவர் குண சோழர் தென் கூபகர் வடபுலவர் அடலழிந்து களஞ்சேர அமர்வல்லான் மகன் படத் தன் களிறொன்று வண்குடந்தைக் கதிகாட்டிய *ஃவீரபீலன்*[36] ஒளிறிலைவேல் *உபாயபஹலன்*[37] உம்பர்வான் உலகணைந்தபின்

மற்றதற்கு மகனாகிய கொற்றவனெங் கோ*வரகு*ணன்[38] பிள்ளை பிறைச் சடைக்கணிந்த பினாகபாணி எம்பெருமானை

உள்ளத்தினிதிருவி உலகங் காக்கின்ற நாளில் அரவரைசன் பல்லூழி ஆயிரமா யிருந்தலையால் பெரிதரிதின் பொறுக்கின்ற பெரும்பொறை மண்மகளைத் தன் தொடித்தோளில் லெளிது தாங்கிய தொண்டியர் கோன் துளக்கில்லி வடிப்படை மானா*ஹர*ணன்[39] திருமருகன் மயிலையர் கோன் பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தரு சிரி கண்டராசன் மத்தமாமலை வலவன் மணிமக ளக்கள நிம்மடி திரு வயிறு கருவுர்யித்த *ஸ்ரீவரராந்தகஉஹொ*ராஜன்[40] விரைபரித் தேர் வீரநாரணன் முன்பிறந்த வேல் வேந்தனைச் செந்தாமரை மலர்ப் பழனச் செந்நிலத்தைச் செருவென்றும் கொந்தார்பூம் பொழிற் குன்றையுங் குடகொங்கிலும் பொக்கரணியுந் தென்மாயலுஞ் செழுவெண்கையும் பராந்தகத்துஞ் சிலைச்செதிர்ந்த மன்மாயா மிகுத்தவர் *வஸ்து*"*வாஹநங்*[41] கொண்டும் ஆறு பல தலைகண்டும் அமராலையம் பல செய்துஞ் செறுபடுவியன் கழனித் தென்விழிஞ நகர்கொண்டுங் கொங்கினின்று தேனூரளருங் குடகொங்கருடல் மடிய வெங்கதிர்வேல் வலங்கொண்டும் வீரதுங்களைக் குசைகொண்டும் எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறந்த தேவதானமும் எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத் தியற்றுவித்தும் நின்றபெரும் புகழாலுந் நிதிவழங்கு கொடையாலும் வென்றிப் போர்த் திருவாலும் வெல்வேந்தரில் மேம்பட்ட கதிரார்கடுஞ் சுடரிலை வேல் கலிப்பகை கண்டரோள் கண்டன் *உவ*"*ரரய*"*ரவரஉவ்லுரநு*[42] *உாநிநிஉகூரகேூகநு*[43] தன் செங்கோல் யாண்டு நாற்பதின்மேல் மூன்றோடீர் யாண்டில் பொன் சிறுகாமணிமாடப் புரந்தரனது நகர் போன்ற களக்குடி நாடதனிற் படுங் களக்குடி வீற்றிருந்தருள ஆசிநா டதனிற்படும் பிர்மதேயம் கன்னிடக்கைத் தேசமலி திருமங்கலமிது பண்பெரு நல்லூர்ப் படுவதனைப் பாங்கமைந்த குடிகளது காராண்மை மோடெழுந்த முதுகொம்பரீக் கோடெழுந்து கிடந்ததனைக் கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக் களைகட்ட மற்றிரண்டோண் மாக்கடுங்கோன் மானன[ம] பேர்த்தளிய கோன் ஒன்றுமொழிந்திரண்டோம்பி ஒருமுத்தீயுள்பட்டு நன்று நான் மறை பேணி அய்வேளிவி* நலம் படுத்து அறுதொழிற்கள்**

---

* பெறுவதென்றும் என்று படிக்கவும்

** அய்வேள்வி என்று படிக்கவும்

மேம்பட்ட மறைஓத பந்நிருவர்க்குக் காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச் செப்பேடு செய்து குடுத்தருளினன் றேர்வேந்த நின் குல முத[ல்]வன் மைப்படுகண் மடமகளிர் மதவேள் மனு *ஸஉாநன்*[44] வழுவாத செங்கோ னடவி மண்மகட்கொரு கோவாகிக் கழுதூரில் *ஷிஜீ*[45] செய்த கடிக்கூடனகர் காவலன் சோமாசி குறுச்சியிது தொல்லை மேற்படி கிடந்ததனை *வேஉாவாநஉநோஸ்ஜூரா*கிய[46] *கூாஂகூவேஸ்ரஉயாஜி*யார்க்கு[47] *ஊகூஹோமு*[48] மதுவாக எழிற் செப்பேட்டோடு குடுத்தனன் ஆகிய இவ்வூரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில் இழந்து போயின வென்றும் ஏதமில் சோமாசி குறுச்சிச் செழுந்தகைய நிலத்துப்படும் நிலத்தைக் கடற்றிருக்கைய் கிழவன் மதிதரு பெருநான் கெல்லை இட்டுக் கொண்டு மற்றதனை *உய"ஙுதுர*[49] நல்லூரென்று பேரிட்டுக் குடிநிலனாகக் கொண்ட நில மதுவும் அவன்குடி நிலனாகைய் தவிர்ந்து கொண்டு சோமாசி குறிச்சி மேலை புரவேறப் பெறுதென்றும்* சொல்லிய வூரண்டுந் தம்மி வெல்லை கலந்து கிடக்கு மாதலில் ஒன்றாகவுடன் கூட்டிப் புரவெழுதிப் பிடி சூழ்ந்து நன்றாகிய *ஸாஸந*ஞ்[50] செய்து நன் சுருளவேண்டு மென்றும் வாச நாள் மலர் கமழ் பொழில்லாசி நாட்டுள *ஹஉா*கிய[51] கருவமைந்த கனகமாளிகைத் திருமங்கலநகர்த் தோன்றல் சோமாச்சி குறிச்சி என்னும் காமர்வண் பதி காவலன் வடிவமை வாந*மோத*த்து[52] *வௌயாயந*[53] கல்பத்துக் குடிவிளங்க வெளிப்பட்டு *ஸுண*[54] கணங்கட் கிடமாகி மறை நான்கின் றுறைபோகிய மாயானம்பி பட்டற்குச் சிறுவனாகிய பெருந்தகைஇன் திசைமுகன் வெளிப்பட்டனைஒன் *யஜுவஜ்ஷு*[55] *சுயஜு*கோ*வி*[56] மாயாநாராயண பட்டர் *உஹாவநீ*[57] வயிறுயிர்த்த சேயான திருத்தகைஇன்

நா*ரா*யணங்கே*ஸ*வன்[58] கல்விக்கடல் கரைகண்டும் *க்ஷிதி*யானு[59] மதமுணர்ந்து சொல்லித்தகந் தனதாக்கி *ஸுஜுஸீஞாசார*னாகி[60] மீனவன் வீரநாராணற்கு *விஸ்ராஸக*ஜுங்கட்கான[61] தன்மையனாதலில் லருளறிந்து விண்ணப்பஞ்** செய மதுர(தர) தரநல்லூரெனும் வளம்பதி

---

* அறுதொழில்கண் என்று படிக்கவும்

** விண்ணப்பஞ் செய என்று படிக்கவும்

சோமாசி குறுச்சி அதன்மேலை புரவேற்றி ஆங்கதுந் திருமங்கலமும் உடன்கூடப் பிடி சூழ்வித் துலகறியக் குடுத்தருளினன் வடங்கூடு முறைமகளிர் மனமதவேள் மனுசரி தன் ‖ உ மற்றிதனுக் காணத்தி வண்டமிழ்க் கோனதிகாரி பெற்றடம்பூண் மணிமார்பன் பொழிற் புல்லூரெழிற் ஊஷரன்[62] செய்யுந்து புனற் செறுவின் செங்கழு நீர் மல[ர்]படுகர் வைக்குந்த வளநாடன் வாதமோதூசமோமணி[63] ஹரி சரண கமல சேகரன் ஆயிரத்தஞ்நூற்றுவன் திருமகிழிளையானக்கன் திசை நிறை பெரும் புகழாளன் புவனதலம் புகழ நிதி அவனி ஸூர[64] குல திலகன் தாதலர் பூம்பொழிறழுவிச் சாலிவிளை வயவளத்தால் மேதகு புகழ் வேண்புஞாட்டு பெருந்த தூவெள்ளி எனப் பெயரிய திருந்துபதிக் குடித்தலைவன் தென்னவன் திருவருள் சூடிய பெருந்தூ வெள்ளி கிழவனாகிய பெருந்தகை சேந்தங் கிழவன் நலமணிசீர் நடுவுநிலை நன்கு நாயகனாகவும் அலர் கமழும் பொனலளற்று* நாட்டுக் ககரமாகிய முகிறோய் பொழில் முசுக் குறுச்சி முற்குடிப் பினோர் கார்முளைய் ** அகனிலத்தோர் புகழளற்று நாட்டுக்கோன் னருந் தமிழின் பாத்தொகு பொருள் பயனுணர்வோன் கொடை பயில் கற்பகசீலன் சாத்தம் படாரனெனப் பியரிய தக்கோன் மிக்கோங்கு கார் வயல் சூழ்களாத் திருகைப் பேரரண் சூழ் பெரும் காக்கூர்த்தலை ஆகிய குலக் குருசில் தகுதேய மாணிக்கம் கலைபயில் கிழவங்கோனும் கணக்கு நூல் பயில் கணக்கராகவும் மாசில்லான் குடித்தோன்றிய ஆசு நாட்டு நாட்டாரும் மச்சுறுவளமணவி வேந்தநேச்சுர நாட்டு நாட்டாரும் உடனாகி நின்றெல்லை காட்டப்பிடி சூழ்ந்த பெரு நான் கெல்லை ‖ உ கீழெல்லை புனல் புவனிபுத்தேள் மாருதம்கனல் இருசுடர் யஜமானன் ஆகிய திறல ஷூமதிஂ[65] அமரர்க்கு மறிவரிஒன் வேகவெள் விடை ஊர்தி விஷமோசதநு[66] மகுழ்ந்துறையும் *** வாழியவான் திருவிருப்

பூர் மூழி நின்று தென்கிழக்கு நோக்கிப் போயின வெள்ளாற்றுக்கும் ஆயின பெரு நல்லூர்ச் சிறைக்கும் வன்கள்ளி முரம் புக்கும் வண்ணத்தார்

* புனலளற்று என்று படிக்கவும்

** காண்முனை என்று படிக்கவும்

*** மகிழ்ந்துறையும் என்று படிக்கவும்

வளாகத்தின் நன்குயர் பரம்பீட்டுக்கும் நலமிகு கள்ளிக் குறுச்சி மேலைக் கள்ளி முரம்புக்கும் மேதகு நடையாட்டி குளத்தில் சால நீர்கோளுக்கும் இக்குளத்தின் தென் கொம்பின் மறுவாக்கும் பாங்கமைபடு பாறைக்கும் பயந்தருகுடி நடை ஏரி ஓங்கியவன் குளத்தகம் பால்லொழுகியவன் பெருப்புக்கும் இப்பெருப்பை ஊடறுத்துச் செப்படு* செழுங் கிழக்கு நோக்கி வாரிக் கொள்ளிக்கேய்போயின வழியதற்கும் வயல் மலிந்த வாரிக்கொள்ளிக் குளத்தி னீர்கோளுக்கும் அடிகுழிக்கும் மேக்கும் தென்னெல்லை திருமரு நிலப்பாறைக்கும் செஞ்சாலி விளைகழனி ஏரியநதை வடகடைக்கொம்பிற்கும் ஒழுகுகள்ளி முரம்புக்கும் நீருடை அளவைச் சுனைக்கும் ஊருடையான் குழித்தென்கடைக் கொம்புக்கும் நெடு மணிற் கற்றாழ்வுக்கும் நீர்மாற்றுத் திடலுக்கும் கடிகமழ் பூந்தார்க் கணத்தார் குழிக்கும் வடக்கு மேலெல்லை கூற்றன் குழி மீய் குழியேய் போயின படுகாலுக்கும் பொற்றருமாறாத்த மாணி[க்] குளத்துக் கரை பெருப்புக்கும் நாடறி நங்கையார் குழியின் மீய் குழியேய் காடனேரிக்கேய் போயின வழிக்கு மேதமில் லெறிச்சில் வழிக்கும் எழிலமை நேச்சுற நாட்டோலைக் குளத் தெல்லைக்கும் கிழக்குமன் வடவெல்லை வளமிக்க மருத வேலி இள நேச்சுறத் தெல்லைக்கும் வெள்ளாற்றுக்கும் தெற்கும் இ

வ்விசைத்த பெருநான் கெல்லை உண்ணில மொன்றொழியாமல் காராண்மை மீயாளசி உள்ளடங்கக் கண்டமைத்துச் சீர்சான்ற திசையனைத்தின்னெல்லை வாய்க்கன்னாட்டித் தருமங்களிரொன்று பயில் திருமங்கலத்துச் சவையார்க்கும் தொல்லை வண் சோமாசிக் குறுச்சி மல்லன் மாமறையோர்க்கும் *ஸ்டஹதேயஸ்ஹிதி*[67] வழாவகைய் *ஸ்டயி*[68] வியின் கண்ணிலை பெறுத்து *உடகபூ*[69] பராயணனாகிய *யஜாவதி*[70] கொடுத்தருளியபின் ஈண்டிய பெரும் புகழேடுறு *ஸாஜி*ஷேத்திரத்து[71] ஏத்தார் புகழ் ஏக *ஷஷிகாதூ*யன *ஷ*த்திரத்து[72] வரிவண்டு மது நுகர் பொழிற்சிரி *வஜூ*[73] மங்கலத்து செய்பரிய செழுஞ் செல்வத்துப் பம்பிரால் மேதக்ககலை பயில் *மணஷூாசிஹட*[74] ற்குற்ற பெருமாமதலை உலவு சீர்த்தியோ*மேஷூரஹட*ற்கு[75] விசிஷ்ணாகிய திருவடிச் சோமாசி யென்னுஞ் சீர் மறையோன் மகள் பயந்த திருமரு சீர்ச்சிரி *ஊயவஷ*[76] *ஸ்ரீஊயவ வரண பேவரன்*[77] வேஷவேஷாநங்களும்[78] விவி*யஸாஷூ*ரமும்[79]

---

* செப்பிடு என்று படிக்கவும்

தன்னொடு பிறரோதிக் கேட்டுணர் வெய்த உரைக்கு ஊசாயபுணாகி[80] பெருந்தகைய் பிரமதேய மிதற்கு வ்ருமஷி[81] செய்தோற்கு திருந்திய நன் பெருவளாலும் செழும் புனற் பருத்தி வயக்கலும் இவ்வயல்களிக் * கிணறிரண்டும் அக்கிணற்றால் விளை நிலனும் மற்றவ்வூர் மாசவைஓர்** பெற்ற பரிசேய் கொடுத்தபின் சீரிய செழும் பணி இதற்குச் செப்பேடு வாசகத்தை ஆரியம் விராய்த் தமிழ் தொடுத்த மதிஓற்கும் அது எழுதிய கற்பமைந்த கரதலத்துச் சிற்ப மாத்தாண்டற்[க்]கும் மண்ணெங்குந் நிறைந்தவான்

புகழ் கண்ணங்கீரன் வயக்கல் திருமிகு நற்சிறுக் குளவளால் மருவிய சோமாசி வயக்கல் லென்னும் வயல்களிற் கிணறுகள்ளொரு மூன்றும் எக்காலமும் மன்னுக் கிணற்றால் விளைவயலனைத்தும் இறையிலியாகவும், சொல்லிய இக்கிணறு மூன்றின்னிடைக் கிடந்த தொன்னில முழுவதும் இல்லவளாலதுவாகவும் எழின் மிக்க தோட்டமாகவும் வல்லெருமை வெருவு மீன்கள் விராலுகள் புனற்பதி இதனிற் கொல்லுரிமையிற் செம்பாகமும் ஊஹாலஸெஹ[82] குறிப்பேடு கொடுத்துப் பகல் செய்யும் பருதி ஞாயிறும் இரவுச் செய்யும் பனிமதிஉம் அகல் ஞாலமும் உளவளவும் செப்பேடு செய்து கொடுத்தருளினன் மணிநீழ்முடி* மன் பணிகழல் வஸுயாயிவெவாஸுஷேவநு[83] அணி நீள் வுயத்த ஹிதாஜீ[84] அசலாசலன் கூநவஜ்புநு[85] கொந்தலர் தார் கோச்சடையன் கூடர் கோன் குருசரிதன் செந்தமிழ்க்கோன் ஸ்ரீ நிகேதநு[86] ஸ்ரீ வ ரா நூ கூ ஹோ ரா ஜநு[87]॥உ வ்ருஷிமேஷகூதாணூஉ்ஸா ஹரண:கவி:[।] கூஒுாரமேராணிகாஃஸு: மிவவாஃஜாம்ஜா்மித:[88]॥உ தேர்மிகு மாக்கடற் றானைத் தென்னவர் கோன்றிருவருளாற் சீர்மிகு செப்பேட்டுக்குச் செந்தமிழ்ப் பாத்தொடை செய்தோன் கூஜுதமெனும்[89] பாழிக்கள் அவிர்சடை முடி அரன் வேண்ட நற் பரசு நிரிபுத்தவன்[90]ளிர் சடை மேலலங்கல் பெற்ற மாமுனி மநுவழி வந்தோன் பாமரு பண்டித ஊஸநு[91] பொன்வரன்றி மணிவரன்றி அகில்வரன்றிக் கரை பொரு .

---

* களிற் என்று படிக்ககவும்
** மாசபையோர் என்று படிக்கவும்
*** நீள்முடி என்று படிக்கவும்

புனற் றென்வைய்கை வளநாடன் செழுங் குண்டூர் நகர்த் தோன்றல் பாண்டித் தமிழாபரண னென்னும் பல சிறப்பும் பெயரெய்திய பாண்டிமாராயப் பெருங்கொல்லனாகிய சிரீவல்லவன்||உ தென்னவர்தந் திரலாணைச் சிலைஓடு புலிகயலிணைமன் பொன்னிமையச் சிமையத்து விறற் கருவிஇறபோக்குந் தொழில் செய்து வந்தவர்பின்னோன் செயல்பல பயின்றோர் முன்னோன் திருமலி *ஶாவுந*[92] மிதற்குச் செழுந்தமிழ் பாடினோன் தாதை நிருபசேகரப் பெருங் கொல்லன் நிறை புகழ் நக்கனெழுத் திவை ||உ

---

1. உததி
2. சகஸ்ரபணமணி
3. புஜங்கம புரஸ்ஸரபோகி
4. பாதஸ்பர்சனை
5. சிரிபூபதி
6. புருஷன்
7. நாபிமண்டலத்து
8. கள்மகணிச
9. கமண்டலு
10. சதுர்புஜன்
11. சதுர்வக்த்ரன்
12. சதுர்வேதி
13. சதுர்த்வயாக்ஷன்
14. அத்ரி
15. இந்துகிரணன்
16. புரூர
17. கும்ப
18. விஜம்பணையும்
19. நகுஷன் மதவிலாசமும்
20. மகோததிகளின்
21. ககேதுசுதை
22. சுந்தரதையு
23. ஹரிஹயந
24. தேவாசுர
25. தசவதனன்
26. ஞ்தார்த்தரர்ஷ்ட்ரன்
27. பாரதத்து
28. வானரத்வஜன்
29. வசுசாப
30. மகல்வித்தும்
31. ஹரிச்சந்திரன்
32. பரிச்சந்தம்
33. சிரிபராந்தகன்
34. சிரிவல்லபன்
35. வித்யாதர ஹிரண்ய கர்ப்பன்
36. சுதிகாட்டியம்புரசீலன்
37. உபாயபகுலன்
38. கோவரகுணன்
39. மானாபரணன்
40. ஸ்ரீபராந்தக மகாராஜன்
41. வஸ்துவாகனங்
42. மதுராபுரபரமேசுவரன்
43. மாநிதி மகரகேதநன்
44. சமாநன்
45. சித்தி
46. சோமபாந்மனோசுத்தராகிய
47. காடகஸ்ஸோமயாஜியார்க்கு
48. ஏகபோக
49. மதுரதர
50. சாசனஞ்
51. க்ரமாகிய
52. வாநகோத்ரத்து
53. பௌதாயன கல்பத்து
54. குண
55. தர்ம்ம வஸ்தலன்
56. அதர்மகோபி
57. மகாபந்தி
58. நாராணங்கேசவன்
59. க்ஷத்திரியானு
60. சுத்த சீலா சாரனாகி
61. விசுவாச தர்மங்கட்கான
62. முசுரன்
63. வாத்சகோத்ர சூடாமணி
64. அவனிசுர குலதிலமன்
65. திறலஷ்டமூர்த்தி
66. விஷமலோசனன்
67. பிரமகேயஸ்திதி
68. ப்ருதிவியின்

69. பெறுத்துர்ம்மகர்ம
70. தராபதி
71. சாண்டில்ய கோத்திரத்து
72. ஏகசந்திகாத்தியாயன சூத்திரத்து
73. வல்லப
74. கணசுவாமிபட்ட
75. யோகேசுவரப்பட்டா
76. மாதவன்
77. சிரிமாதவ சாணேசேகரன்
78. வேத வேதாந்தங்களும்
79. விவித சாத்திரமும்
80. உரைக்குமாசார்யனாகி
81. ப்ரசஸ்தி
82. மகாசபை
83. வசுதாதிப வாசுதேவன்
84. ஹிதாக்னி
85. அநவர்ஜ்யன்
86. கிரிநிகேதஞ்
87. சிரிபராந்தக மகாராஜன்
88. ப்ரசஸ்திசேஷக்ருத்பாண்டிய த்ரமிளாபரண கவி: கர்மாரச்ரேணி காமுக்ய: சிவபாதாம் புஜாச்ரித:
89. அத்புதமெனும்
90. நிர்மி
91. பண்டிததாசன்
92. திருமலிசாசன

விளக்க உரை :

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டித் தாலுகாவிலுள்ள தளவாய்புரம் என்னும் கிராமத்தின் புறவெளியிலிருந்து இச்செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டன. இச்செப்பேட்டிலும் வழக்கம் போலவே இரு பகுதிகள் உள்ளன. முதலாவது சம்ஸ்கிருதப் பகுதியும் இரண்டாவது தமிழ்ப் பகுதியுமாகும். சம்ஸ்கிருதப் பகுதி கிரந்த எழுத்திலும் தமிழ்ப் பகுதி வட்டெழுத்திலும் எழுதப்பெற்றுள்ளது. சம்ஸ்கிருதப் பகுதியில் சில இடங்களில் தமிழ்ச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அவை கிரந்த எழுத்தில் எழுதாமல் வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

இச்செப்பேடு பாண்டிய மன்னன் பராந்தக வீரநாராயணனின் நாற்பத்தைந்தாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டதாகும்.

முன்னாளிலே கடுங்கோன் என்னும் அரசன், ஆசி நாட்டில் அடங்கிய ஸ்ரீ மங்கலம் என்ற ஊரைப் பிராமணர் பன்னிருவர்க்குத் தானமாக வழங்கியிருந்தான். மற்றொரு ஊரான சோமாசிகுறிச்சி என்பது காடகசோமயாஜியாருக்குக் கழுதூரில் உயிர் நீத்த (பாண்டிய) அரசன் ஒருவனால் வழங்கப்பட்டது. அவ்விரு ஊர்களின் எல்லைகளும் திரிந்து மாறுபட்டுக் கிடந்தன. அவ்விரண்டு ஊர்களையும் ஒன்றாக்கிப் பிராமணருக்குத் தானம் செய்ய வேண்டுமென்று அரசனிடம் (வீர நாராயணனிடம்) சோமாசிக்குறிச்சியைச் சேர்ந்த கேசவன் வேண்டிக் கொள்ள மன்னனும் அவ்வாறே செப்பேடு வழங்கிக் கொடை அளித்தான் என்பதைக் குறிக்கிறது. இக்கொடை விவரத்தைக் குறிக்க வருகையில் பாண்டிய மன்னனின் முன்னோர்களைப் பற்றிய பட்டியலும் அவர்கள் ஆற்றிய வீரமிக்க செயல்களும் சம்ஸ்கிருதம், தமிழ்ப் பகுதிகளில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வீரச் செயல்களில் சில:

1. கடலைக் கடைந்து அமிர்தம் கொண்டது

2. வேல் எறிந்து கடலை மீளச் செய்தது
3. அகத்திய முனிவருடன் தமிழ் ஆய்ந்தது
4. நாற் கடலின் நீரை ஒரே பகலில் நீராடியது
5. தென் மதுராபுரியை நிர்மாணித்தது
6. அங்கே சங்கம் நிறுவித் தமிழை வளர்த்தது.

இச்செப்பேட்டின் தமிழ்ப் பகுதி 'ஓங்கு திரை வியன் பரப்பில்' என்று தொடங்குகிறது. இத்தொடக்க வரி பத்துப் பாட்டிலே ஆறாவதான மதுரைக் காஞ்சியின் தொடக்கமாக இருப்பது கண்டு இன்புறத்தக்கது.

பராந்தக வீரநாராயணனின் தமையனாக வரகுணன் குறிக்கப்படுகிறான். இவனைப் 'பிள்ளை பிறைச்சடைக்கணிந்த பிணாகபாணி எம்பெருமானை உள்ளத்திலினிதிருவி உலகங்காக்கின்ற நாளில்' என்று செப்பேடு கூறுகிறது. மாணிக்கவாசகர் காலத்தில் ஒரு வரகுணபாண்டியன் இருந்ததாகவும் அவனிடத்தில் மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்ததாகவும் அறிகிறோம். அந்த வரகுணபாண்டியன் சைவ சமயப் பற்று மிகுந்தவன் என்று கூறப்படுகிறது. இச்செப்பேட்டை வழங்கிய வரகுண பாண்டியனும், சிவபெருமானை எப்பொழுதும் உள்ளத்தில் வைத்து வழிபாடு செய்பவன் என்று வருகிற காரணத்தால் இந்த வரகுணன்தான் மாணிக்கவாசகர் காலத்தில் இருந்த வரகுணனாவான் என்று சிலர் கருதுகின்றனர். அவ்வாறெனில் மாணிக்கவாசகர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகும்.

பராந்தக வீரநாராயணனின் தாய் பொத்தப்பிச் சோழகுலத்துச் சோழனான ஸ்ரீ கண்டன மகள் அக்கள நிம்மடி என்று செப்பேடு கூறுகிறது. இந்த சாசனத்தில் பொத்தப்பிக் குலத்தைப் பற்றிக் கூறுவதால் அக்குலம் நீண்ட காலத்துக்கு முன்னதாகவே தோன்றியிருத்தல் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. இச்சோழர்கள் மயிலாப்பூரைத் தலைநகராகக் கொண்டிருந்தார்கள் என்பது கவனிக்கத் தக்கது.

இச்செப்பேட்டின் பிரசஸ்தியைப் பாடியவன் ஸ்ரீ வல்லப மங்கலத்தைச் சார்ந்தவனும் கணசுவாமி பட்டன் மகனும் யோகேச்வர பட்டன் தம்பியுமான ஸ்ரீ மாதவன் ஆவான். தமிழ்ப் பகுதியை இயற்றியவன் கருமார சிரேணியின் தலைவனும் பாண்டிய திரமிளாபரணன் என்னும் கவியும் ஆவன். அதைச் செப்பேட்டில் எழுதியவன் நிருபசேகரப் பெருங்கொல்லன் ஆயின நக்கன் என்று குறிக்கப்பட்டுள்ளது. கருமார குலத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழ் ஆய்வில் சிறந்து, பாண்டிய மன்னனின் அவையில் உயர்ந்த இடத்தில் இருந்தார் என்று அறியும்போது பாண்டி நாட்டில் நிலவிய சமுதாய முன்னேற்றம் தெளிவாகிறது.

4. வீரபாண்டியனின் சிவகாசிச் செப்பேடுகள்

12/60.1

தமிழ்ப் பகுதி

சந்திரனது வழித்தோன்றி இத்தரா மண்டல முழுதாண்டு பண்டிந்திரன் முடி வளையுடைய்த்து மிகையத்துக் கயலெழுதியும் ஆனையாயிர மைய்யமிட்டு மகத்தியனொடு தமிழ் தெரிஞ்சும் வானவர்க்குத் தூது சென்று மால்கடலின் வரவு மாற்றியு மீண்டிய வக்கடல் கடைந்து மின்னன பலதிறல் செய்த *வாணூவுரமேஸ்ர*[1] ராள் பரம்பரையிந் வந்து தோன்றினன் மன்னவர் கோன் இராசமல்லன் மணிமுடி மானாபரணன் றென்னவர்கோன் மற்றவற்குச் சேரலன்றன் மடப்பாவை சீர்திகழு மணிபயிலிச் செழுநிலந் தொழ வெளிப்பட்ட *வீரகேரளநு*[2] *வீரவாணூநு*[3] *விநெபகுஷுகூநு*[4] *விமாஉஶீஞநு*[5] றன்னுடைய குலம் விளங்க தண்டெய தமிழ்க்கூடலில் மன்னிய மணிமுடி கவித்து *உஹாஹிஷேகூ*[6] மகிழ்ந்த நாளில் மேதகு *மாவுநஸ்ரோ*[7] கம் விதி கிடந்தவா செய்யவல்ல *ஹூமாற*[8] மத்திவன்னது தண்பூம்பொருநம் புடைவர்க்குஞ் சீர்திகள் தரு முள்ளிநாட்டுத் தென் வீரதரமங்கலத் தேர்திகழும் பெருந்தன்மை *ரயிதரமோத*[9]த்தி லளப்பரிய பேரொழுக்கத் *தாஸ்ராஷயகூவஅஜூ*[10]த்து விளக்கமுற வந்து தோன்றி *விடூ*ர்[11]க் கோர் விளக்காயின ஒரு தன்மை இருபிறப்பில் முச்செந்தீ நால் வேதத் தருமரபி லைய் வேள்வியாறங்கத் தந்தணாளன் கோவிந்த *ஸ்ரீமஹ்டூச்*[12] சோமாசி தன் குலவரவில் *வாஸுதேவ*[13] பீராம்பர ப[ட்]டனென்ற மறை வாழ்நனை மதித்தருளி நீய் செய்கென மற்றவனு மனமகிழ்ந்து விதித்தமைத்த *சுநுஷ*[14]ப்பின் விழுப்ப நோக்கி மி மகுந்து* தனக்கிரண்டா மாண்டி னதிரா மாண்டி** லண்டநாட்டு மின்னுகொடி நெடுமாடவீதி வீரபாண்டிய புரமான செல்லூரி லிருன்தருளி நலந்திகழ் மேல் வேம்ப நாட்டு நலபுரத்துக் கொப்பத்தில் கலந்த வாழை கோடுட்படக் காமருகோல் புறனாஞ்சிலாலிருபூ விளைவது நீர்நி

* மகிழ்ந்து என்று படிக்கவும்

** னெ திராமாண்டில் என்று படிக்கவும்

லன் மூவேலியுங் குடி இருக்க முருகூர் பொழில் புடைசுற்றிய முதுனிலத்தில் பத்து மாவு மற்றதற்கு *உகூஷிணெ*[15]யாக மன்னு *ஸாவ*[16]ன மங்கலமென வேற்றபேருடை ஏக*ஹோமஸ்ஹூ*ஷே[17] யமாய்ப் பிடிசூழ்வித்து ஊராண்மையில் வே[றொ]ன்றாக்கி நாட்டாண்மையோடுடன் கூட்டிக் காராண்மையும் மீசாய்சியும்* முள்ளடங்க கல்ப்பமைய *ஸாவஙு*[16]மு மறையோலை[யு]ந் தனித்தனியேய் சமைப்பித்து *ஹூஷஙு*[8]ற்குக் குடுப்பித்தி[ப்] பூதலத்தென் புகழ் நிறு[த்]தென தெழிலெரும் போர்க் கூற்றத்திலிரணசிங்க மங்கலத்து செழுமலர்த் தென்னவன் *ஸ்ஹூஸ்ரீகூமமாஜ*[18]னாயின வனத்தன் விண்ணப்பமாகவும் மன்திர ஓலை** [நா]யகன் கணையர்பள்ளி மன்னின தென்னவன் உத்தர மந்திரி ஆயின இயக்கஞ்செல்வன் ஆணத்தி ஆகவும் ஏர் திகழு மதிள்க் கூடல் *ஙஜஸிஂஹ*[19] னென்னும் பியருடைச் சீர்திகள் தமிழப் பேரரையன் திருந்ததிகாரமாகவும் அணுக்கபிள்ளை தென் பருத்திக்குடி நாட்டுச் செழும்பொழில் சூழ் செந்நிலக்குடித் தன்குலத்தில் மேந்தோன்றிய சடையங்காளிஉம் மாசறுசீர் வெள்ளப்ப நாட்டு வடிநெடுவேல் கேசவங் கணவதியோடுடன் கெழு தகு கண்காணி ஆகவும் பூம்பொழில் புறத்தாய நாட்டு நற்றராயக்குடி மேம்படு சீர் அரையன் விரையாச்சிலைஉம் திருக்கானப்பேர் கூற்றத்துச் சிறு சேவூர்க் காடம்படாலகனும் சோழநாட்டு மாங்குடிச் சோலை கிழவனும் விக்கிரமகாம வளநாட்டு கண்ணனூர் இளவளம்புல்லனும் புரவுவரி ஆகவும் அனுத்தரப் பல்ல[வ] அரைசெனும் பியரியன்ற மாறஞ்சோலை மால்களிற்றின் நாசக***மினிதியற்ற

முள்ளிநாட்டு குளத்தூர் அரையன் திருச்சிராப்பள்ளி ஆணை ஒழுக்கவும் மேல் வேம்பநாட்டு நாட்டாரும் *ஸ்ஹூ*ஷேய[20]க்கிழவரும் நலபுரத்து ஊராரும் உடனின்று நிலம் அளந்து பிடி சூழ்ந்து கல்நாட்டி எல்லைதெரிச்ச பெருநான்கெல்லைக்குக் கீழ் எல்லை மாயன் பதக்கென்னுஞ் செய்யின் வடதலைத் துலாச்செய்க்கிறைக்குந் தேயாற் பண்ணையினின்றுந் தெற்கு நோக்கிச் செழுங்கழனி வாழை

---

* மீயாட்சியும் என்று படிக்கவும்

** மந்திர ஓலை என்று படிக்கவும்

*** நாயகம் என்று படிக்கவும்

கோட்டிதனுக்கேய் பாய்ந்த வாய்க்காலூடேய் போந்து சூழ்புனலணி கண்ணிற்காய் வடதலைத் துடவைகளுக் கிறைக்கப் பாய்கின்ற சிறுகாலின் ஊடுபோந்து கண்ணிற்காய் வடகீழ்த் தலைத் துடவைகளின் தென்வரவை நண்ணவந்து கிழக்கு நோக்கி நாட்டு பெருங்காலில் நின்று மேதகு பராங்குச மங்கலத்து மேல் எல்லையின் மேலருகேய் தாதமர்பொழில் வாழைகோட்டுப் பொழியுடேய் தண்பொரு [ந]ம் எய்த வந்து தெக்கு நோக்கிப் பா[ய்]ந்ததனுக்கியன்ற மேக்கும் செய்தமைத்து தென் எல்லை தண்பொருநல் வீற்றிருகழ வடக்கும் குடக்கெல்லை வன்னியோடு பொழியினின்றும் குனையாமல் வடக்கு னோக்கிக்களுச் செய் புகக் கல்லின் வாய்க்காலை ஊடறுத்து வடக்கு நோக்கி அங்குற நட்ட நடுகல்லின் மாடு நின்று கிழக்கு நோக்கி வண்கணத்தா மங்கலமுடையான் வயக்கின நெடுங்கண் டுவலின் மத்திமமேய் கிழக்கு நோக்கி நயக்க வந்து வாழை கோட்டின் நாற்றங்கால் புகப்பாய்[ந்]த புறக்காலை நணுகவந்து கருங்குடிப் பொழியினின்றும் (. .) வேற்சாத்தன் பதக்கென்னுஞ்செய் புகப்பா[ய்]ந்த காலை எய்த வந்தக் காலூடேய்

கிழக்கு நோக்கி இனிது போந்து நெய்தலம் பனைநாட்டுப் பெருங்காலில் நின்று நின்பரவைக் கடனடுவேய் சாத்தன் பதக்கெனுஞ் செய்புகத்தணந்தகாலின் செந்நடுவேய் வடக்கு நோக்கி வந்துமற்றிதினின்று திண்டிறல் விளங்குடையான் இட்ட மண் மதிளொரகு* போந் தெழினாட்டுப் பெருங்காலதனை ஒட்ட வந்ததன் கிழக்கும் மற்றதனுத்தரந்திசை ஓங் கெல்லை நாட்டுப் பெருங்காலினின்றுங் கிழக்குநோக்கி நலவர வெகடகிட்டம் படவணைக்கின்ற எழில் விளங்கு பேரணை உட்பட கௌகீள் பணையினின்றும் கிழக்கு நோக்கிந வாழை கோட்டுக்கேய் வந்து மாயான் பதகெ[க்]கென்னு மஞ்செய் வடதுலாச் செய்களுக்கினிதி [. . .] நம் எழிற்பண்ணையின் றெற்[க்]கும் மற்றிவை எல்லையாகத் தனி[. . .] [றைக்] கடன் ஈழக்கழஞ்சு ஈரேமுதான்பகுத்து உண்ணிலம் ஒழிவின்றி [. . .] கேழ்வி[ள**] ங்கச் செய்தனன்னார் மோயம்பில் *சுவஸ்திகாஞநேஸ்*[21] . . .

---

* மதிளருகு என்று படிக்கவும்

* ஞ என்று நிரப்பலாம்.

1 பாண்ட்ய பரமேச்வர
2 வீரகேரளன்
3 வீரபாண்ட்யன்
4 விநைய கஞ்சுகன்
5 விசாலசீலன்
6 மஹாபிஷேக
7 சாசன சுலோகம்
8 பூசுர
9 ராதிதரகோத்ர
10 தாச்வலாயக சூத்ர
11 விப்ரர்
12 சுவாமிபட்ட
13 வாசுதேவ
14 அநுஷ்டு
15 தக்ஷிணை
16 சாசன
17 ஏகபோகப்ரஹ்மதேய
18 ப்ரஹ்மஸ்ரீ துங்கராஜ
19 ராஜசிம்ஹ
20 ப்ரஹ்மதேய
21 அவநிகாந்தநே

விளக்க உரை :

திருநெல்வேலி மாவட்டம், சிவகாசியிலுள்ள ஒரகண்டே கனகைய நாயுடுவின் குடும்பத்தாரிடமிருந்து பெறப்பட்டவை இச்செப்பேடுகள் ஆகும். இச்செப்பேடு இப்பொழுது சென்னை அரசினர் அருங்காட்சி அகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இச்செப்பேட்டிலும் சம்ஸ்கிருதப் பகுதி, தமிழ்ப் பகுதி என இரு பகுதிகள் காணப்படுகின்றன. சம்ஸ்கிருதப் பகுதி கிரந்த எழுத்திலும் தமிழ்ப் பகுதி வட்டெழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் 3-ஆம் ஆட்சி ஆண்டில் இச்செப்பேடு வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வீரபாண்டியன் சோழ மன்னன் முதலாம் இராசாதிராசன் காலத்தில் ஆட்சி செய்தவன். சுமார் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முள்ளி நாட்டுத் தென்வீரதரமங்கலத்தைச் சேர்ந்தவனான வாசுதேவ பீதாம்பர பட்டன் என்ற கவிஞன் இயற்றிய செய்யுளைக் கேட்டு மகிழ்ந்து அவனுக்குக் கொடையாக நிலம் அளித்த செய்தியைத் தெரிவிக்கின்றன. கொடுக்கப்பட்ட கொடை ஏகபோகப் பிரமதேயமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏகபோகப் பிரமதேயம் என்பது கொடை பெறுபவன் தான் ஒருவனே ஆண்டு அனுபவிக்கக் கடவன் என்ற பொருளாகும். இப்பிரமதேயம் ஊராண்மையிலிருந்து நீக்கப்பட்டு நாட்டாண்மையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இக்கொடை எந்தெந்த அதிகாரிகளின் மேற்பார்வையில் அளிக்கப்பெற்றது என்ற விபரம் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. கொடை அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் தரப்பட்டுள்ளன. அவ்வாறு எல்லைகள் குறிப்பிடப்படும் போது சில ஊர்களின் பெயர்களும் ஆறுகளின் பெயர்களும் எல்லைகளாகக் காணப்படுகின்றன. பராங்குசமங்கலம் என்று ஒரு ஊரின் பெயர் காணப்படுகிறது. இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த அரிகேசரி பராங்குச

மாறவர்மனின் காலத்தில் ஏற்பட்ட ஊராக இருக்கலாம். தண்பொருநம் என்ற ஆறு குறிக்கப்படுகிறது. இது தண்பொருநைப் பேராறு என்று பிற்காலக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் தாமிரபரணி ஆகும். எல்லைக்கல் நடுகல் எனக் குறிக்கப்படுகிறது. கொடை அளிக்கப்பட்டதைக் கூறுமிடத்து சாஸனமும் அறையோலையும் தந்தான் என்று செப்பேடு கூறுகிறது. இங்கு சாஸனம் என்பது அரசனின் ஆணையை ஏற்று வெளியிடப்படும் திருமுகத்தையும், அறையோலையென்பது நாட்டார்கள் திருமுகத்தை வாங்கி நிலத்தின் எல்லையை வரையறுத்து எழுதிக் கொடுக்கும் ஓலையையும் குறிக்கும்.

இச்செப்பேட்டில் பிடியை யார் நடத்திச் சென்றது என்றும் அதை மேற்பார்வை புரிந்தவர் யார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது சிறப்பாகும். பிடியை நடத்திச் சென்றவன் அரையர் திருச்சிராப்பள்ளி என்றும் மேற்பார்வை புரிந்தவன் அனுத்தரப்பல்லவன் என்ற மாறஞ்சோலை என்றும் குறிக்கப்பட்டுள்ளனர்.

5. ஆய்குல மன்னன் கோ கருநந் தடக்கனின் பார்த்திவசேகரபுரச் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

ஸ்வஸ்திஸ்ரீ[1] கலியுகக்கோட்டு நாள் பதினான்கு நூறாயிரத்து நாற்பத்து ஒன்பதினாயிரத்து எண்பத்து ஏழு சென்ற நாள் *ஸ்வஸ்திஸ்ரீ* கோக் கருநந்தடக்கனுக்கு யாண்டு ஒன்பது நாள் பதினைஞ்சு இந்நாளால் முடால நாட்டுப் பசுங்குளத்துப் படுநிலத்தில் முன்சிறைச் சவையாருடைய உழக்குடிவிளை என்னு நிலம் இவகளுக்கு அடிக்கடி நிலங்குடுத்து மாறிக்கொண்டு இந்நிலம் பிடி சூழ்ந்து ஸ்ரீகோயில் எடுத்து *விஷ்ணுபட்டாரர்*[2]கரை *ப்ரதிஷ்டை*[3] செய்து *பார்த்திவசேகரபுரம்*[4] என்று பேர் இட்டு காந்தளூர் *மர்யாதி*[5]யால் தொண்ணூற்று ஐவர் சட்டர்க்கு சாலையுஞ் செய்தான் ஸ்ரீ கோக்கருநந்தடக்கன் அகநாழிகைச் சென்னடைக்கு அட்டின பூமி

பொழிசூழ் நாட்டு குராத்தூரில் இடைக் குராத்தூர் வயலுங் கரையும் உண்ணிலம் ஒழிவின்றி மேற்பாதி மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தான் செங்கழு நாட்டு ஐம்மாக் கொல்லை மேற்கொல்லை வயலுள் வெஞ்சைக் குளத்தின் கீழ் வெஞ்சைப் பொறை தடி ஒன்றும் சாயறைக் கலம்பாடு தடி மூன்றும் நெடு மட்குளத்தின் கீழ் நரியறை தடி ஒன்றும் கொற்றனறை தடி ஒன்றும் குளவறை தடி ஒன்றும் நீரறைதடி ஒன்றும் மாயிலறைதடி ஒன்றும் தலை விலைச்செய் தடி இரண்டும் எருமை யறை யுந் துடவர் இரண்டேற்றித் தடி மூன்றும் பகை தொங்கன் தடி ஒன்றும் ஏற்றித் தடி பதினைஞ்சு விதை மடைப்பள்ளி நாழியால் ஆயிரத்து இருநூற்று நாழியுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க உற அட்டிக் குடுத்தன வள்ளு*

---

* இதற்கும் அடுத்த ஏட்டின் தொடக்க வாசகத்துக்கும் தொடர்பு காணப்பட வில்லை. இடையில் ஒரு ஏடு இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

பணி குத்துக்காற் படாது செய்விப்பது அகநாழிகைப் பணி செய்வார் படாரரை ஆட்டப் பொழுதிற் பந்நிரு குடநீராக முப்பத்தறு குடநீர் குடுப்பது பூ இடுவான் குணந்த பூ இரண்டையு மாலையுங் கட்டிக் குறைவறக் குடுப்பது நொந்தா விளக்கினுக்காக மெதுகின் மேற்பாற் கீழூரில் நெடுமண்ணென்னுந் தோட்டம் தென்னாட்டுக் கோனாயின சடையந்தனிச் செய்கெ சந்ததி சந்ததியேய் கீழ்ப்பாதி அனுஹவிப்பதாகக் காராண்மையாகவு மேற்பாதி நந்தா விளக்கினுக்குமாக அட்டிக்குடுத்தான் விழாப்புறமாக ஏழு நாடிருவிழாச் செய்து பங்குனி வியாகம் ஆறாடுவதாகவும் சட்டப்பெருமக்களும் பணி மக்களும் ஏழு நாளும் படி இரட்டி ஆணியம் பெறுவதாகவு மற்றும் விழா வினுக்கு வேண்டுவதுக்குமாக அட்டின பூமி மெதுகின் மேற்பாற் கீழூர் பெருங்குளத்தின் கீழ் ஆதனறை இளவாதனறை தலைத்துடவை மஞ்சாடியறை பனையறை செத்தறை தடி இரண்டேற்றித் தடி ஏழு விதை எண்ணூற்று நாற்பதினாழி இவை தென்னாட்டுக் கோனாயின சடையந் தனிச்செய்கை சந்ததி சந்ததியேய் போகத்துக்கும் பொலிக்கும் ஆயவிக்கதிரேற்றி உடன்வாரம் நாற் கல

னேய் எண் குறுணி நெல்லுக் கொண்டு கீழ்பாதி காராண்மை யாக உழுது ஆலிலை வாரம் ஊட்டுவதாக மேற்பாதி திருவிழாப் புறமாக அட்டிக் குடுத்தன பணி மக்களுக்கு விருத்திக்காக அட்டின பூமி தெங்க நாட்டு விளப்பில் தலை விளப்பில் பதினாழிக் காலால் எண் கல வித்துப்பாடும் இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன இந்நாட்டேய் இளவேணாட்டு நல்லூர் பதினாழிக் காலால் எண் கல வித்துப் பாடும் இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன இந்நாட்டேய் இடைநீர்க்கால் பனையூரும் பியலாரும் பதினாழிக்காலால் எண்கல வித்துப் பாடும் இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன செங்கழுநாட்டுப் பாறையில் சய வஞ்சரனாயின சாத்தஞ் சடையன் கீழ்ப்பாதி சாலாபோக மருசாதியினால் * உழுதா

---

* மருசாதி என்ற சொல் மரியாதை என்பதன் திரிந்த உருவமாகும்

ல் காஞ்சிரங் குளத்தின் கீழ் கீழப் பொறை தடி ஒன்று விதை கலம் செங்கழு நாட்டுக் குன்றத்தூருடைய குமார சுவாமி பட்டன் முடால நாட்டுக் கீழ்குளத்து வயலுள் தான் பிரமதேயம் பெற்றுடைய நிலத்தில் அட்டின பூமி கடலங் குளத்தாலும் இலைஞ்சக் குளத்தாலும் நீர் பெறுவன எருவிச் செய்தடி ஏழு விதை பதினாழிக் காலால் இருகலம் ஓமாய னாட்டுச் சிறு மண்ணூர் இளையான் கண்டன் தாங்கள் கீழ்ப்பாதி உழுதூட்டுவதாக அட்டின பூமி சிறுமண்ணூர் பொன் னறைக்கலம் பாட்டு வயலுள் பொன்னறை தடி ஒன்று விதை கலனேய் தூணி ஏற்றிப் பணி மக்களுக்கு விருத்திக்காக அட்டி முதலாயின பூமி முப்பத்தெண்கலனே யிருகுறுணி இதனுள் சாந்தி செய்வானுக்கு விருத்திக்காக அடுத்த பூமி மீனச்சிச் சிறு குண்டூர்ரா** குளத்தின் கீழ் குருந்தறை பரனியறை பலா வனறைக் கலம்பா

டு புளியறைக் கலம்பாடு . . யறைக் கலம்பாடு ஊற்றுத்தடி ஆயினியறை ஏற்றி தடி பத்து விதை . . . . முப்பத் . . . . ட்டுக்கசிர . . . பன்னிரு குறுணியும் சிறு கொல் கீழ்ப்பொறை விதை கலமும் ஏற்றி ஐங்கலனேய் பந்நிரு குறுணிப்பாடும் குடுத்தன அக நாழிப்பணி நாலுக்குமாக ஈயானஞ்சுவானுக்குங் குமரங் கண்டனுக்கும் உருத்திர . . . . எண்கல விதைப்பாடும் இதனோடு செல்லுங் கரையும் அட்டிக் குடுத்தது. வஜ்ஞகாவநந்* தெளிப்பானுக்கு தெதி கீழ் குளத்து எருவிச்செய் தடி ஏழு விதை இருகலமும் அடுத்தன பூ இடுவான் ஒருவனுக்கு விருத்தி அரு முனை ஆதனூர் வயலுள் படைப்பறை மருணறை மாத்தூர் வயலுள் பராயறையிற் கிழக்கின் கூறும் ஏற்றி விதை இரு கலமும் அடுத்தன தட்டழி மத்தளி கரடிகை தாளங் காகளம் ஏற்றி எட்டுப் பணி

மாய நாட்டாரும் செங்கழு நாட்டாரும் முடால நாட்டாரும் படைப்பா நாட்டாரும் வள்ளுவ நாட்டாரும் அற மருசாதி காக்கும் பரிசினாற் காப்பது இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார்

---

* குண்டூரார் என்று இருக்கலாம்

** பஞ்சகவ்ய என்று படிக்கவும்

உடைய கலம் நாற்பத்தைந்து தயித்திரியச் சரணத்தார் உடைய கல முப்பத்தாறு தலவகார சரணத்தார் உடைய கலம் பதினாலு இனி வருங்கல மூன்று சரணத்தார்க்கும் ஒப்பது வ்யாவேமாகஞ்[6] செய்யும் பரிசு வையாகரண மீமாயப் புரோஹிதப் புன்பாய் புவிஸ்ரீம் இலன் த்ரை_ராஜ்யவ்யவஹாரத்துக்கு[7] வேண்டும் ஒத்துடையன் இது ஸபூம்[8] என்று ஐவர் சட்டரைக் கொண்டு பஞ்சக்கஞ் செய்தான் புகவு பெறுவான் வாரம் ஓதும் பரிசு சூத்திரத்திலுஞ் சூத்திராணத்தி

லுந் துருச் சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு கிரம வாரம் அடுத்தோதுவது சாகையிலுங் கற்பத்திலுங் கணத்திலுந் துருச் சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு வாரம் அடுத்தோதுவது நாலு பாதத்திலுந் துருச் சொல்லி ஒன்பது புகவினில் அகத்தூஹத்தில் இரண்டு வாரம் அடுத்தோதுவது முக்கால் வட்டத்து வைத்து ஒரு சட்டனை ஒரு சட்டன் பிழைக்கப் பேசு வானாயில் பெருமக்களுக்கு அஞ்சு காணம் பொன்றண்டம் இட்டுச் சாலை உண்பது குட்டுவானாயில் ஒரு காசு தண்டம் இட்டு சாலை உண்பது குட்டுண்டானும் அஞ்சு காணம் பொன்றண்டம் இட்டு சாலை உண்பது படைக் கலத்தால் புண் செய்தான் அறத்துக்குப் புறத்தனாவது சட்டர் படைக்கலம் பிடித்துக்குட்டத்துக்கு* செல்லப் பெறார் சட்ட

. . . . யிலகப்பட்ட எச் சூது முக்கால் வட்டத்திருந்து பொரப் பெறார் பொருவார் அற்றைக் கலம் இழப்பது சட்டர் வெள்ளாட்டிகளை மடத்தில் வைத்துக் கொள்ளப் பெறார் சாலா போகமுந் தேவதானமும் சத்திமுகம் இன்றி விலக்கப் பெறார் விலக்குவார் மெய் வேற்றுவகை ஐங்கழைந்து பொன் தண்டம் இட்டன்றிச் சாலை உண்ணப் பெறார் சாலா போகத்திலுந் தேவதானத்திலுங் குடியை வலியக் கொண்ட முதல் ஒன்றுக்குப் பத்தாகக் குடுப்பது சவைக்கடமை கடவார் பக்கல்

---

* கூட்டத்துக்கு என்று படிக்கவும்

மூன்று சரணத்திலு மூவர் சென்று புக்கது பாடாவது பாடு போகில் ஐம்பத்து நாலு காணம் பொன் தண்டமும் பட்டு கடமையுங் குடுப்பது தேவர் சென்னடையும் பதினாழிச் சாலையும் எவ்வழக்கு சொல்லியும் விலக்கப் பெறார் விலக்குவார் நியதி கழஞ்சு பொன் தண்டம் இட்டன்றிச் சாலை உண்ணப்பெறார்[9] பணிமக்கள் சட்டரைப் பிழைக்கப் பேசுவார் ஒரு காசு தண்டப்படுவது இப்பரிசு தெங்க நாட்டு வெண்ணீர் வெள்ளாளன் தெங்க நாடு கிழவ

னாயின சாத்த முருகன் ஆணத்தியாக ஓமாய னாட்டுப் பாகோட்டு பாப்பிகைகோட்டு திரையன் ஓமாய னாடு கிழவனாயின சிங்கங்குன்றப் போழன் எடுத்து[10] *ஸ்வஸ்திஸ்ரீ*[॥]

---

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 விஷ்ணுபட்டாரகரை
3 ப்ரதிஷ்டை
4 பார்திவசேகரபுரம்
5 மர்யாதி
6 ப்ரவேசகந்
7 த்ரைராஜ்யவ்யவகாரத்துக்கு
8 சத்யம்
9 உண்ணப்பெறார்
10 எழுத்து

விளக்க உரை :

வேணாட்டை ஆண்ட ஆய்குல மன்னன் கோக்கருநந்தடக்கன் என்ற மன்னன் அளித்த செப்பேடு இது. இது பார்த்திவசேகரபுரம் என்ற ஊரை மன்னன் ஏற்படுத்தியதைக் குறிக்கிறது. ஆதலின் இதைப் பார்த்திவசேகரபுரம் செப்பேடுகள் எனக் குறிப்பர்.

இச்செப்பேடு சில சிறப்புகளை உடையது. இச்செப்பேடு கலியுக ஆண்டில் குறிக்கப்பட்டுள்ளது. கலியுக ஆண்டும் நாட்களில் குறிக்கப்பட்டுள்ளது. 14,49,087-ஆம் நாள் என்று கூறுகிறது. நூறாயிரம் என்ற கணக்கு இருந்ததை இது காட்டுகிறது. இது கலி ஆண்டு 3967, ஆடி மாதம் 15-ஆம் தேதி ஆகும். சற்றேறக்குறைய கி.பி. 865 ஆகும்.

கருநந்தடக்கன் நிலம் கொடுத்து வேறு நிலங்களை மாற்றி வாங்கிக்கொண்டான். அங்கு திருமாலுக்கு ஒரு கோயில் எடுப்பித்தான். அக்கோயில் வழிபாட்டுக்கு வேண்டியவற்றிற்காக நிலம் வைத்தான். அங்கு ஒரு சாலையையும் நிறுவினான். அச்சாலையில் 95 சட்டர்கள் படிக்க வகை செய்தான். சட்டர்கள் என்றால் சாத்திரங்கள் படிப்பவர் எனப்பொருள். இச்சாலை காந்தளூரில் இருந்த சாலையைப் போலவே அமைக்கப்பட்டது. சட்டதிட்டங்கள் காந்தளூர்சாலையைப் போல் இருந்தன. இவ்வூருக்குப் பார்த்திவசேகரபுரம் என்று பெயரிட்டான். இதிலிருந்து இம்மன்னனுக்கு பார்த்திவசேகரன் என ஒரு பட்டம் இருந்தது என்று ஊகிக்கலாம்.

ஆய்குல மன்னர்கள் தங்களை ஆயர்கள் என்றும், கண்ணன் வழியில் வந்தவர்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர். கருநந்தடக்கன் என்பது இம்மன்னன் பெயர் என்று தெரிகிறது. கருநந்தடக்கன் என்னும் பெயரை ஆராய்ச்சியாளர் கருநந்தன் அடக்கன் எனப் பிரித்து இம்மன்னன் பெயர் 'அடக்கன்' என்றும், கருநந்தன் இவன் தந்தை என்றும் கூறுவர். கருநந் தடக்கன் என்பதே பொருந்தும் எனத் தோன்றுகிறது. இம்மன்னன் வெளியிட்ட திருப்பறப்புச்

செப்பேட்டை எழுதியவன் 'அவியலன்றடக்கன்' என்று குறிக்கப்படுகிறான். இது 'அவியலன் தடக்கன்' எனப் பிரிக்கப் படவேண்டும் என்பது தெளிவு. ஆதலின் தடக்கன் என்பதே பெயர் என்று கொள்ளலாம். கருநந் என்பது கருநந்தடக்கனின் தந்தை பெயர் போலும். இவன் சற்றேறக் குறைய பாண்டியன் வரகுணனின் சமகாலத்தவன்.

இச்செப்பேடு முழுமையாகக் கிடைக்கவில்லை. இடையிடையே ஏடுகள் இல்லை. வழிபாட்டிற்கு நீர் கொடுத்தல், பூமாலை கொடுத்தல், நொந்தாவிளக்கு எரித்தல், ஆண்டு தோறும் ஏழு நாள் திருவிழா எடுத்தல், பங்குனி விசாகம் ஆறாடுதல் முதலியன குறிக்கப்பட்டுள்ளன. வழிபாடு செய்வார் சாந்தி செய்வார் என்று குறிக்கப்படுகிறார். இன்றும் இப்பகுதியில் (திருவனந்தபுரம் பகுதியில்) வழிபாடு செய்வார் சாந்தி செய்வார் என அழைக்கப்படுகின்றனர். இச்செப்பேட்டின் மற்றொரு சிறப்பு சாலையில் எவ்வாறு படிக்க மாணாக்கர்கள் அனுமதிக்கப்பட்டனர்; அவர்கள் என்ன என்ன படித்தனர்; அவர்களுக்கு இருந்த கட்டுத்திட்டங்கள் என்ன முதலியன ஆகும். இங்கு வேதமும், வேதத்தை ஒட்டிய கலைகளும் கற்றுத்தரப்பட்டன. இவற்றில் இருக் (பவிஷ்ய சரணம்) வேதம் படிப்பார் 45, யஜுர் வேதம் (தைத்திரீய சரணத்தர்) பயில்வார் 36, சாம வேதம் (தலவகார சரணத்தர்) பயில்வார் 14, ஆக 95 பேர். இவர்கள் எவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பதற்கு "பிரவேசகஞ் செய்யும் பரிசு" என்று கூறப்பட்டுள்ளது. இங்கு சேர்பவனுக்குச் சொந்த நிலம் இருக்கக் கூடாது. இலக்கணம் (வையாகரணம்), மீமாயம் (மீமாம்சம் என்னும் சாத்திரம்), புரோஹிதம் (புரோசு எனப்படுவது) ஆகிய மூன்றிலும் தேவையான படிப்பு பெற்றிருக்க வேண்டும். த்ரைராஜ்ய வ்யவஹாரத்துக்கு வேண்டும் ஒத்துடையான் என்றால் இம்மூன்று சாத்திரங்களிலும் தேவையான சூத்ரங்களையும் ஓதி அறிந்தவன் (Basically Qualified) எனப் பொருள். இவன் இவை தனக்கு தெரியும் என அங்குப் படிக்கும் ஐந்து

மாணவர்களிடத்தில் சத்யம் செய்து கொடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்பவனே சேர்த்துக் கொள்ளப்படுவான் (புகவுபெறுவான்).

இச்சாலை நிலமில்லாத ஏழை மாணவர்களுக்கு அமைக்கப்பட்டது. இங்கு சேர கல்வித் தகுதிகள் வேண்டும். சேர்வதற்கு தேர்வைப் பிற மாணவர்களே நடத்துவர். மாணவர்களிடத்தில் சேரும் மாணவன் சத்யம் செய்து கொடுத்தால் போதும் என கல்விச்சாலையில் அன்று 'புகவு' முறை இருந்தது என அறிகிறோம். சாகை என்பது வேதங்களின் கிளைகள். கணம் என்றால் வேதம் சொல்லும் ஒரு முறை. துரு சொல்லுதல் என்றால் திரும்ப திரும்ப ஒரு குறிப்பிட்ட தடவை ஓதுதல். இதைத் 'திருவை' சொல்லுதல் என்றும் கூறுவர். அஹததூஷம் என்றால் நூல்களைப் பார்க்காமல் மனப் பாடமாகச் சொல்லுவது.

இச்சாலையில் படிக்கும் மாணவர்கள் ஒருவரோடோருவர் சண்டை போடக் கூடாது. குட்டிக் கொள்ளக் கூடாது. படைக்கலன் எடுத்துச் செல்லக் கூடாது. பணிப்பெண்டுகளை வைத்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்தால் தண்டனைகள் உண்டு. தேவதான நிலத்தையும், சாலை நிலத்தையும் உழுகின்ற குடிகளிடம் கட்டாயப் படுத்தி விளைவிகள் வாங்கக் கூடாது. வாங்கினால் ஒன்றுக்கு பத்து தண்டம் கொடுக்க வேண்டும். தவிர மாணவர்கள் ஊர்ச் சபை வேண்டும் போது ஊருக்குக் கட்டாயச் சேவை செய்தல் வேண்டும். செய்யாவிடில் தண்டிக்கப்படுவர். மாணவர்களுக்கு சாலையில் பணிபுரிபவர்கள் யாராவது பிழை புரிந்தால் அவர்களும் தண்டிக்கப்படுவர்.

இச்செப்பேட்டிலிருந்து அக்காலத்திய கல்விச்சாலைகளின் நிலை அறியலாம்.

6. முதலாம் இராஜராஜனின் பெரிய லெய்டன் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

ஸ்வஸ்திஶ்ரீ ॥உ கோனேரின்மை கொண்டான் *க்ஷத்ரியஶிகாமணி*[1] வளநாட்டு பட்டனக் கூற்றத்து நாட்டார்க்கும் *ப்ரஹ்ம*தேயக்கிழவர்க்கும்[2] தேவதானம் பள்ளிச்சந்தக் கணி முற்றூட்டு வெட்டப்பேற் றூர்களிலார்க்கும் நமக்கு யாண்டு இருபத்தொன்றாவது நாள் தொண்ணூற்றிரண்டினால் தஞ்சாவூர்ப்புறம்படி மாளிகை ராஜா*ஶ்ர*யநில்[3] தெற்க்கில் மண்டபத்து நாம் இருக்கக் கிடாரத்தரையன் சூளாமணி பந்மன்[4] *க்ஷத்ரியஶிகாமணி*[1] வளநாட்டுப் பட்டநக் கூற்றத்து நாகபட்டனத்து எடுப்பிக்கின்ற சூளாமணிபந்ம[4] விஹாரத்துப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்கு *க்ஷத்ரியஶிகாமணி* வளநாட்டுப் பட்டநக் கூற்றத்து ஆனைமங்கலம் பள்ளிச்சந்தம் இறங்கலுள்பட அளந்தபடி நீங்கல் நீக்கி நிலந் தொண்ணூற்றேழே யிரண்டு மா முக்காணி யாரைக்கா

ணி முந்திரிகைக் கீழ் மூன்று மா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே யிரண்டு மாவினால் இறை கட்டின காணிக்கடன் நெல்லு எண்ணாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து முக்கலனே இரு தூணிக் குறுணி ஒரு நாழியும் கடாரத்தரையன் *க்ஷத்ரியஶிகா*மணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து நாக பட்டனத் தெடுப்பிக்கின்ற சூளாமணிபந்ம[4] விஹாரத்துப் பள்ளிக்கு இறுப்பதாக யாண்டு இருபத்தொன்றாவது முதல் பள்ளிச்சந்த இறையிலியாக வரியிலிட்டுக் குடுக்க வென்று நாம் சொல்ல நம் ஓலை எழுதும் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தகரன் எழுத்தினாலும் நம் ஓலைநாயகன் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்த *சதுர்வேதி*மங்கலத்து *க்ருஷ்ண*ன்[5] இராமனான மும்முடி சோழ *ப்ரஹ்மமா*ராயனும்[6] நித்த

விநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையன் ஈராயிரவன் பல்லவயனான மும்முடி சோழ போசனும் அருமொழிதேவ வளநாட்டு நென்மலி நாட்டுப் பருத்திக் குடையான் வேளானுத்தம சோழநான மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பினாலும் புக்க நந்தீட்டின் படியே வரியிலிட்டுக் கொள்கவென்று நம் கருமமாராயும் ஆரூரன் அரவணையானான பராக்கிரம சோழ மூவேந்த வேளானும் அருங்குன்றமுடையான் மாப்பேரன் பொற்காரியும் நடுவிருக்கும் புள்ளமங்கலத்துப் பரமே*ஸ்ர*ரஹட்ட *ஸவகூதயாஜியும்*[7] கடலங்குடி தாமோதர ஹட்டனும் நம் கருமமாராயும் *க்ஷத்ரியசிகாமணி* வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக் கற்குடையான் பிசங்கன் பாளூரான மீனவன் மூவேந்த வேளானும் அருமொழிதேவ வளநாட்டு

ப் புறங்கரம்பை நாட்டு வங்க நகருடையான் சங்கர நாராயணனரங்கனும் நடுவிருக்கும் வெண்ணை நல்லூர்த் தம்மடி பட்டனும் பசலைத் தியம்பக பட்டனும் சொல்ல புரவுவரிக் கிளிநல்லூர் கிழவன் கொற்றன் பொற்காரியும் கழுமலமுடையான் சூற்றியன் தேவடியும் பழுவூருடையான் தேவன் சாத்தனும் கள்ளிகுடையான் அணையன் தளிக்குளவனும் வரிப்பொத்தகம் சாத்தனூருடையான் குமரனரங்கனும் பருத்தியூர்க்கிழவன் சிங்கன் வெண்காடனும் இருந்து யாண்டு இருபத்தொன்றாவது நாள் தொண்ணூற்றாறினால் பள்ளிச் சந்தம் இறையிலியாக வரி[யி]லிட்டுக் குடுத்த தங்கணாட்டுப் பட்டனக் கூற்றத்து ஆனைமங்கலம் அளந்தபடி நீங்கல் நீக்கி நிலன் தொண்ணூற்றேழேயிரண்டு மாக்காணி யரைக்காணி முந்திரி கைக் கீழ் மூன்று மா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே யிரண்டு மாவும் பிடி சூழ்ந்து பிடாகை நடப்பி[ப்]பதாகக் கண்காணி நடு

விருக்கும் வெண்ணை நல்லூர்த் தம்மடி ஹட்டனையும் பட்டன் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுத் திருநறையூர் நாட்டு ஸ்ரீ துங்க மங்கலமான *அபிமானபூஷணசதுர்வேதி* மங்கலத்துத[8] தூற்பில் *ஸ்ரீயர*ஹட்டனையும்[9] இன்னாட்டு வேளா நாட்டுத் திருநல்லூர் பார்க்குளத்துப் பற்பநாப ஹட்டனையும் இவ்வூர் பேரேமபுரத்து

வெண்ணெய் ஹட்டனையும் *ராஜேந்த்ரஸிம்ஹ*[10] வளநாட்டு கார் நாட்டுத் தனியூர் ஸ்ரீவீரநாராயண *சதுர்வேதி*மங்கலத்து[11] ஸபைதை கோமபுரத்து[12] *நக்ஷத்ரஹட்*டனையும்[13] புரவுவரி கள்ளிக்குடையான் அணையன் தளிக்குளவனையும் போர்த் தந்தோந் தாங்களும் இவர்களோடு நின்று எல்லை தெரித்துப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அறவோலை செ[ய்]து போத்தகவென்னும் வாசகத்தால் மந்திரவோலை விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தகரன் எழுத்தினாலும் மந்திர வோலை நா

யகன் *க்ருஷ்ண*ன்[14] இராமனான மும்மடி சோழ *ப்ரஹ்மமாரா*யனும்[15] அரைசூருடையானீராயிரவன் பல்லவயனான மும்மடி சோழ போசனும் பருத்திக்குடையான் வேளானுத்தம சோழநாந மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பிநாலும் திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமைபூண்[ட]மை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியு நுளம்ப பாடியுந் தடிகை பாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமுந்தி [ண்] டிறல் வென்றித் தண்டாற் கொண்டு தன்னெழில் வளர் ஊழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசு கொள்

ஸ்ரீ கோவி ராஜராஜகேஸ*ரிவர்ம*ரான[16] ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு இருபத்தொன்றாவது

நாட்டோமுக்குத் திருமுகம் வர நாட்டோமுந் திருமுகங்கண்டு எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேல் வைத்துப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து எல்லை தெரித்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்த நிலத்துக்குக்

கீழ்பாற்கெல்லை

கீழ்பாற்கெல்லை *க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துக் கோவூர் மேலெல்லை

கோவூர்த் தச்சனிலத்துக்கும் கோவூர்க் காவிதியோடைக்கு மேற்குந்

தெற்கின்னும் இவ்வூர்ப் புகையுண்ணி யென்னும் நிலத்துக்கு மேற்கும்

தெற்கின்னும் இவ்வெல்லையே கிழக்கு நோக்கிப் போய் இன் னிலத்துக்குத் தெற்கின்னும் புகை யுண்ணியென்னும் நிலத்துக்கு மேற்கும்

தெற்கின்னும் மேற்கின்னும் புகையுண்ணிக்குப் பாயும் வாய்க்காலின் மேலையரைக்காலில் நாற்றுக்காலாக அட்டிக்கிடந்த சிறுவரம்புக்கு வடக்கும்

இன்னும் இவ்வரைக் காலிலேய் மேற்கு நாற்றுக் காலாக அட்டிக் கிடந்த சிறுவரம்புக்கு மேற்க்கும்

இன்னும் இந்நாற்றுக் காலுக்கேய் தெற்கு வரம்பாக அட்டிக் கிடந்த வரம்புக்கு வடக்கும்

இன்னும் இவ்வரைக் காலின் மேல் வரம்புக்கு மேற்கும்

இன்னும் இவ்வரைக்காலின் தெற்கில்ப் புகையுண்ணியரைக் காலுக்கு மேற்கும்

இன்னும் இதன் தெற்கில் கோவூர்க் குசவ நிலன் ஒரு மாவரைக்கு மேற்கும்

இதன் தெற்கில் ஒரு மாவரைக்கு மேற்கும்

இதன் தெற்கில் ஓடையில் நடுவுக்குத் தெற்கும்

இன்னும் இக்கோவூர் எல்லைக்கு மேற்கும்

தெற்கின்னும் கோவூர் வெள்ளாளன் அரைசூர் மறியாடி ஒரு மாவுக்கு மேற்கும்

இதன் தெற்கில் ஓடை நடுவுக்குத் தெற்கும்

இவ்வோடையே தென் கிழக்கு நோக்கிப் போய் மேற்பள்ள வாய்க்கால் இவ்வோடைக்கேய் விழுந்த இடத்துக்கு மேற்கும் இன்னும் மேற்பள்ள வாய்க்காலின் தென்கரைக்குத் தெற்கும் கோவூர் மேல் பள்ளத்து மேல்வரம்புக்கு மேற்கும்

இவ்வூர் மேல் பள்ளத்து வெள்ளாளன் உறாட்பழிபாக்கரன் அரைக்காலில் வடவரம்புக்கு வடக்கு இவ்வரைக் காலின் மேலை ஓடையின் நடுவுக்கும் வெள்ளாளன் பரமேஸ்வரன்[17] நஸறூர் அரைக் காலுக்கு மேற்கும்

இவ்வோடையின் நடுவுக்கு மேற்கும்

கோவூர் வெள்ளாளனையாறன் சேந்தன் அரைக் காலின் கொத்தத்து இவ்வோடைக்கே மேற்கும்

இவ்வரைக்காலுக்குத் தெற்கும்

மேல் பள்ள நிலத்தின் கொத்தத்து இவ்வோடைக்கேய் மேற்கும்

இவ்வோடை எறிவட்டி வாய்க்காலுக்கேய் விழுந்த இடத்துக்கு மேற்கும்

இவ்வெறிவட்டி வாய்க்காலுக்கே மேற்கும்

இன்னும் இவ்வெறிவட்டி வாய்க்காலுக்கேய் தெற்கும்

இவ்வெறிவட்டி வாய்க்காலுக்கே மேற்கும்

தென்பாற்கெல்லை

தென்பாற்கெல்லை இவ்வெறிவட்டி வாய்க்காலுக்கு வடக்கும்

இவ்வெறி வட்டி வாய்க்காலே மேற்கு நோக்கிச் சென்று இவ்வாய்க் காலை யூடறுத்துத் தென் கரைக்கேயேறி தெற்கின்னும் இவ்வானை மங்கலத்து ஸ ஹஃேயத்துப்[18] படுகை வேலி நிலத்தின் மேலெல்லையே சென்று தென் மடலாய்க் கிடந்த ஓடைக்கு மேற்கும்

இவ்வெல்லையே தெற்கு நோக்கிச் சென்று மேற்கின்னும் இவ்வோடைக்கேய் வடக்கும்

இன்னும் இவ்வோடைக்கு வடக்கு நோக்கி யெறி வட்டி வாய்க்காலுக்கே யுற்றதற்கு கிழக்கும்

இவ்வெறிவட்டி வாய்க்காலையூடறுத்து வடகரையே யேறி இவ்வாய்க்காலின் வடகரையே மேற்கு நோக்கிச் சென்று இவ்வாய்க்காலுக்கு வடக்கும்

இவ்வெல்லையேய் மேற்கு நோக்கிச் சென்று இவ்வாய்க்கால் தான்கிடந்தவாறே மேற்கு நோக்கி இன்னாட்டுப் பட்டனக் கூற்றத்து ஸ ஹஃேயம்[18] சீவளைய்குடியில் நிலன் நான் மாவில் வடவரம்பேயுற்று இவ்வரம்பே மேற்கு நோக்கிச் சென்று இவ்வெல்லைக்கு வடக்கும் இவ்வெல்லையே மேற்கு நோக்கிச் சென்று பழவிளப்பான் ஓடையே யுற்று இவ்வெல்லைக்கு வடக்கும்

மேல்பாற்கெல்லை

மேல்பாற்கெல்லை வடக்கு நோக்கி நாட்டுப் போக்குத் தலைவாயர் வெட்டப் பேற்றுக்குக் கிழக்கும்

வடக்கின்னும் இன்னாட்டுப் பட்டனக் கூற்[ற]த்து முஞ்சிகுடி நிலத்தின் கீழெல்லையான ஓடையே யுற்று இவ்வோடையின் நடுவேய் வடக்கு நோக்கிச் சென்று இவ்வோடையுள்ப்பட்ட இவ்வோடைக்குக் கிழக்கும்

இவ்வோடை தான் கிடந்தவாறேய் வடக்கு நோக்கி இம்முஞ்சிகுடி நிலமேயுற்று இம் முஞ்சிகுடிக்குக் கீழெல்லையான ஓடையேயுற்று வடக்கின்னும் இவ்வெல்லைக்குக் கிழக்கும்

இவ்வோடை தான் கிடந்தவாறேய் பல முடொக்கு முடொங்கி வடக்கு நோக்கி இம் முஞ்சிகுடி நிலமே யுற்று இம் முஞ்சிகுடிக்குக் கீழெல்லையான ஓடையே வடக்கின்னும் இவ்வெல்லைக்குக் கிழக்கின்னும் இவ்வோடை தான் கிடந்த வாறேய் வடக்கு நோக்கிச் சென்று இதனை விட்டு இம் முஞ்சி குடி வெள்ளாளன் இராமன் கோவிந்த[ந்] நாந்மாவின் தென்வரம்பேயுற்று இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று இம்முஞ்சிகுடி ஸ்ரீஹஷேய[18]மான நிலத்தின் தென் வரம்பேயுற்று இதனுக்குத் தெற்கும்

இதனுக்கேய் கிழக்கும் இன்னும் இம் முஞ்சிகுடி ஸ்ரீஹஷேயம்[18] நிலத்துக்கேய் வடக்கும்

இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று இம் முஞ்சிகுடி வெள்ளான் வகைக் கீழெல்லையான நிலத்துக்குக் கிழக்கும்

இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று வடமேற்கு நோக்கி முஞ்சிகுடி ஊதாரி மயக்கலென்னும் நிலமேயுற்று இன்னிலத்தின் கீழ் வரம்புக்குக் கிழக்கும்

இதன் வட வரம்பேய் மேற்கு நோக்கிச் சென்று வடவரம்புக்கு வடக்கு[ம்]

இச்செயின் மேலைப் பறையோடை வடக்கு நோக்கிச் சென்று இவ்வோடைக்குக் கிழக்கும்

இவ்வோடையே வடக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத்துக்குப் பாயக் கல்லின ராஜராஜன் வாய்க்காலே யுற்று இவ்வாய்க்காலை யூட[று]த்து வடகரைக்கேயேறி இவ்வானை மங்கலத்து ஸ்ரீஹஷேய[18]த்துக் கால்வாயென்னும் நிலத்தின் கீழ்வரம்புக்குக் கிழக்கும்

வடக்கு நோக்கிச் சென்று கிழக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத்து ஸ்ரீஹஷேய[18]த்துக் கிளான் காற்செயின்

தென்வரம்பே யுற்றுத் தென்கிழக்கு நோக்கிச் சென்று இதினின்று வடகிழக்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் சென்ற எல்லைக்குத் தெற்கும் கிழக்கும்

இதன் வடவரம்பேய் வடமேற்கு நோக்கிச் சென்று இதனுக்கு வடக்கும்

இன்னும் இவ்வானைமங்கலத்து ஸபூஹஷேய[18]த்து ஆரிதன் சிறியான் கடம்பன் மூன்று மாவின் கீழ் வரம்புக்குக் கிழக்கும்

வடபாற்கெல்லை

வடபாற்கெல்லை இச்செயின் தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இதனுக்குத் தெற்கும்

இந்நாட்டுப் பட்டநக் கூற்றத்து ஸபூஹஷேயம்[18] பிரம்பில் கொட்டிடலான நிலத்தின் எல்லையேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத்து ஸபூஹஷேயத்து[18] வாச்சியன் பரமேஸ்வரன்[19] பூவன் நிலத்தின் மேல்வரம்பேயுற்றதற்குத் தெற்கும்

இந்நிலத்துக்கேய் மேற்குந் தெற்கும் கிழக்கும் இந்நாட்டு ஸபூஹஷேயம்[18] பிரம்பில் கொட்டிடலான நிலத்தின் கீழ் வரம் புக்குக் கிழக்கும்

இவ்வரம்பேய் வடக்கு நோக்கிச் சென்று விளப்பென்னும் ஆற்றின் தென்கரையே யுற்றுத் தென்கரைக்குத் தெற்கும்

இக்கரையேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத்து ஊஹாஷேவர்[20] தேவதானமான ஒருமாவரையின் மேல்வரம்பே யுற்று இவ்வரம்புக்கு மேற்கும்

இவ்வரம்பேய் தெற்கு நோக்கி இத்தேவர் தேவதானமான முள்ளி வரவையின் மேல் வரம்பேயுற்று இவ்வரம்புக்கு மேற்கும்

இவ்வரம்பே தெற்கு நோக்கியுங் கிழக்கு நோக்கியுஞ் சென்று இத்தேவர் குளமேயுற்று இத்தேவர் குளத்துக்குப் பாயும் வாய்க்காலின் மேல் வரம்பே தெற்கு நோக்கிச் சென்று இத்தேவர் தேவதானங் கணவதிகாலான நிலத்தின் மேல் வரம்புக்கு மேற்கும்

இக்கணவதி காலான தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வரம்புக்குத் தெற்கும்

இத்தேவர் தேவதானமான மெழுக்குப் புறம் ஒரு மாவின் மேல் வரம்புக்கு மேற்கும்

இவ்வொரு மாவின் தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வரம்புக்குத் தெற்கும்

இத்தேவர் தேவர்தானம் முக்காணியின் தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று பத்தல் வாய்க்காலே யுற்றதற்குத் தெற்கும்

இப்பத்தல் வாய்க்காலின் மேல் கரையே வடக்கு நோக்கிச் சென்று விளப்பேயுற்றதற்குக் கிழக்கு

இவ்விளப்பை யூடறுத்து வடகரைக்கேயேறி இந்நாட்டுப் பட்டனக் கூற்றத்து ஸ்ரூஹூதேய[18] மூங்கிற்குடி யெல்லையேயுற்று இவ்வெல்லையே வடக்கு நோக்கியுள் கிழக்கு நோக்கியுஞ் சென்று இதனுக்குக் கிழக்குந் தெற்கும்

இன்னும் இம்மூங்கிற்குடி நிலத்துக்கேய் மேற்கும்

இவ்வெல்லையே தெற்கு நோக்கி விளப்புக்கேயுற்று விளப்பை யூடறுத்துத் தென் கரையே கிழக்கு நோக்கிச் சென்று இந்நாட்டுக் கோவூர் கணவதி மயக்கலான நிலத்தின் மேல் வரம்பே யுற்றதற்குத் தெற்கும்

இக்கணவதி மயக்கலான நிலத்தின் மேல் வரம்புக்கு மேற்கும் இக்கணவதி மயக்கலின் தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இந்நாட்டுப் பட்டனக் கூற்றுத்து ஸ்ரீ ஹதேய[18] நல்லூர்ச் சேரிக்குப் பாயும் வாய்க்காலை யுற்றதற்குத் தெற்கும்

இவ்வாய்க்காலின் தென் கரையேய் கிழக்கு நோக்கிச் செ[ன்]று இந்நாட்டுக் கோவூர் வெள்ளாளன் உறாப்பழி பாக்கர நொருமாவின் தென் வரம்பேயுற்று இத்தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று கோவூர் முன்றுடங்கின தச்சன்னிலத்துக்கே யுற்றதற்குத் தெற்கும்

ஆக இவ்விசைந்த பெருநான் கெல்லையிலு மகப்பட்ட நீர் நிலனும் புன்செயும் ஊரும் ஊரிருக்கையுங் குளமும் ஸ்ரீகோயில்களும் பறைச்சேரியுங் கம்மாணசேரியுஞ் சுடுகாடும் பெறுவதாகவும் இவ்வூர் மனையும் மனைப்படப்பையுங் கடையுங் கடைத்தெருவும் மன்றுங் கன்றுமேய் பாழுங் குளமுங் கொட்ட காரமுங் கிடங்குங் கேணியும் ஓடையும் உடைப்பும் மீன் பயில் பள்ளமுந் தேன் பயில் பொதும்பும் மேநோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் உள்ளிட்டு நீர் பூசி நெடும் பரம்பெறிந்து உடும்போடி யாமை தவழ்ந்த தெவ்வகைப் பட்டதும் உண்ணில மொழிவின்றிக் காராண்மை மீயாட்சியு மிகுதிக் குறையு முள்ளடங்க இப்படி பெற்றதற்குப் பெற்ற வூவஸ்தை[21]

இன்னிலத்துக்கு நீர்க்கீந்தவாறு வாய்க்கால் குத்திப் பாய்த்தவும் வாரவும் விடவும் பெறுவதாகவும்

இன்னிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும்

இவ்வாய்க்கால்கள் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவுங் குற்றேத்தம் பண்ணவுங் கூடை நீரிறைக்கவும் பெறாததாகவுஞ்

சென்னீர்ப் பொதுவினை செய்யாததாகவும்

அன்னீரடைத்துப் பாச்சப் பெறுவதாகவுஞ்

சுட்டோட்டால் மாடமாளிகை யெடுக்கப் பெறுவதாகவுந்

துரவு கிணறு இழிச்சப் பெறுவதாகவுங்

காவு தெங்கிடப் பெறுவதாகவுந்

தமன[க]மு[ம்] மருவு மிருவேலியுஞ் செண்பகமுஞ் செங்கழு நீரும் மாவும் பலாவுங் கமுகும் பனையுங் கொடியும் உள்ளிட்ட பல்லுருவில் பயன் மரம் இடவுந் நடவும் பெறுவதாகவும்

பெருஞ்செக்கிடப் பெறுவதாகவும்

இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் புறவூர்களுக்குப் போய் நீர் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும்

புறவூர் நிலத் தூடுபோந்து இவ்வூர் நிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும்

இவ்வூரிட்ட தெங்கும் பனையும் ஈழவரேறப் பெறாததாகவுந்

தன்குடிக்கேற்ற வண்ணம் முரைசும் முப்படித் தோரண[மு]ம் நாட்டப் பெறுவதாகவும்

இப்படிப் பெற்றதற்கும் பெற்ற பரிஹாரந் நாடாட்சியும் ஊராட்சியும் வட்டி நாழியும் பிதா நாழியுங் கண்ணாலக் காணமும் வண்ணாரப் பாறையுங் குசக்காணமுந் நீர்க்கூலியும் ஓலைக் கூலமுந் தறிப் புடவையுந் தரகுந்தட்டார்ப் பாட்டமும் இடைப்பாட்டமு மாட்டுக் கிறையு[ம்] நல்லாவுந் நல்லெருதுந் நாடு காவலும் ஊடுபோக்கும் விற்பிடியும் வாலமஞ்சாடியும் உலகும் ஓடக்கூலியும் மன்றுபாடும் மாவிரையுந் தீயெரியும் ஈழம்பூட்சியும் கூத்திகாலும் உள்ளிட்டுக் கோத்தொட்டுண்ணப் பால தெவ்வகைப்பட்டதுங் கோக்கொள்ளாதேய்

பள்ளிச்சந்தத்துக்கேய் பெறுவதாகவும் இப்படி பெற்ற *ஹ*வெஷ்ஹ[21]யும் *ஹரிஹார*மும்[22] பெற்ற இன்னிலங் காராண்மை மீயாட்சியு மிகுதிக் குறைமையு முள்ளடங்கப் பட்டனக் கூற்றத்து நாகப்பட்டனத்துக் கடாரத்தரையன் எடுப்பிக்கின்ற சூளாமணிபன்ம விஹாரத்துப் பள்ளிக்குப் பள்ளிச் சந்தயிறையிலியாகக் குடுத்த இன்னாட்டு ஆனைமங்கலம் பள்ளிச் சந்த இறங்கலுள்பட

யாண்டு இருபத்தொன்றாவது முதல் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்து குடுத்தோம்

*க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து நாட்டோம் நாட்டாரோடும் உடனின்று பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்து குடுத்தேன் புரவு வரி கள்ளிக் குடையான் அணையான் தளிக்குளவனே னிவை யென்னெழுத்தென்றும்

இவ்வானைமங்கலம் பிடி சூழ்ந்து பிடாகை நடக்கிறபோது ஆனையேறி இன்னாட்டாரோடும் உடனின்றெல்லை தெரித்துக் காட்டினேன் இவ்வானை மங்கலத்திருக்கும் வெள்ளாளன் கோன் புத்தனே னிவையென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

*க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ஸ்ரீஹூதே[ய]ங்[18] கடம்பனூர் ஸபையோ[23]யோம் இவர்கள் சொல்ல உயஸ்ஸன்[24] முப்பத்திருவன் *யஜ்ஞ*நாந[25] கற்பகாதித்தனேனிவை யென்னெழுத் தென்றும் இக்கடம்பனூரார் சொல்ல இவ்வூர் வைவானஸன்[26] நாராயணன் ஊமோஉரனேனி[27]வை யென்னெழுத்தென்றும் இப்படி பிடாகை நடந்து பிடி சூழ்ந்து அறவோலை செய்து குடுத்தோம்

*க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ஸ்ரீஹூஷேயம்[18] நாரணமங்கலத்து ஸபையோம்[23] இவ்வூர் உயஸ்ஸன்[24] இருநூற்றுவன் உத்தமநான ஸ்ரீஹூமங்கஸனேனி[28] வையென்னெழுத்து தென்றும் இப்படி பிடி சூழ்ந்து அறவோலை செய்து குடுத்தோம்

க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து வேலங்குடி வேலங்குடையான் நாராயணன் ஒற்றியேன் இவை யென்னெழுத் தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ப்ரஹ்மதேய[18] மூங்கிற்குடி ஸபையோம்[23] இவ்வூர் மத்யஸ்தன்[24] குணவனந்தியான அலங்காரப் பிரியனே னிவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றுத்து நரி மன்றத்து ஊரோம் ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர் மத்யஸ்தன்[24] ஐம்பத்திருவன் விடேல் விடுகனேன் இவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து சாத்த மங்கலத்தூரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் வேட்கோவன் நேந்திரன் சாத்தநான நாநூற்றுவப் பெருங்கோ வேளானேனிவை யென்னெழுத்தென்றும் இப்படி பி[டி] சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ப்ரஹ்மதேயம்[18] சந்நமங்கலத்து ஸபையோம்[23] ஸபையார்[23] சொல்ல எழுதி[னேன்] இவ்வூர்க் கரணத்தான் மத்யஸ்தன்[24] துருக்கன் கமுத னேனிவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ப்ரஹ்மதேயம்[18] கொட்டாரக்குடி ஸபையோம் இவ்வூர்க் கரணத்தான் மத்யஸ்தன்[24] ஊரான் சந்திரசேகரநான[29] ப்ரஹ்மமங்கலனேன்[30] இவை யென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துக் கோவூர் ஊரோம்

ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *மத்யஸ்தன்*[24] ஐய்யனைய்யனேனிவை யென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாம*ணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து உத்தூர் ஊரோம்

ஊர[ா]ர் சொல்ல வெழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *மத்யஸ்தன்*[24] நக்கன் முள்ளியேனிவை யென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாம*ணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து *ப்ரஹ்ம*தேயம்[18] நன்னிமங்கலத்து *ஸபை*[23]யோம்

ஸபை[23]யார் சொல்ல இவ்வூர்க் கரணத்தான் *மத்யஸ்தன்*[24] கண்ணன் அலங்காரப் பிரியனேனிவை யென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாம*ணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து *ப்ரஹ்ம*தேயம்[18] பொருவநூர் *ஸபை*[23]யோம்

ஸபை[23]யோர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் மாதேவன் ஊரனேனிவை யென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாம*ணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ஆளாங்குடி ஊரோம்

ஊர[ா]ர் சொ[ல்]ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *காஶ்யபன் ஸோமயாஜி*யனரங்கனேன்[31] இவையென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து துறையூர் ஊரோம்

ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *ஹாரஜ்ஞாஜிதிரித்தி*[32] வைகுந்தன் எழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ஸஹஸ்ரஷேயம்[18] பிரம்பில் ஸபை[23]யோம்

இவ்வூர்க் கரணத்த[ா]ன் உயஹ்ஸன்[24] குணவன்னந்தியான அலங்காரப் பிரியனேன் இவை யென்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் கடம்பங்குடியூரோம்

ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் உயஹ்ஸன்[24] குணவனந்தியான அலங்காரப் பிரியனேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக்கூற்றத்து சேந்தமங்கலத்து ஊரோம்

ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் உயஹ்ஸன்[24] ஊரான் ஐய்யனேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்ற[த்]துச் சிறுச்சேந்தமங்கலத்து எட்டி வலஞ்சுழியன் சங்கனேன் இவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துக் குற்றாலத்தூரோம்

ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் தேவன் ஊரனேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியஶிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துத் திருநாவூர் ஊரோம்

ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் *உய்ஷ்ஷன்*[24] சதுர்முகன ரங்கத்தேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியஶிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ப்ரஹ்மதேயம்[18] உவர்க்குடி *ஸபை*[23]யோம்

ஸபை[23]யார் சொல்ல எழுதினேன் இவ்வூர் ஊர்க்கரணத்தான் வேட்கோவன் மானாகநாராயணனேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை சேய்து குடுத்தோம் *க்ஷத்ரியஶிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து முஞ்சிகுடி ஊரோம்

ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் மாநகன் கண்ணனேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியஶிகாமணி*[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து திருக்கண்ணங்குடி *ஸபை*[23]யோம்

ஸபை[23]யார் சொல்ல வெழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் அதிராமன் இருபத்து நால்வனாகிய முன்னூற்று வனேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகாஉ*ணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து கடம்பவலவாட்கை ஊரோம்

ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *உயஹ்லன்*[24] ஊரானுஈரானேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம்

*க்ஷத்ரியசிகாஉ*ணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துப் பாளங் கொற்றங்குடி ஊரோம்

ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *உயஹ்லன்*[24] ஊரானு[ஈ]ரானேனிவை என்னெழுத்தென்றும்

இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் *க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து வெண்கிடங்கில் ஊரோம்

ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் *உயஹ்லன்*[24] ஊரா[ர்] நக்கனேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் இவ்வானைமங்கலத்து *ப்ரஹ்ம*தேயத்து[18] ஆரிதன் சிறியான் கடம்பனேனிவை என்னெழுத்தென்றும்

இப்பரிசு பட்டாய் நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன் *க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டுத் திருநறையூர்நாட்டு *ப்ரஹ்*ஷே[18]யம் ஸ்ரீதுங்கமங்கலத்துத் தூறபில் ஸ்ரீ*யஜ*஭ட்டனேனிவை[33] யென்னெழுத்தென்றும்

இப்படி ஭ட்டா[ய்] நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன் *க்ஷத்ரியசிகா*மணி[1] வளநாட்டு வேளா நாட்டுத் திருநல்லூர்ப் பார்க்குளத்துப் பற்பநா஭஭ட்டனேனிவை என்னெழுத்தென்றும்

இப்பரிசு ஹட்டாய் நின்று நடப்பித்து அறவோலை செய்வித்தேன் க்ஷத்ரியசிகாமணி[1] வளநாட்டு வேளாநாட்டு திருநல்லூர் பேரேமபுரத்து வெண்ணைய ஹட்டனேனிவை யென்னெழுத்தென்றும்

இப்பரிசு ஹட்டாய் நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன் ராஜேந்த்ரஸிம்ஹ[34] வளநாட்டு ஸ்ரீவீரநாராயணசதுர்வேதி[35] மங்கலத்து ஜைதைமோம[36]புரத்து நந்தீஸ்வரஹட்டனேனிவை[37] என்னெழுத்தென்றும்

புகுந்த அறவோலைப்படியே வரியிலிட்டுக் கொள்கவென்று நங் கருமமாராயும் மீனவன் மூவேந்த வேளானும் கொற்றமங்கலமுடையானும் தேவன்குடையானும் நடுவிருக்குங் கடலங் குடித்தாமோதர ஹட்டனும் கொட்டையூர்ப் பூவத்த ஹட்டனும் நங் கருமமாராயும் பராக்ரமசோழ[38] மூவேந்த வேளானும் செம்பியன் மூவேந்த வேளானும் சோழ வேளானும் அரைசூருடையானும் நடுவிருக்கும் புள்ளமங்கலத்து பரமேஸ்வரஹட்டஸர்வக்ரதுயாஜியுஞ்[39] சொல்லப்

புரவுவரி ஆலங்குடையான் கோதண்டன் சேனனும் பூதமங்கலமுடையான் இளவடிகள் நள்ளாறனும் ஆலத்தூருடையான் கற்பகஞ்சோலையும் வரிப் பொத்தகம் பருத்தியூர் கிழவன் சிங்கன் வெண்காடனும் முகவெட்டி கீழ்வாய் கணவதியும் முண்டனரங்கனுஞ் சையதனமலனும் தத்தன் சீகிட்டனும் வரிப்பொத்தகக் கணக்கு மாதேவன் பூழியும் வரியிலிடு உறுவூருடையான் தாழி வீர சோழனும் பட்டோலை பெருமானம்பலத்தாடியும் சீகண்டன் தேவனும் மாகாளனறிஞ்சியும் நக்கன் மண்டகவனும் இருந்து

இருபத்து மூன்றாவது நாள் நூற்றறுபத்து மூன்றிநால் வரியிலிட்டுக் குடுத்தது

"இவை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டு நாடார் கிழான் அரையன் அருமொழியான ராஜேந்த்ரசோழப்[40] பல்லவரையன் எழுத்து"

“உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக *சதுர்வேதி*[41] மங்கலத்து *க்ருஷ்ணன்*[42] ராமனான *ராஜேந்த்ர*சோழ *ப்ரஹ்ம*[43] மார[ா]யனுக்கும் ஒக்கும்”

“நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்[து] அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவயனான உத்தமசோழப் பல்லவரையனுக்கும் ஒக்கும்”

ராஜேந்த்ரஸிம்ஹ[44] வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் கடலங்குடி த்வேதை[45] கோமபுரத்து தாமோதர பட்டனுக்கும்[46] ஒக்கும் உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு குறும்பல் கிழான் அரையன் சீகண்டனான மீனவன் மூவேந்த வேளானுக்கும் ஒக்கும்

---

1 க்ஷத்ரிய சிகரமணி
2 ப்ரஹ்மதேயக் கிழவர்க்கும்
3 ராஜாஸ்ரயநில்
4 சூளாமணி பன்மன்
5 சதுர்வேதிமங்கலத்து கிருஷ்ணன்
6 ப்ரஹ்மமாஹாராயனும்
7 பரமேச்வர பட்ட சர்வ க்ரதுயாஜியும்
8 அபிமான பூஷணச் சதுர்வேதி மங்கலத்து
9 ஸ்ரீதர பட்டனையும்
10 ராஜேந்திர சிம்ஹ
11 ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்து
12 த்வேதைகோமபுரத்து
13 நந்தீஸ்வரபட்டனையும்
14 கிருஷ்ணன்
15 ப்ரஹ்மமஹாராயன்
16 ஸ்ரீகோவிராஜராஜகேஸரிவர்மரான
17 பரமேஸ்வரன்
18 ப்ரஹ்மதேய
19 பரமேஸ்வரன்
20 மஹாதேவர்
21 வ்யவஸ்தை
22 பரிஹாரமும்
23 ஸபையோம்
24 மத்யஸ்தன்
25 யக்ஞநாந
26 வைகானஸன்
27 தாமோதரனேன்
28 ப்ரஹ்மமங்கல்யனேன்
29 சந்திரசேகர
30 ப்ரஹ்மமங்கல்யனேன்
31 ஸூர்யனரங்கனேன்
32 பாரத்வாஜி
33 ஸ்ரீதரபட்டனேனிவை
34 ராஜேந்திரஸிம்ஹ
35 ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதி
36 த்வேதைகோம
37 நந்தீஸ்வரபட்டனேனிவை
38 பராக்ரமசோழ
39 பரமேஸ்வரபட்ட ஸர்வ்வக்ரது யாஜியுஞ்
40 ராஜேந்திரசோழ
41 கேரளாந்தகச் சதுர்வேதி
42 கிருஷ்ணன்
43 ராஜேந்திரசோழப்ரஹ்ம
44 ராஜேந்திரசிம்ஹ
45 த்வேதை
46 தாமோதர பட்டனுக்கும்

விளக்க உரை :

இராஜராஜசோழனின் ஆட்சியில் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தப் பள்ளி எடுக்கப்பட்டது. இதைக் கடார தேசத்துச் சூளாமணிவர்மன் என்பவன் எடுத்தான். கடாரம் இப்பொழுது மலேசியா நாட்டில் 'ஏகத்தா' என்னும் பகுதியாகும். கடல் கடந்த அந்நாட்டு மன்னன் தமிழ்நாட்டில் பௌத்தப் பள்ளி எடுக்கும் அளவுக்கு இராஜராஜனின் பெருமையும் உறவும் சிறந்திருந்தது. அப்பௌத்தப்பள்ளிக்கு இராஜராஜன் ஆனைமங்கலம் என்னும் ஊரில் ஏராளமான நிலங்களை வரி நீக்கி அளிக்க ஆணையிட்டான். அவ்வாணையை இச்செப்பேடு குறிக்கிறது. ஹாலந்து நாட்டில் லெய்டன் நகரில் இச்செப்பேடு உள்ளது. லெய்டனில் இரண்டு செப்பேடுகள் உள்ளன. அவற்றில் இது பெரிய செப்பேடு. ஆதலின் பெரிய லெய்டன் செப்பேடு என்று கூறுவர். இச்செப்பேட்டில் ஆனைமங்கலம் என்னும் ஊர் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் இதை ஆனைமங்கலச் செப்பேடு என்றும் அழைப்பது உண்டு.

இச்செப்பேடும் இரண்டு மொழிகளில் எழுதப்பட்டு உள்ளது. முதல் பகுதி சம்ஸ்கிருதத்திலும் இரண்டாவது பகுதி தமிழிலும்உள்ளது. இந்நூலில் தமிழ்ப் பகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது. சோழர் ஆட்சி, சிறப்பாக இராஜராஜனது ஆட்சி எவ்வளவு மேம்பட இருந்தது என்பதை இச்செப்பேடு எடுத்துக்காட்டுகிறது. அவ்வளவு தெளிவான ஆட்சி இந்திய நாட்டிலேயே ஈடு இணையற்றதாக, செம்மையாக நடைபெற்றது இராஜராஜன் காலத்தில்தான் என்றால் மிகையாகாது.

இச்செப்பேட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து அறிந்து கொள்ளலாம். 24-வது பக்கம் "மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பினாலும்" என்பது வரை முதல் பிரிவு எனலாம்.

முதல் பிரிவு: இராஜராஜன் தஞ்சாவூரில் ராஜாச்ரயன் என்ற மாளிகையில் தெற்கு மண்டபத்தில் அமர்ந்திருந்த போது,

நாகப்பட்டினத்தில் சூடாமணிவர்மன் எடுக்கும் பௌத்தப் பள்ளிக்கு, ஆனைமங்கலம் அளக்கவேண்டிய இறை 8943 கலன், 2 தூணி, 'குறுணி,' நாழி நெல்லை அளக்க ஆணை இட்டான். இவ்வாணை இராஜராஜனின் 21-ஆம் ஆட்சியாண்டில் இடப்பட்டது. இராஜராஜன் இட்ட ஆணையை, அமுதன் தீர்த்தகரன் என்பவன் ஓலையில் எழுதினான். இவ்வோலை வாசகம் சரியாக இருக்கிறதா என்பதை மூவர் ஒப்பிட்டுப் பார்த்தனர். அவர்கள் ஓலை நாயகம் என்று குறிக்கப் படுகின்றனர். அவர்கள் 1. கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரும்மராயன் 2. மும்முடி சோழ போசன் 3. மதுராந்தக மூவேந்தவேளான் என்பவர்களாகும். இவ்வாணையைச் செயல் படுத்துவதற்குப் பல அதிகாரிகள் இருந்தனர். அவர்களது பதவிகளின் பெயர் கொடுக்கப்பட்டு உள்ளது. அவை 1. கருமம் ஆராய்வான் 2. நடுவிருக்கை 3. புரவுவரி 4. வரிப் பொத்தகம் என்ற பதவிகளாகும். இவர்கள் அனைவரும் உடனிருந்து பள்ளிச் சந்தமாக இறையில்லாத நிலமாக வரியில் இட்டுக் கொடுத்தனர் (பதிவு செய்து கொடுத்தனர்). இவ்வாறு கொடுத்த ஆனைமங்கலத்து நிலத்தை யார் யார் பிடி சூழ்ந்து எல்லை காட்டினார்கள் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி அறவோலை (தானப் பதிவு) செய்ய வேண்டும் எனஆணை. அரசனது ஆணை எழுதியது ஓலை என்றும் மந்திர ஓலை என்றும் குறிக்கப்படுகிறது (இது திருமுகம் என்றும் அழைக்கப்படும் என்று முன்னர் கண்டோம்). இங்கு ஓலை நாயகம் என்று கூறப்படும் கிருஷ்ணன் இராமனான மும்முடி சோழ பிரும்மராயன் என்பவன் சேனாபதி என்று தஞ்சாவூர் கல்வெட்டில் குறிக்கப்படுகிறான். அவனே இராஜராஜனது ஆணைப்படி பெரிய கோயில் திருச்சுற்றை எடுத்தவன். இங்கு குறிக்கப்படும் ஈராயிரவன் பல்லவரையனான மும்முடி சோழ போசன் என்பவன் தஞ்சைக் கல்வெட்டில் பெருந்தரம் என்று பேசப்படுகிறான்.

2-வது பிரிவு : 26-வது பக்கம் "அறவோலை செய்த நிலத்துக்கு" என்பது வரையிலாகும். இதில் இராஜராஜனது மெய்கீர்த்தி இடம் பெறுகிறது. நாட்டார் திருமுகம் பெற்று அறவோலை செய்த குறிப்பு.

3-வது பிரிவு : 33-வது பக்கம் "மிகுதிக் குறைமை உள்ளடங்க இப்படி பெற்றதற்கு" என்பது வரையிலாகும். இப்பிரிவில் கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லையும், நிலப்பரப்பும், அதன் உள்ளடங்கியவையும் குறிக்கப்பட்டுள்ளன. கீழ்பால் எல்லை, தென்பால் எல்லை, மேற்பாற்கெல்லை, வடபாற்கெல்லை என எல்லைகள் வலமாகக் குறிக்கப்பட்டுள்ளதும், அதன் உள்ளகப்பட்டவையும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது காண்க.

4-வது பிரிவு : 34-ஆம் பக்கம் "முப்படித் தோரணமும் நாட்டப் பெறுவதாகவும்" வரையிலாகும். இப்பிரிவில் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு என்னென்ன அரசரால் கொடுக்கப்பட்டன என்று காணலாம். இதை 'வ்யவஸ்தை என்று (தீர்மானங்களின் முடிவுகள்) கூறுவது மரபு. இந்நிலத்துக்கு வாய்க்கால்களிலிருந்து நீர் பாய்ச்சும் உரிமை, பிறர் இந்நீரை இடையில் பாய்ச்சாமல் தடுத்தல், மாளிகைகள் செங்கல்லால் எடுத்துக் கொள்ளும் உரிமை. துரவு கிணறு தோண்டும் உரிமை, தெங்கு முதலிய இடும் உரிமை, செக்கிடும் உரிமை முதலியன இவ்வாறு கிடைத்த உரிமைகளாகும்.

5-வது பிரிவு : 35-வது பக்கம் "பள்ளிச் சந்தத்துக் கேய் பெறுவதாகவும்" வரையிலாகும். இப்பிரிவு அரசுக்குச் சேர வேண்டிய என்ன என்ன வரிகளை இப்பள்ளிச்சந்தத்துக்கே கொடுக்க வேண்டும் என்று குறிப்பதாகும். இதைப் "பரிஹாரம்" (தவிர்ப்பு) என்று கூறுவர். இவற்றில் இருந்து அக்காலத்தில் அரசு விதித்திருந்த வரிகள் யாவை என்று அறியலாம். கல்யாணத்தில் கொடுக்கப்படும் வரியும், கூத்திகள் கொடுக்கும் வரியும் பிற வரியும் காண்க. இவற்றைக் "கோத்தொட்டு உண்ணப்பாலது" என்றும் கூறுவர்.

6-வது பிரிவு : 41-வது பக்கம் "நந்தீச்வர பட்டனேன் இவை என்னெழுத்து என்றும்" என்பது வரையிலாகும். இதில் யார் யார் இருந்து அறவோலை செய்து கொடுத்தார்கள் என்பது குறிக்கப்பட்டுள்ளது.

கடைசிப் பகுதி : யசர் யசர் இருந்து வரியிலிட்டுக் கொடுத்தார்கள் என்றும் இதற்கு யார் கையெழுத்திட்டார்கள் என்பதும் குறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டிலிருந்து ராஜராஜன் காலத்தில் அரசாங்கம் எவ்வாறு இயன்றது; அரச ஆணைகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டன; ஊர்களில் நிலங்களின் எல்லைகளும், அவற்றின் மீது இட்ட இறைகளும் எவ்வளவு தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன என்பவை தெளிவாகின்றன. இராஜராஜன் பெரும் சைவன் ஆன போதிலும், பௌத்தத்தையும், பிறசமயங்களையும் எப்படி ஆதரிக்கும் பெருந்தகையாக இருந்தான் என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள்.

நாகப்பட்டினத்தில் எடுக்கப்பட்ட பௌத்தவிஹாரம் அண்மைக்காலம் வரையில் இருந்தது. சென்ற நூற்றாண்டில் ஜெஸூட் மிஷனைச் சார்ந்தவர்களால் இடிக்கப்பட்டது. இப்பகுதியில் ஏராளமான பௌத்த விக்கிரஹங்கள் கிடைத்துள்ளன. அவற்றின் பெரும்பாலானவை இப்பொழுது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன.

7. பாண்டிய நெடுஞ்செழியனின் மீனாட்சிபுரக் கல்வெட்டு

1 கணிய் நந்தஅ ஸிரிய் இகுவ்அன் கே
தம்மை இத்தஅ நெடுஞ்சழியன் பணஅன்
கடல்அன் வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய்

2 கணிய் நந்த ஸிரிய்குஅன் தமம்
இத நெடுஞ்சழியன்
ஸலகன் இளஞ்சடிகன் தந்தைய்
சடிகன் செயஇய பளிய்

3 கணிஇ நத ஸிரிய் குவ . .
வெள்அறைய் நிகமது காவிதிஇய்
கழிதிக அந்தைஅ ஸு‍தன்
பிணஊ கொடுபிதோன்

4 சந்தரிதன் கொடுபிதோன்

5 வெள்அறை நிகமதோர் கொடிஓர்

விளக்க உரை :

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து ஒரு குறுக்குச் சாலையின் வழியே சென்று அதிலிருந்து மற்றொரு வண்டிப் பாதை வழியாகச் சென்றால் இவ்வூரை அடையலாம். இவ்வூர் மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. இம்மலையில் காணப்படும் கல்வெட்டுகள் மீனாக்ஷிபுரம் கல்வெட்டுகள் என்று வழங்கப்படுகின்றன. இதை மாங்குளம் கல்வெட்டுகள் என்றும் குறிப்பர்.

இம்மலையைக் கழுகுமலை என்றும் ஓவாமலை என்றும் ஊரார் குறிப்பர். மலையின் கிழக்குப் புறத்தில் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களில் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேல் பாறையின் புறத்தே நீண்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சமண சங்கத்தைச் சார்ந்தவர்களைக் கணி என்று குறிப்பது வழக்கம். அதுவே இக்கல்வெட்டில் கணி என்று குறிக்கபட்டுள்ளது. நந்தஸிரியக்குவன் (இயக்கன்) என்பவருக்கு நெடுசெழியன் பள்ளி அமைத்துக் கொடுத்ததை முதல் கல்வெட்டு குறிக்கிறது. “கே தம்மம்” என்றால் அவருக்குக் கொடுக்கப்பட்டது என்று பொருள். கே என்பது நான்காம் வேற்றுமை உருபு. பள்ளன்கோயில் செப்பேடு வஜ்ரநந்திக்குரவர் என்பவருக்குப் பள்ளிச்சந்தம் கொடுத்ததைக் குறிக்கிறது. அவர் ‘கணி’ என்று குறிக்கப்படுகிறார். அடுத்து, இரண்டாவது கல்வெட்டு அதே பெரியாருக்கு நெடுஞ்செழியனின் சாலகன் இளஞ்சடிகனின் தந்தை சடிகன் என்பான் பள்ளி செய்வித்ததைக் குறிக்கிறது. மூன்றாவது கல்வெட்டு அதே பெரியாருக்கு வெள்ளறை நிகமத்தைச் சேர்ந்த காவிதி கழிதிக அந்தை என்பவரின் மகன் பிணவு என்பவன் கொடுத்ததைக் குறிக்கிறது. சந்தரிதன் என்பவனும் வெள்ளறை நிகமத்தோரும் கொடுத்ததை மற்ற கல்வெட்டுகள் குறிக்கின்றன.

"கணிய்", "ஸிரிய்", "பளிய்", "வழுத்திய்" முதலிய சொற்களில் இறுதியில் இகரத்தின் பின்னர் 'ய்' வருவது குறிக்கத்தக்கது. தொல்காப்பியத்தில் 'இகர யகரம் இறுதி விரவும்' என்று ஒரு சூத்திரம் உள்ளது. இதற்கு "இகர வீற்று மொழிக்கண் இகரமும் யகரமும் விரவி வரும் என்றும் 'நாய்' நாஇ எனக் கண்டு கொள்க. விரவும் என்றதனால் அவை இரண்டும் கொள்க, என்றவாறு," என்று இளம்பூரணர் உரை எழுதியுள்ளார். இதற்கு நச்சினார்க்கினியர் "இகரமும் யகரமும் ஒரு மொழியின் இறுதிக்கண் ஓசை விரவி வரும். அவ்விகாரம் கொள்ளற்க" என்று உரை எழுதியுள்ளார். யகரத்திற்கு இகரமும் இகரத்திற்கு யகரமும் மாறி வரும் என்பது இவர்கள் கருத்தாகத் தோன்றுகிறது. ஆனால் "விரவி" என்றால் சேர்த்தல் என்று பொருளுண்டு, ஆதலின் சொல்லின் இறுதியில் இகரத்தின் பின்னர் 'ய்' சேரும் என்பதை இச்சூத்திரம் குறிக்கிறது எனக் கொள்வதில் தவறில்லை. மேற்குறித்த சொற்கள் இக்கருத்துக்குச் சான்று பகர்வனவாய் உள்ளன.

இங்குள்ள இரண்டாவது கல்வெட்டில் நெடுஞ்செழியனின் சாலகன் (சலகன்) இளஞ்சடிகன் என்பான் குறிக்கப்படுகிறான். மனைவியின் உடன்பிறந்தாள் கணவன் சாலகன் என குறிக்கப் படுகிறான். (இதைச் சலகன் என்றும் படிக்கலாம். இச்சொல் தான் பின் திரிந்து சகலன் என வழங்கப்பட்டதோ என்று கருத இடமுண்டு.)

இக்கல்வெட்டில் வெள்ளறை நிகமம் என்று ஒரு சொல் வருகிறது. நிகமம் என்பது நகரத்தையும், வணிகக் குழுவையும் குறிக்கும் இங்கு நிகமம் (உ-ம் நியமம், நேமம்) என்பது நகரத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

"காவிதி, பிணஊ" போன்ற பழைய சொற்களும் இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

ஸிரி, இகுவன், தம்மம், பளி, ஸுதன், நிகமம், கணி முதலிய பாகதச் (பிராகிருத) சொற்கள் இவற்றில் இடம் பெற்றுள்ளன.

'அன்' என்ற விகுதி 'பண அன்' 'கடல் அன்' (கடலன்) இகுஅன் (இகுவன் என்ற சொற்களில் தனித்தே சேர்க்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

'அ' என்ற விகுதி ஆறாம் வேற்றுமை உருபாக இங்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை "அந்தைஅ" என்று வருவதிலிருந்து காணலாம்.

"கொட்டு பித்த அ" என்ற சொல்லுக்கு கொடுப்பித்த என்று ஐ. மகாதேவன் பொருள் கூறுகிறார். கொட்டுதல் என்றால் கம்மியர் சம்மட்டியால் அடித்தல் அல்லது செதுக்குதல் என்றும் பொருள் (O.E.D. 1740) உண்டு. ஆதலின் இச்சொல் இங்கு பாறையைச் செதுக்கிப் படுக்கையாக அமைத்ததைக் குறிக்கிறது என்றும் கொள்ளலாம்.

'ஆசிரியக உவன்கே தம்மம்' என்று திரு ஐ. மகாதேவன் இதைப் படித்துள்ளார். இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்ற நெடுஞ்செழியன் கடலனென்றும், வழுதியென்றும், பணவன் என்றும் குறிக்கப்படுகிறான். இவை பாண்டியர்களுடைய குலப் பெயர்கள். ஆதலின் இம்மன்னன் பாண்டியன் என்பது தெளிவு. சங்க இலக்கியங்களில் "தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும்", "ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும்" குறிக்கப்படுவது அனைவரும் அறிந்ததே. ஆனால் அவர்கள் இருவரும் கிறிஸ்துவிற்குக் காலத்தால் பிற்பட்டவர்கள் என்றும், இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள நெடுஞ்செழியன் கி.மு. இரண்டாவது நூற்றாண்டில் ஆண்டவனாக இருத்தல் வேண்டும் என்றும் திரு. ஐ. மகாதேவன் கருதுகிறார். இக்கல்வெட்டு கி.மு. 3-2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதில் ஐயமில்லை.

8. சித்தன்னவாசல் கல்வெட்டு

1 எருமி நாடு குமிழ்ஊர் பிறந்த
காவுடி ஈதேன்கு சிறுபோவில்
இளயர் செய்த அதிட்அனம்ள

விளக்க உரை :

புதுக்கோட்டையிலிருந்து சுமார் 10 கல் தொலைவில் சிற்றண்ணல் வாயில் என்னும் ஊர் உள்ளது. அவ்வூரிலுள்ள மலைக்குகையில் இக்கல்வெட்டு காணப்படுவதால் இதை சித்தன்னவாசல் கல்வெட்டு என்று வழங்குவர். எருமையூர் நாட்டைச் சேர்ந்த குமிழ் ஊர் பிறந்த காவுடி ஈதேன் என்பவர்க்குச் சிறுபோவில் இளையர் என்பவர் செய்த இருக்கை என்று குறிக்கிறது. சிறுபோவில் என்பதே இப்போது சித்தன்னவாசல் ஆகியிருக்கும் என ஐ.மகாதேவன் கருதுகிறார். இக்கல்வெட்டு கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

9. புகளூருக்கு அருகில், ஆர்நாட்டார்மலையில் உள்ள சங்ககாலச் சேரர் கல்வெட்டு

வடபுறமுள்ள கல்வெட்டு

1 ணாகன் மகன்ளங்கீரன்

தென்புறக் குகையிலுள்ள கல்வெட்டு

2 a முதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் . .
b கோஆ . . ல்லிரும்புறை மகன் பெருங்
c கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங்
d கோ ளங்கோ ஆக அறுபித கல்

3 a தா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
b கோஆதன் செல்லிரும்பொறை மகன்
c பெருங்கடுங்கோன் மகன் ளங்
d கடுங்கோ ளங்கோ ஆகி அறுத்த கல்

4 கொற்றந்தை ளஎய் முன்று

விளக்க உரை :

திருச்சி மாவட்டம் கருவூரிலிருந்து பத்துக்கல் தொலைவில் உள்ள புகளூரில் ஆறுநாட்டார் மலை என்ற மலை ஒன்று உண்டு. மலை அடிவாரத்தில் உள்ள ஊரை 'வேலாயுதம்பாளையம்' என்று குறிப்பர். மலை மேல் முருகப் பெருமானுக்கு ஒரு கோயில் உள்ளது. முருகன் கோயிலுக்குச் செல்லப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மலை மேல் தென் புறமாக ஒரு இயற்கைக் குகைத்தளம் அமைந்திருக்கிறது. அவ்வழியிலே சென்று மலையைச் சுற்றி வந்தால் வடபுறத்திலும் ஒரு குகைத்தளம் இருக்கிறது. தென் புறத்தில் உள்ள குகைத்தளத்திலும், வடபுறத்தில் உள்ள குகைத்தளத்திலும் படுக்கைகளும், கல்வெட்டுகளும் இருக்கின்றன. தென்புறத்தில் உள்ள குகைத்தளத்தில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. அவை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. வடபுறக் குகைத்தளத்தில் ஒரே ஒரு கல்வெட்டு இருக்கிறது. தென்புறக் குகைத்தளத்திலிருந்து வடபுறக் குகைத்தளத்திற்குச் செல்லும் வழியில் ஒரு பெரும் கல்லின் அடியிலும் படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கு கல்வெட்டு ஏதும் இல்லை.

தென்புறக் குகைத்தளத்தில் படுக்கைகளின் பக்கவாட்டிலும், மேலே உள்ள பாறையின் முகப்பிலும் உள்ள இரு கல்வெட்டுகளே தமிழக வரலாற்றுக்கு இன்றியமையாதவை.

குகைத்தளத்தில் படுக்கைகளின் தலையில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகளில் ஒன்று 'யாற்றூர் செங்காயபனை'க் குறிக்கிறது. ஆனால் அது மிகவும் சிதைந்துள்ளது.

எழுத்துகள் இக்கல்வெட்டுகளில் வளர்ச்சி பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. 'அ' எழுத்து இடைவெளியின்றிச் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. உயிர்மெய்யில் இகரத்தைக் குறிக்கும் குறி வளையத் தொடங்குகிறது. 'ற' கரம் வளர்ச்சி பெற்றுக் காணப்படுகிறது. 'மூன்று' போன்ற சொற்களில் மெய்யைக் குறிக்கப் புள்ளி காணப்படுகிறது. இந்த எழுத்துகளின் வளர்ச்சியைக் கொண்டு

இக்கல்வெட்டுகளைக் கிறிஸ்துவின் சமகாலத்தவையாகக் கொள்ளலாம். இரும்பொறைக் கல்வெட்டில் 'தா அமண்ணன்' என்று இதுகாறும் படிக்கப்பட்டது; ஆனால் அதன் முன்னர் 'மு' என்ற எழுத்து உள்ளது என்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூத்த என்ற பொருளில் 'மூதா' என்ற சொல் வழங்கப் பட்டுள்ளது. அமணன் என்பது 'அமண்ணன்' என்று எழுதப் பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் 'இரும்பொறை' என்றும், மற்றொரு கல்வெட்டில் 'இரும்புறை' என்றும் எழுதப்பட்டுள்ளது. சொல்லின் இறுதியில் 'ன்' னும் வருமொழியில் 'இ' கரமும் வரும் இடங்களிலெல்லாம் 'இ' கரம் மறைந்து சேர்க்கப்பட்டுள்ளது.

உதாரணம்:

மகன் + இளங்கடுங்கோ = மகன் ளங்கடுங்கோ
கடுங்கோன் + இளங்கடுங்கோ = கடுங்கோன் ளங் கடுங்கோ
ணாகன்மகன் + இளங்கீரன் = ணாகன்மகன்ளங்கீரன்

இது போன்ற வேறு சில இடங்களில் 'ன்' னும் மறைந்து 'இ'யும் மறைந்து காணப்படுகிறது.

உதாரணம் :
கடுங்கோன் + இளங்கோ = கடுங்கோளங்கோ

குறு + மகள் என்ற சொல் 'குறும்மகள்' என்று மகர ஒற்று இரட்டித்து எழுதப்பட்டுள்ளது. 'செயிபித', 'அறுபித' என்ற வழக்குகள் காணப்படுகின்றன.

'ணாகன்' என்ற சொல்லில் 'ண' கரம் சொல்லின் முதலில் வருவது குறிப்பிடத்தக்கது. இது இலக்கண மரபுக்கு ஏற்புடையது

அல்லவாயினும் வழக்கில் இருந்துள்ளது என்று இதனால் தெரிகிறது. சுமார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டிலும் ‘ண’ கரம் சொல்லின் முதலில் வரும் வகையில் ‘ணாக்கையார்’ என்ற பெயர் வந்துள்ளது.

சேரன் இளங்கடுங்கோ ‘இளங்கோ’ பட்டம் எய்திய போது யாற்றூரைச் சார்ந்த செங்காயபன் என்பவருக்கு உறைவிடம் கொடுத்ததை இரு கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்கல்வெட்டுகளில் சேர மன்னர்களுடைய மூன்று தலைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளது சிறந்த வரலாற்றுச் செய்தியாகும்.

“கோ ஆதன் செல்லிரும்பொறை”
“பெருங் கடுங்கோன்”
“இளங் கடுங்கோன்”

என்று தந்தை, மகன் என்னும் உறவில் குறிக்கப்படுகின்றன. இவற்றில் ‘கோ’ என்றும், ‘இரும்பொறை, என்றும், ‘ஆதன்’ என்றும் பெயர்கள் வருவதால் இதில் குறிக்கப்பட்டுள்ளவர் சேர குலத்தைச் சார்ந்தவர் என்பதில் ஐயத்திற்கு இடமே இல்லை. அரசர் குலத்தில் மூன்று தலைமுறைகளைக் குறித்துள்ள மிகவும் தொன்மையான கல்வெட்டுகள் இவையே. இவற்றின் உதவி கொண்டு வரலாற்றை ஒருவாறு கணிக்கலாம். ஆதலின் தமிழகத்தின் சங்ககால வரலாற்றுக்கு இவை மிகவும் இன்றியமையாத கல்வெட்டுகளாகும்.

இந்த கல்வெட்டுகளை மிகவும் தெளிவாகப் படித்து அளித்த பெருமை திரு. ஐ. மகாதேவன் அவர்களையே சாரும். அவர் இக்கல்வெட்டுகள் குறித்து இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் எழுதியுள்ள கட்டுரையில் பின்வருமாறு குறிக்கிறார்.

“கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன், அவன் மகன் இளங்கடுங்கோன் என்பவனும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ‘ஆதன்’ என்றும் ‘செல்’ என்றும் பெயர் கொண்டவன் சங்ககாலச் சேர மன்னர்களில்

செல்வக்கடுங்கோவாழியாதன் என்ற ஒரு மன்னனே ஆவான். பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் அவனே. ஆதலின், புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள 'கோ ஆதன் செல்லிரும் பொறை'யே, பதிற்றுப்பத்தின் ஏழாம் பாட்டின் தலைவனான 'செல்வக்கடுங்கோவாழியாதன்' என்பதில் ஐயமே இல்லை. புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பெருங்கடுங்கோவும், இவன் மகன் இளங்கடுங்கோவுமே பதிற்றுப்பத்தில் வரும் 'பெருஞ்சேரல் இரும்பொறையும்' 'இளஞ்சேரல் இரும்பொறையும்' ஆவர். இவர்களே எட்டாவது, ஒன்பதாவது பாட்டுகளின் தலைவர்களாவர், 'பெருஞ்சேரல் இரும்பொறையே' 'பாலை பாடின பெருங்கடுங்கோ' என்றும், இளஞ்சேரல் இரும்பொறையே 'மருதம் பாடிய இளங்கடுங்கோ' என்றும் ஒரு வழிவழிக் கருத்து உண்டு. இதிலிருந்து இவர்கள் 'பெருங்கடுங்கோ' என்றும், 'இளங்கடுங்கோ' என்றும் பெயர் பெற்றிருந்தனர் என்பது தெளிவு. ஆதலின் புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்படுவோர் இவரே.

'இளஞ்சேரல் இரும்பொறை'யின் தந்தை 'குட்டுவன் இரும்பொறை' என்று குறிக்கப்பெறுகிறான். ஆனால் புகளூரில் 'பெருங்கடுங்கோன்' தந்தையாகக் குறிக்கப்படுகிறார். 'குட்டுவன் இரும்பொறை' என்பது சேரர்களின் பொதுப் பெயர் எனக் கொள்ளல் வேண்டும். ஆதல் பதிற்றுப் பத்தில் 7, 8, 9, பாட்டுகளின் தலைவர்களே புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றனர் என்பது திரு. ஐ. மகாதேவன் அவர்களுடைய கட்டுரையின் சாரம்.

இங்குக் கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்களுக்கும், இலக்கியத்தில் குறிக்கப்படுவோரின் பெயர்களுக்கும் உள்ள ஒற்றுமை கண்டு இருவரும் ஒருவரே என இணைத்துக் கூறுவது ஒரு போற்றத்தக்க முயற்சியாகும். இக்கருத்திலுள்ள உண்மையைப் புறக்கணித்துவிட முடியாது. இருப்பினும் இன்னும் சிறந்த சான்றுகள் பெறும்வரை இக்கருத்தை முடிந்த முடிவாகக் கொள்ளாமல் இவ்வாறு இருக்கலாம் எனக் கொள்வதில் தவறில்லை. காரணம் இன்னும் சில ஐயப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இரும்பொறை வழி என்றும், குட்டுவன் வழி என்றும், இரு வழிகள் சேரர் குலத்தே

இருந்தன என்றும், இரும்பொறை வழியே புகளூருக்கு அண்மையிலுள்ள கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும் கருதப்படுகிறது. ஆனால் சேரர் குலத்தே இரு வழிகள் இருந்ததாகக் கூறப் போதிய சான்றுகள் இல்லை.

"சங்க இலக்கியங்களில் சேரர்களின் தானைத் தலைவர்களாகக் கருதப்படும் பிட்டனும், பிட்டன் கொற்றனுமே புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். பிட்டனும், பிட்டன் கொற்றன் என்பவனும் தந்தை, மகன் என்னும் உறவினர். பிட்டன் மகன் கொற்றனும், அதியன் மகன் எழினியும் குதிரை மலையின் தலைவர்களாகக் குறிக்கப்படுகின்றனர் (புறம் 158, 168). பெருஞ்சேரல் இரும்பொறை அதியமானின் தகடூரை எறிந்த போது குதிரை மலையைக் கைப்பற்றிப் பிட்டன் கொற்றனுக்குக் கொடுத்திருக்க வேண்டும். பிட்டன் கோசர்களின் தலைவனாய் இருந்திருக்கலாம் (அகம். 133, புறம் 166). பிட்டன் நல்லியூரைச் சேர்ந்தவனாகக் கூறப்படுகிறான். இது கோசர்களின் நல்லூர் போல் ஒலிக்கிறது. புகளூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பெருங்கடுங்கோவே, பெருஞ்சேரல் இரும்பொறை என்றும், அவனே தகடூர் எறிந்தவன் என்றும் யான் கருதுகிறேன். அரிக்கமேட்டில் கிடைத்த பானை எழுத்துகளிலிருந்து புகளூர்க் கல்வெட்டுகள் இன்ன காலத்தைச் சார்ந்தவை எனத் திட்டவட்டமாகக் கூறலாம். இக்காலத்தில்தான் ஔவை, கபிலர், பரணர், பாரி, அதிகைமான் முதலியோர் வாழ்ந்தனர்" எனவும் திரு. ஐ. மகாதேவன் குறித்துள்ளார்.

பிட்டன் கொற்றன் என்று கல்வெட்டில் இல்லை. ஒரு கல்வெட்டில் கடைசி எழுத்து சிதைந்துள்ளது. அது 'பிடந்தை மகள் கீரன் கொற்ற . .' என்று உள்ளது. மற்றதில் 'பிடன் குறும்மகள் கீரந்நோறி' என்று உள்ளது. இரு கல்வெட்டுகளிலும் மகள் என்றே வருவதால் இரண்டும் பெண்களைக் குறிக்கின்றன என்று கொள்ளலாம். அவ்வாறாயின் பிட்டன் கொற்றன் என்றும் அவன் குதிரை மலையின் தலைவன் என்றும் கொள்ள இடமில்லை.

மேலும் இரு கல்வெட்டுகளிலும் 'நல்பி ஊர்' என்றே வருகிறது என்பதும் குறிப்பிடல் வேண்டும். இருப்பினும் 'பிடன்', 'கீரன்' 'ஓரி'' முதலிய பெயர்கள் சேரர் கல்வெட்டுக்கு அருகில் கிடைத்துள்ளது ஒரு சிறப்பாகும். சங்க இலக்கியங்களில் வரும் பல பெயர்களை இவை நினைவூட்டுகின்றன. ஆதலின் இவை சங்க காலக் கல்வெட்டுகள் என திரு. ஐ. மகாதேவன் குறிப்பது முற்றிலும் பொருத்தமே.

புகளூர்க் கல்வெட்டில் கருவூர் பொன் வாணிகன் குறிக்கப்படுகிறான். கருவூர் புகளூரிலிருந்து சுமார் பத்துக் கல் தொலைவில் இருக்கிறது. சேரர்களுடைய தலைநகராகக் கருவூர் குறிக்கப்படுகிறது. ஆதலின் இதற்கு அருகில் உள்ள கருவூரே சங்ககாலச் சேரர்களின் தலைநகராய் இருந்திருக்க வேண்டும் என்று திரு. ராகவ ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார். கருவூரில் ஓடும் 'ஆன்பொருனையே' 'ஆம்ராவதி' என திரிந்திருக்க வேண்டும். கருவூருக்கு வஞ்சி நகரம் எனப் பெயர் உண்டு. 'கருவூராகிய வஞ்சி மாநகர்' எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. இக்கருவூருக்கு அருகிலேயே சேரர் கல்வெட்டுகள் காணக்கிடைக்கின்றன. கருவூர் உள் நாட்டுப் பகுதியில் இருந்தது என்று பண்டைய மேலை நாட்டார் குறித்துள்ளனர். சங்க காலத்தில் மேலை நாடுகளுடன் இந்நகருக்கு வணிகத் தொடர்பு இருந்தது என்பதனை இவ்வூருக்கு அருகில் கிடைதுள்ள ரோமானிய நாணயங்கள் உறுதி செய்கின்றன. அன்றியும் சேரன் செங்குட்டுவனைப் பாடும் ஐந்தாம் பத்தில்

> "காவிரி அன்றியும் பூவிரி புனல் ஒரு
> மூன்று உடன் கூடிய கூடல் அனையை"

எனக் குறிக்கப்பட்டுள்ளது. காவிரியும் ஆன்பொருனையும், குடவன் ஆறும் ஒன்று• கூடும் கூடல் என்பது இதற்குப் பழைய உரை. 'ஆம்ராவதி' ஆறுதான் காவிரி ஆற்றுடன் கருவூருக்கு அருகில்

கலக்கிறது. அங்கு ‘முக்கூடல்’ என்னும் ஊர் இன்றும் உண்டு. கருவூர் ஆன்பொருனையின் கரையில் அமைந்தது என்று இலக்கியம் குறிக்கும். மேலும் உறையூருக்கு அருகில் கருவூர் இருந்தது என்பதும் சங்க நூல்களிலிருந்து அறியக் கிடைக்கிறது. இவற்றிலிருந்தும், இந்நகரின் அண்மையில் காணக்கிடைக்கும் கல்வெட்டுகளில் வஞ்சி குறிக்கப்படுவதிலிருந்தும், கருவூர் சேரர்களின் ஒரு தலைநகராய்த் திகழ்ந்தது என்பதில் இனி எவ்வித ஐயமும் இருக்க முடியாது. இதைச் சிலர் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இக்கருத்தை சிலர் ஏற்றுக்கொள்வதில்லை. மேலைக் கடற்கரையில் உள்ள கொடுங்கோளூரே வஞ்சி என்று கூறுவோரும் உளர். இதுவே சேரர்களின் பண்டைய தலைநகர் என்றும் பின்னரே கருவூர் தலைநகராகியிருத்தல் வேண்டும் என்றும் அவர் குறிப்பர். ஆதலின் இது குறித்து கருத்து வேறுபாடு உண்டு. மேலைக் கடற்கரையில் உள்ள இடமே வஞ்சி எனக் கூறும் இலக்கியச் சான்றுகள் காலத்தால் மிகவும் பிற்பட்டவை. அப்பகுதி வஞ்சி என்று குறிக்கக் கல்வெட்டுச் சான்று ஏதும் இதுகாறும் கிடைத்தில. கிடைத்துள்ள தொன்மையான சான்றுகள் அனைத்தும் கருவூரின் அருகிலேயே உள்ளன.

எப்படி இருப்பினும் புகளூர்க் கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

10. அரிச்சலூர் இசைக் கல்வெட்டு

முதல் கல்வெட்டு

த	தை	தா	தை	த
தை	தா	தே	தா	தை
தா	தே	தை	தே	தா
தை	தா	தே	தா	தை
த	தை	தா	தை	த

இரண்டாம் கல்வெட்டு

கை	த	தை	த	கை
த	தை	[த]	தை	த
தை	த	தை	த	தை
த	தை	[த]	தை	த
[கை	த	தை	த	கை]

மூன்றாம் கல்வெட்டு

எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

விளக்க உரை :

கொங்கு நாட்டில் ஈரோட்டிலிருந்து காங்கேயம் செல்லும் பாதையில் பன்னிரண்டு கல் தொலைவில் அரச்சலூர் என்ற சிற்றூர்ஒன்று இருக்கிறது. ஊரின் எல்லையில் சாலையோரமாக நாகமலை என்ற மலை ஒன்று உள்ளது. அதில் ஆண்டிப்பாறை என்ற பகுதி உள்ளது. அங்கு பாண்டியர் குழி என்ற பகுதி உண்டு. அங்கே பண்டை எழுத்துகள் உள்ள இயற்கைக் குகைத்தளம் இருக்கிறது. அதை அடைய மலையின் அடிவாரத்திலேயே செல்ல வேண்டும். ஆண்டிப்பாறையை அடைந்தால் இயற்கைக் குகைத்தளத்தை அடையலாம்.

இங்கே தரையில் அருகருகில் மூன்று பண்டையத் தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. முதற் கல்வெட்டு ஐந்தெழுத்துகள் கொண்டு ஐந்து வரிகளாக இருந்திருக்க வேண்டும்.

இரண்டாவது கல்வெட்டில் இரண்டாம் வரியும், ஐந்தாம் வரியும் சிதைந்துள்ளன. மூன்றாம் வரியில் நடு எழுத்து சிதைந்துள்ளது. ஆயினும் சிதைந்து போன எழுத்துகளை ஒருவாறு ஊகிக்கலாம்.

இவ்விரண்டு கல்வெட்டுக்களையும் இடமிருந்து வலமாகப் படித்தாலும் மேலிருந்து கீழாகப் படித்தாலும் ஒரே மாதிரி உள்ளதைக் காணலாம். இவை இசைத் துறையிலும், கூத்துத் துறையிலும், பாடவல்ல எழுத்துகளை நினைவுறுத்துகின்றன.

இக்கல்வெட்டில் 'புணருத்தான்' என்ற சொல்லின் சிறப்பு அறியப்படவில்லை. எனவேதான் 'பண்வித்தான்' என்றும், 'பூணதத்தான்' என்றும் பலவிதமாக இதைப் படித்துள்ளனர். புணருத்தான் என்பது புணர்த்தான் என்ற சொல்லின் திரிபே. ரகரம் ருகரமாகத் திரிவது வழக்கின் இயல்பே. புணர்த்தான் எனில் தொகுத்தான், சேர்த்தான் என்று பொருள்படும். முக்கியமாக எழுத்துகளைத் தொகுத்தல் அல்லது சேர்த்தலைப் புணர்த்தல் என்பது தமிழ் மரபு. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் 'புணரியல்'' என்றே ஒருபகுதி இருக்கிறது. இசைத்துறையில் எழுத்துகள் தனிநிலை வகித்ததும், உயிர் அளவு கடந்து இசைத்ததும் தொல்காப்பியச் சூத்திரத்திலிருந்து தெளிவுறும்.

இதனின்றும் வழக்கிலும் செய்யுளிலும் உள்ள எழுத்துகளைப் போல இசை எழுத்துகளைத் தொகுத்தலும் இசை நூல்களில் உள்ளது என்பது பெறப்படுகிறது. சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் குழலோனமைதி கூறுமிடத்து இளங்கோவடிகள்,

"சொல்லிய இயல்பின் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்"

என்று கூறுகிறார். அரும்பதவுரையாசிரியர், 'சித்திரப்புணர்ப்பாவது இசை கொள்ளும் எழுத்துகளின் மேல் பண்ணீர்மை நிறுத்தல், வஞ்சனைப் புணர்ப்பாவது இசை கொள்ள எழுத்தின் மெல்லொற்று வந்துழி மெல்லொற்று போல் நெகிழ்த்துப் புணர்த்தல், புணர்ப்போன் பண்பின் புணர்க்கத்தக்க பாடலாசிரியனை ஒத்த அறிவினை உடையன்' எனக் குறிக்கின்றார். இசைக்கும், தாளத்துக்கும் ஏற்ப எழுத்துகளைப் புணர்ப்பது சிலப்பதிகாரக் காலத்துக்கும் முன்பிருந்தே தமிழகத்தில் வழங்கிய பண்பு என்பது தெளிவாகும்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இசை எழுத்துகளை தொகுத்துக் கல்லில் பொறித்த பெருமை தேவன் சாத்தனைச் சாரும். இங்கு மற்றொன்றும் நினைவிற் கொள்ள வேண்டும். சிலப்பதிகாரம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அரச்சலூர்க் கல்வெட்டு சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் தோன்றியது என்பது ஒரு சிறப்பாகும்.

இக்கல்வெட்டு கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது. இதிலுள்ள மகரம் ணகரம் முதலிய எழுத்துகள் வட்டெழுத்தின் தொடக்கத்தைக் காட்டுகின்றன. மற்ற எழுத்துகள் தமிழ் எழுத்துகளாக விளங்குகின்றன. அண்மையில் தருமபுரி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களிலிருந்து ஒரு பேருண்மை வெளியாயிற்று. கி. பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்துகி. பி. 8-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் மொழிக் கல்வெட்டுகள் தமிழ், வட்டெழுத்து இரண்டும் கலந்த எழுத்துகளில் எழுதப்படுவதும் வழக்கம் என்பது புலனாயிற்று. அரச்சலூர்க் கல்வெட்டு இந்த வழக்கின் தொடக்கத்தைக் காட்டுவது மற்றொரு சிறப்பாகும்.

11. திருநாதர்குன்று கல்வெட்டு

ஐம்பத்தேழ னசனந் நோற்ற
சந்திரநந்தி ஆசிரிகர்
நிசீதிகை

விளக்க உரை :

செஞ்சியின் ஒரு பகுதியிலுள்ள ஒரு குன்று இன்று திருநாதர் குன்று என்று அழைக்கப்படுகிறது. அங்கு சமணத்துறவிகள் வாழ்ந்துள்ளனர். ஒரு பாறைப் பகுதியில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. சந்திரநந்தி என்னும் சமணப் பெரியார் 57 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர்நீத்த இடம் என இக்கல்வெட்டு கூறுகிறது. சமணப் பெரியார்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் நீத்தலை இது கூறுகிறது. கல்வெட்டு கி. பி. 6, 7-ஆம் நூற்றாண்டு எழுத்துகளில் உள்ளது. வட்டெழுத்தும், தமிழ் எழுத்தும் கலந்த எழுத்துகளில் இது எழுதப்பட்டுள்ளது. இதுகாறும் கிடைத்துள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் இதுவே தொன்மையானதாக கருதப்பட்டது. இப்போது இதற்கும் காலத்தால் முற்பட்ட பல வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. வட்டெழுத்தின் வளர்ச்சியை அறிய இது இன்றியமையாத கல்வெட்டு ஆகும்.

12. முதலாம் மகேந்திரவர்மனின் தண்டம்பட்டு நடுகல்

கோவிசைய மயீந்திரபருமற்கு
பதின்எட்டாவது
மீவேணாட்டு ஆந்தைபாடி ஈசை
பெரும்பாணரைசரு மருமக்கள்
பொற்சேந்தியாரு சேவகரு
தொறுக் கொண்ட ஞான்று
மீட்டு பட்டான் [வே]ணாட்[டு]
நந்தி[யார்] கல் க . .

விளக்க உரை :

வடஆற்காடு மாவட்டத்தில் செங்கத்திலிருந்து சிங்காரப் பேட்டைக்குப் போகும் வழியில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் தண்டம்பட்டாகும். சிங்காரப்பேட்டைக்கு கிழக்கே உள்ள வேடியப்பன் கோயிலில் காணப்படும் நடுகல்லில் இக்கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. இது பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் பதினெட்டாம் ஆட்சி ஆண்டில் (சுமார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) இறந்துவிட்ட ஒரு வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்.

மேல் வேணாட்டில் உள்ள ஆந்தைபாடி என்னும் ஊரை ஆள்கின்ற ஈசை பெரும்பாணரைசருடைய மருமக்கள் பொற்சேந்தியார் என்பவரின் சேவகன் ஆநிரைகளைக் கவர்ந்திருக்கிறான். அப்பொழுது வேணாட்டைச் சேர்ந்த நந்தி என்பான் அவ்வீரனோடு பொருது அவ்வாநிரைகளை மீட்கையில் வீர மரணம் அடைந்திருக்கிறான், அவன் நினைவாக இந்நடுகல் நடப்பட்டுள்ளது.

வேணாடு என்பதை வேள் நாடு என்று பிரிக்கலாம். இது இரண்டு பிரிவாக்கப் பெற்று மேல் வேணாடு என்றும் கீழ் வேணாடு என்றும் அழைக்கப் பெற்று வந்தது.

இக்கல்வெட்டில் காணப் பெறும் மருமக்கள் என்ற சொல் இப்பொழுது வழக்கில் உள்ள மருமக்கள் (Son-in-laws) என்ற பொருளில் அல்லது சிற்றரசர்கள் (feudatories) என்ற பொருளில் எடுத்தாளப்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள முடியவில்லை.

13. முதலாம் மகேந்திரவர்மனின் எடுத்தனூர் நடுகல்

I

கோவிசைய மயிந்திர பருமற்கு
முப்பத்து நான்காவது
வாணகோ அரைசரு மருமக்கள்
பொற்றொக்கைஆர் இளமகன்
கருந்தேவக்கத்தி
தன்னெருமைப் புறத்தே
வாடி பட்டான் கல்

II

[கோவிவ]ன் னென்னுந் நாய்
இரு கள்ளனைக் கடித்துக்
காத்திருந்தவாறு

விளக்க உரை :

வடஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டிலிருந்து தெற்கே ஆறு கல் தொலைவில், பெண்ணை ஆற்றின் வடகரையில் எடுத்தனூர் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. அவ்வூரின் மேற்கே ஒரு கல் தொலையில் ஊமை வேடியப்பன் கோயில் உண்டு. அக்கோயிலில் வழிபாட்டில் உள்ள தெய்வமே இந்நடுகல். இக்கல்லில் வட்டெழுத்தில் கல்வெட்டு எழுதப்பெற்றுள்ளது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மகேந்திரவர்மனின் 34-ஆம் ஆட்சி ஆண்டில், நிகழ்ந்த ஒரு போரைப் பற்றியும், அப்போரில் இறந்து விட்ட வீரனைப் பற்றியும், அவ்வீரனுக்கு உறுதுணையாக இருந்து, கடைசி வரையில் போராடி தலைவனோடே உயிர் நீத்த ஒரு நாய் பற்றியும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

வாணகோ அரைசருடைய மருமக்கள் பொற்றொக்கையாரின் இளமகன் கருந்தேவக்கத்தி என்பான் தனது எருமைகளின் பக்கலிலே

மாண்டான் எனத் தெரிவிக்கிறது. எருமைகளை வேற்று நாட்டார் கவர வந்தபோது அவைகளை மீட்கும் போரில் உயிர் நீத்திருக்க வேண்டும்.

இக்கல்வெட்டின் சிறப்பு யாதெனில் வீரனோடு உயிர் நீத்த நாயையும் அக்கால மக்கள் நினைவு கூர்ந்து வழிபட்டனர் என்ற செய்தியைத் தருவதேயாகும். ஐயறிவுடைய விலங்கின் தியாகத்தையும் தமிழக மக்கள் போற்றிப் பாராட்டினர் என்ற செய்தியை இக்கல்வெட்டின் மூலம் உணர முடிகிறது. அந்நாயின் பெயர் கோவிவன் என்றும், அது எருமைக் கூட்டத்தைக் கவரவந்த கள்ளர்களோடு போராடி உயிர் விட்டது என்றும் அதன் பெருமை கல்லிலே பொறித்து வைக்கப்பட்டுள்ளது என்றும் அறிகிறோம்.

14. இரண்டாம் நரசிம்மவர்மனின் தா. வேளூர் நடுகல்

கோவிசைய நரசிங்கபருமற்கு இரண்டாவது
வாணகோஒ அதிரைசர்[1] சேவகர்
மீ கொன்றை நாட்டு மேல் வேளூர் ஆளும்
பனையமாரியார்[2]
இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்றுபட்டா[ர்]

---

1 வாணகோன் அதிரைசர் என்று எபிகிராபியா இந்திகா தொகுதி 32-ல் படிக்கப்பட்டுள்ளது.

2 'பறையமாளியார்' என்று மேற்கூறிய நூலில் படிக்கப்பட்டு உள்ளது.

விளக்க உரை :

வடஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில் தானிப்பாடிக்கு வடக்கே சுமார் ஒரு கல் தொலைவில் தா. வேளூர் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரின் வடக்கே சுமார் ½ கல் தொலைவில் வேடியப்பன் கோயில் ஒன்றுள்ளது. இக்கோயிலில் வழிபாட்டில் உள்ள சிலைதான் இந்த நடுகல் கல்வெட்டு, வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னன் இரண்டர்ம் நரசிம்மவர்மனின் இரண்டாம் ஆட்சி ஆண்டில் எழுதப்பட்டிருக்கிறது. மேல் கொன்றை நா்ட்டு மேல் வேளூரை ஆண்ட பனையமாரியார் என்பார் பாண அரசர்க்காக ஆநிரைகளைக் கவர்ந்தபோது வீர மரணம் எய்தியதைத் தெரிவிக்கிறது.

15. கம்பவர்மனின் சின்னையன்பேட்டை நடுகல்

ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய கம்ப பருமற்கு
யாண்டு மூன்றாவது
வயிரமேக வாணகோவரையர் சேவகன்
மீகுன்றை ஞாட்டு மலையனூருடைய செம்பத்
தொண்டன் மகன் காரிப்பெருமான்
பாசாற்றெருமைத் தொறு எயினாட்டார் கொள்ளப்
பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று
கோவூர் நாட்டுச் சிற்றிடையாற்று
முதுகொன்றை மூக்கின் மீமலை அயங்கயக்கரையிற்
சென்று முட்டி
மலையனூருடைய செம்பர் மகன்னான காரிப்பெரு
மான்னன் உரையிலம்புமாள எவ்விப் பத்திரமுருவி
எதிரே சென்று பட்டான்

விளக்க உரை :

வடஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டத்தில் தானிப்பாடியிலிருந்து ரெட்டியூருக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் சின்னையன்பேட்டை ஆகும். இவ்வூரின் வடக்கே சுமார் ஒரு கல் தொலைவில் பாம்பன் ஆற்றங்கரையில் ஒரு வேடியப்பன் கோயில் இருக்கிறது. அவ்வேடியப்பன் கோயில் சாவுமேட்டு வேடியப்பன் கோயில் என்று அழைக்கப்பெறுகிறது. இவ்வேடியப்பன் கோயிலில் மூன்று நடுகற்கள் உள்ளன. மூன்றும் உடைந்து துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கின்றன. அவைகளிலே ஒன்றான இந்நடுகல் பல்லவ மன்னன் கம்பவர்மனின் 3-ஆம் ஆட்சி ஆண்டில் எழுதப்பட்டுள்ளது.

மலையனூரில் வாழும் செம்பத்தொண்டனின் மகன் காரிப்பெருமான். இவன் வாணகோவரையரின் சேவகன். பாசாற்றூரைச் சேர்ந்த எருமை நிரைகளை எயில் நாட்டார் கவர

முற்பட்டபோது அவர்களை எதிர்த்துக் காரிப்பெருமான் போரிட்டான். அப்போரில் அவன் இறந்துபட்டான். அவனது வீரச்செயலைப் பாராட்டி எடுக்கப்பட்டது இந்நடுகல்.

கம்பவர்மன் காலத்திலிருந்து நல்ல தமிழ்க் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சில கல்வெட்டுகள் உரைநடைக் காப்பியமாக விளங்குகின்றன.

'பூசலிட', 'பூசல் சென்று' போன்ற சொற்கள் புறத்திணையை நினைவுபடுத்துகின்றன. 'உரையில் அம்புமாள எவ்விப் பத்திரமுருவி' என்பது எதிரிகளோடு தொடர்ந்து போரிட்டதால் தான் வைத்திருந்த அம்புகளெல்லாம் தீர்ந்து போய், இடையில் செருகியிருந்த கத்தியை (பத்திரத்தை) உருவியதைக் குறிக்கிறது.

16. கம்பவர்மனின் திருவாமூர் நடுகல்

ஸ்ரீ கம்ப பருமற்கு
யாண்டு இருபதாவது
பட்டை பொத்தனுக்கு ஒக்கொண்ட நாகன் ஒக்க
திந்தன் பட்டை பொத்தன் மேதவம் புரிந்ததென்று
படாரிக்கு நவக்கண்டங் குடுத்து
குன்றகத்தலை அறுத்துப் பிடலிகை மேல்
வைத்தானுக்கு
திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது
எமூர்ப் பறைகொட்டக்
கல்மேடு செய்தாராவிக்குக் குடுப்பாரானார்
பொத்தனங் கிழவர்களும் தொறுப்பட்டி நிலம்
குடுத்தார்கள்
இது அன்றென்றார்
கங்கையிடைக் குமரிஇடை எழுநூற்றுக் காதமும்
செய்தான் செய்த பாவத்துப் படுவார்
அன்றென்றார் அன்றாள் கோவுக்கு
காற்பொன் றண்டப் படுவார்

விளக்க உரை :

பல்லவ மன்னன் கம்பவர்மனின் இருபதாவது ஆட்சியாண்டில் பட்டை பொத்தன் என்பான் போரில் வெற்றியடைவதற்காக ஒக்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் என்பான் தன் தலையை அரிந்து பிடாரியின் பீடத்தில் வைத்தான். அவனுக்குத் திருவான்மூர் ஊரார் பறைகொட்டி, கல்நட்டு சிறப்பு செய்தார்கள். நிலமும் கொடையாக அளிக்கப்பட்டது. இக்கொடைக்கு மறுப்புத் தெரிவிப்பவர் கங்கைக் கரையிலிருந்து குமரிக்கரை வரையில் இடைப்பட்ட எழுநூறு காதத்திலும் உள்ளோர் செய்த பாவம் அனைத்தும் அடைவார். மேலும் அப்பொழுது ஆள்கின்ற மன்னனுக்குக் கால் பொனதண்டமும் அளிக்கவேண்டும். நவகண்டங்குடுப்பவர்க்கும் நடுகல் எடுக்கும் பழக்கம் இருந்திருக்கிறது என்பது இக்கல்வெட்டிலிருந்து தெளிவாகிறது.

17. ஈரோட்டுக்கு அருகிலுள்ள பழமங்கலம் நடுகல்

வாய்த்த புகழ் மங்கலத்து
வந்தெதிர்த்த மாற்றலரை

சாய்த்த மகன் வென்ற
சயம் பெருக

நீக்குவனம் கற் பொறிக்கப் பட்டான்
கரடிகுல

சொக்கனேந்தலே உலகிற் காண்.

விளக்க உரை :

கோவை மாவட்டம் ஈரோட்டிலிருந்து சுமார் 15 கல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. இங்கு வேடன் கோயில் என்று வழங்கப்படும் இந்நடுகல் ஒரு இல் போல் அமைக்கப்பட்டுள்ளது. “இல் கொண்டு புகுதல்” என்ற பண்டைய மரபை இது சுட்டுகிறது. இதில் வீரனின் உருவம் கையில் குறுவாள் ஏந்தி நிற்கின்றானாக, உள்ளே பின் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அதிலேயே இவ்வழகிய தமிழ்ப் பாடலில் அவ்வீரனின் பீடு பொறிக்கப்பட்டுள்ளது. புகழ்மங்கலம் என்று குறிக்கப்பட்டுள்ள ஊரே இப்போது பழமங்கலம் என்று கூறப்படுகிறது. வீரன் கரடி என்னும் குலத்தைச் சேர்ந்தவன். இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நடுகற்களில் தமிழ்ப்பாவில் பீடு பொறிக்கப்பட்டுள்ளது இதுவே. இக்கல்வெட்டு சற்றேறக்குறைய கி. பி. 13-14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

18. கம்பவர்மனின் தா. வேலூர் நடுகல்

ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்பபருமற்கு
யாண்டெட்டாவது
வயிரமேக வாணகோவரையராள்த்
தகடூர் நாட்டுப் பாகாற்றூர்க் கதவமாதேவன் மகன்
காளம[ன்]
மீய்கொன்றை நாட்டு மேல் வேளூர் இருந்து வாழா
நின்ற காலத்து
முருங்கைசேரி நத்தத . . . ன்றமையனார் மகளைக்
கள்ளர் பிடிக் . த்தூரந் . கொண்டெய்[ய] .
அவளை விடுவித்துத் தான் பட்டான் காளமன்

விளக்க உரை :

முருங்கைச்சேரி என்னும் ஊரிலிருந்த ஒரு பெண்ணை கள்ளர் கடத்திச் சென்றனர். மேல் வேளூரில் வாழ்ந்த காளமன் என்பவன் அக்கள்ளர்களைத் துரத்திச் சென்று அப்பெண்ணை மீட்டான். அப்போரில் அவன் தன் இன்னுயிரை இழந்தான். அவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் இது.

19. அரிமிதைய மாவலிவாணராயரின் தகடூர் நடுகல்

ஸ்வஸ்தி ஸ்ரீ அரிமிதைய மாவலி வாணராயர்
கங்க நாடும் புறமலை நாடும் கோயினூர் நாடும் கோவூர்
நாடும் தாயனூர் நாடும் பற்ற நாடும் ம . .
அவர்க்குத் தாநாகிப் பிள்ளைய் கொண்டுள் புகுந்து
வஞ்சித்து நாடு கொண்டா னுளம்பன்
அவர் போரிற் றுஞ்சின பின்னைத்
தேவிமார் கருப்பிணி யருளராக
அவளைக் காத்திருந் தாண்பிள்ளைப் பெறுவதுந்
தகடூர் புகுந்து நுளம்பன் பலத்தோடே துணிந்து
நாடு பாவிநார் சங்கரகுட்டியார்
அவரோடுடன் புகுந்து
தகடூரில் பட்டார்
நாகந்தை சிறுகுட்டியார்
கல் நாடு.

விளக்க உரை :

மாவலிவாணராயர் தகடூர்ப் பகுதியை ஆண்டார். நுளம்பன் என்பவன் அவருடைய உறவினன் போல் நடித்து, வஞ்சித்து அவருடைய நாட்டைக் கைப்பற்றினான். அப்போரில் மாவலி இறந்தார். அவர் மனைவி கருவுற்றிருந்தாள். சங்கரக்குட்டியார் என்பவர் அத்தேவியைக் காப்பாற்றி அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தவுடன் படை திரட்டிக் கொண்டு தன் தலைவனை வஞ்சித்துக் கொன்ற நுளம்பன் மீது போர் தொடுத்தார். இப்போரில் சங்கரக்குட்டியாருடன் சென்ற நாகந்தைச் சிறுகுட்டியார் என்னும் வீரன் இறந்தான். அவனுக்கு இக்கல் நடப்பட்டது. தன் தலைவன்பால் கொண்ட பற்றின் காரணமாக அவன் மனைவியைக் காத்து இறுதியில் தலைவனை வஞ்சித்தவனை வெஞ்சமரில் வென்ற வீரனின் பீடு இது. கி.பி 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு, அக்காலத் தமிழ் மகனின் பண்பைக் கூறுகிறது.

20. முதலாம் மகேந்திரவர்மனின் மோத்தகல் நடுகல்

கோவிசைய மயிந்திரபருமற்கு
முப்பத்திரண்டாவது
பொன்மோதனார் சேவகன்
வின்றண்[வ]டுகன்
புலி குத்திப் பட்டான்
கல்

விளக்க உரை :

வடஆர்காடு மாவட்டம், செங்கம் வட்டம் மோத்தகல் என்ற ஊரில் கிடைத்துள்ள நடுகல் கல்வெட்டு புதிய செய்தியினை நமக்குத் தெரிவிக்கிறது. பெரும்பான்மையான நடுகல் கல்வெட்டுகள், வீரர்கள் விழுப்புண் ஏற்று வீரமரணம் அடைந்தை நமக்குத் தெரிவிக்கின்றன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்திரண்டாவது ஆட்சியாண்டில் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு பொன்மோதனார் என்பவருடைய சேவகன் வின்றண் [வ]டுகன் என்பான் புலியைக் குத்தி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

21. அய்யப்பதேவனின் ரெட்டியூர் நடுகல்

ஸ்வஸ்தி ஸ்ரீ அய்யப்பதேவன் நாடாள
வேணாடுடைய இ[னா]சப்பையனார்
அடியான் அளய்குட்டி
பன்றி குத்தி பட்டான்

விளக்க உரை :

தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் ரெட்டியூரில் கிடைத்துள்ள இக்கல்வெட்டு, அய்யப்பதேவன் என்ற மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் (கி. பி. 9-ஆம் நூற்றாண்டு) பொறிக்கப்பட்டதாகும். இது வேணாட்டை ஆண்ட இ[னா]சப்பையனார் என்பாருடைய சேவகன் அளயகுட்டி என்பான் பன்றியைக் குத்தி வீரமரணம் அடைந்ததைத் தெரிவிக்கிறது.

22. முதலாம் இராஜேந்திரனின் திருவையாறு கல்வெட்டு

கோப்பரகேசரி பநூராந உடையார் ஸ்ரீராஜே஌ேவர்க்கு[1]

யாண்டு ரு ஆவது[2]

ராஜே஌சிங்க வளநாட்டு பொய்கை நாட்டு திருவையாற்றுத் தென் கயிலாயமுடையார் கோயிலில் ஆடவல்லார்க்கு

நம்பிராட்டியார் த்ரைலோக்கியமுடையார்[3] அதிகாரிச்சி முத்தான பொந்நங்கை சாத்தி அருளத்

திருக்கழுத்துக்கு இட்ட சண்பங்காறை ஒன்றுங் குடிஞைக் கல்லால் பொந் அறுகழஞ்சும் இதில் கட்டிந மாணிக்கம் ஒன்றும் வயிர மிரண்டும் உட்பட நிறை அறுகழஞ்சேய் மஞ்சாடியும் மஞ்சு மாவும்

திருக்கைக்கு சாத்தி அருள இட்ட திருக்கைக்காறை ஒன்று பொந் இரு கழஞ்சாக இரண்டிநால் பொன் அறுகழஞ்சும்

ஆக பொந் இருபதின் கழஞ்சும் இது மாணிக்கம் ஒன்றும் வயிரம் இரண்டும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் மஞ்சாடியும் மஞ்சு மாவும்

இவர் நம்பிராட்டியார்க்கு சாத்தி இருள இட்ட ஒற்றைத் தாலிமணி பதின்று ஒருபது முடையின . ங்கு ஒன்றும்

கொக்குவாய் ஒன்றும்

படுகண் ஒன்றும்

கோத்த நாணுட்பட நிறை முக்கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியு மஞ்சு மாவும்

திருக்காதுக்கு சாத்த இட்ட நா[றை] கண்பட்டி இரண்டி[ன்]னால் பொந் அரைக்கழஞ்சேய் நாலு மஞ்சாடியு[ம்] மஞ்சுமாவும் ஆகப் பொந் ந[ர]க்க[4]

---

1 ஸ்ரீராஜேந்ர தேவர்க்கு
2 3 ஆவது
3 த்ரைலோக்கியமுடையார்
4 கல்வெட்டின் பிற பகுதிகள் கிடைக்கவில்லை.

விளக்க உரை :

சோழர் காலத்தில் அரசியல் பதவிகளில் ஆண்கள் உயர்ந்த அதிகாரிகளாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அவர்களோடு பெண்களும் உயர் அதிகாரிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதை இக்கல்வெட்டு நமக்கு எடுத்துக் கூறுகிறது. நாடாளும் அரசரின் தேவிக்குத் தனியாக அதிகாரிகள் இருந்தார்கள் என்பதும் இதிலிருந்து தெரிகிறது. இக்கல்வெட்டில் முதல் இராஜேந்திர சோழனின் தேவி த்ரைலோக்கியமுடையாள் என்பவள் குறிக்கப்படுகிறாள். அவளது அதிகாரிச்சி (பெண் அதிகாரி) திருவையாறு கோயிலுக்குத் தானமளித்திருக்கிறாள். அவளது பெயர் முத்தான பொந்நங்கை என்பதாகும்.

23. தந்திவர்மனின் திருவெள்ளறைப் பாடற் கல்வெட்டு

ஸ்ரீ கண்டார்காணா வுலகத்திற் காதல்செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன்படைத்த நாள் பார்த்து நின்று நைய்யாதேய்
தண்டார்முப்பு வந்துன்னை தளரச் செய்து நில்லா முன்
னுண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய்

விளக்க உரை :

திருச்சிக்கு அருகில் திருவெள்ளறை என்னும் ஊரில் சுவஸ்திகை வடிவில் ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது. அது சற்றேறக்குறைய கி.பி. 800-இல் தந்திவர்மன் என்னும் பல்லவ அரசனின் ஆட்சியில் தோண்டி வைக்கப்பட்டது. இதை ஆலம்பலக்கிழான் விசைய நல்லூழான் என்பவன் தோண்டியமைத்தான். இக்கிணறு மார்ப்பிடுகுப் பெருங்கிணறு என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அக்கிணற்றில் இவ்வழகிய கல்வெட்டுப்பாடல் அதே காலத்தில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

24. அபராஜிதவர்மனின் திருத்தணிப் பாடற் கல்வெட்டு

திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்கு
கருங்கல்லால் கற்றளியா நிற்க-விரும்பிய
நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பி அப்பி
பொற்பமைய செய்தான் புரிந்து

விளக்க உரை :

திருத்தணியில் வீரட்டானம் என்னும் மிக அழகிய கற்கோயில் ஒன்று உள்ளது. அதில் சிறந்த சிற்பங்கள் உள்ளன. கழுத்துப் பகுதிக்கு மேல் இக்கோயில் துக்கானை மாட வடிவில் உள்ளது. இவ்வருங் கோயிலைப் பல்லவ மன்னன் அபராஜிதவர்மன் காலத்தில் நம்பி அப்பி என்பவன் கருங்கல்லால் கட்டி வைத்தான் என்பதை இக்கல்வெட்டு கூறுகிறது. இதை இயற்றியவன் அபராஜிதவர்ம பல்லவனே என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

25. சோழர்காலப் பாடற் கல்வெட்டு

முவண்டறை தார்மன்னர் மலைபடைத் தெந் மன்னரை
வென்கண்ட திறற்காங்கேமன் கண்சிவப்ப-பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மாலவரை செஞ்சொரி
அலைகடாம் பாட்டுண்டது

விளக்க உரை :

வடஆர்க்காடு மாவட்டம், செங்கம் என்ற ஊரில் உள்ள ரிஷபேஸ்வரர் ஆலயத்திலிருந்து இக்கல்வெட்டு படியெடுக்கப்பட்டது. இது வெண்பா அமைப்பில் உள்ளது. இதன் காலம் சுமார் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டாகும். இக்கல்வெட்டில் சங்க இலக்கியங்களில் ஒன்றான 'மலைபடுகடாம்' குறிக்கப்படுகிறது.

26. சோழச் சேனாபதி நரலோகவீரன் தில்லையில் திருப்பணி செய்வித்ததைக் குறிக்கும் பாடற் கல்வெட்டு

தில்லையில் பொன்னம்பலத்தைச் செம்பொநால் மேந்து வா
நெல்லையைப் பொந்நாக்கி நாநெென்பரால்-ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்க வேல் வாங்கும்
குடைவேந்தர் தொண்டையார் கொல்

விளக்க உரை :

சோழ மன்னர்களில் முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகிய மன்னர்களுக்குப் பிறகு சோழ நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி செய்தவன் முதலாம் குலோத்துங்கச் சோழனாவான். இவனது காலம் கி.பி. 1070 முதல் 1120 வரை ஆகும். இம்மன்னனின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவன் இவனுடைய சேனாதிபதிகளிலே ஒருவனான நரலோகவீரன் என்பவனாவான். இவன் சமயப்பற்றும் நிரம்பியவனாக இருந்தான். தில்லை, திருவதிகை ஆகிய ஊர்களிலுள்ள சிவத்தலங்களுக்குப் பெரிதும் உதவியுள்ளான். அக்கோயில்களின் பல பகுதிகளைப் புதுப்பித்துள்ளான். அவ்வாறு அவன் செய்த திருப்பணிகளுள் தில்லையிலுள்ள கூத்தபிரான் வீற்றிருக்கும் பொன்னம்பலத்தைச் செம்பொன்னால் புதுப்பித்ததைத் தெரிவிக்கிறது இப்பாடற் கல்வெட்டு. இதைப் போன்ற பல பாடல்களில் இம்மன்னனின் மற்ற திருப்பணிகளையும் விளக்கித் தில்லை நடராசப் பெருமானின் ஆலயத்தில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

27. இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தி

பூமருவிய திருமாதும் புவிமாதும் செயமாதும்
நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க
அருமறை விதிநெறி யனைத்துந் தழைப்ப
வருமுறை யுரிமையில் மணிமுடி சூடித்
திங்கள் வெண்குடைத் திசைக்களி றெட்டுந்
தங்கு தனிக்கூடந் தானென விளங்கக்
கருங்கலி பட்டியைச் செங்கோல் துரப்பப்
பொருகதி ராழி புவிவளர்த் துடன்வர
வில்லவ ரிரட்டர் மீனவர் சிங்களர்
பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய
எண்ணருங் கற்பம் மண்ணகம் புணர்ந்து
செம்பொன் வீர சிம்மா சனத்து
புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவனச்சக்ரவர்த்திகள்
ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு

விளக்க உரை :

மெய்க்கீர்த்திகள் என்றால் உண்மைச் சிறப்புகள் என்று பொருள். மன்னர்களின் உண்மைச் சிறப்புகளை மெய்க்கீர்த்தி என்ற பகுதியில் விரித்துரைப்பது பண்டைய மரபு. பன்னிருபாட்டியல் (சூத்திரம் 198) என்னும் நூல் மெய்க்கீர்த்தி என்றால் அரசனது வழிமுறையையும், புகழையும் விரித்துரைப்பதோடு அரசன் அரசியர்களின் வாழ்நாட்கள் மிகுதிப் படவேண்டும் என்று வாழ்த்தி அவர்களின் உண்மைப் பெயர்களையும் ஆட்சி ஆண்டையும் குறிக்கும் என்று கூறுகிறது. வெண்பாப் பாட்டியல், நவநீதிப் பாட்டியல்,

சதுரகராதி போன்ற நூல்களும் மெய்க்கீர்த்தி எவ்வாறு எழுதப்படவேண்டும் என்று தெரிவிக்கின்றன.

இதை அடிப்படையாகக் கொண்டு சோழர் காலத்தில் மெய்க்கீர்த்திகள் எழுதப்பட்டிருக்கின்றன. சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் காலம் முதல் கல்வெட்டுகளிலே மெய்க்கீர்த்திகள் சிறந்த முறையில் எழுதப்பெற்றுள்ளன. இந்த கல்வெட்டு இரண்டாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தியாகும். இரண்டாம் இராஜராஜனுக்கு நான்கு வகையான மெய்க்கீர்த்திகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவனுடைய கல்வெட்டுகளில் அதிகமாக காணப்படுவது "பூமருவிய திருமாதும்" என்ற மெய்க்கீர்த்தியாகும். இவனுடைய மற்றொரு மிக நீளமான மெய்க்கீர்த்தி "பூமருவிய பொழிலேழும்" என்று ஆரம்பமாகும். அந்த மெய்க்கீர்த்தியில் இரண்டாம் இராஜராஜன் "முத்தமிழுக்குத் தலைவன்" என்று போற்றப்படுகிறான்.

மெய்க்கீர்த்தி பற்றி இலக்கியங்களில் என்ன கூறுகின்றனவோ அவைகளுக்கேற்ப கல்வெட்டுகளிலும் மெய்க்கீர்த்திகள் எழுதப்பட்டுள்ளன. இம்மெய்க்கீர்த்திகள் அரச அவையில் இருந்த சிறந்த புலவர்களால் எழுதப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இங்கே கொடுக்கப்பட்டுள்ள மெய்க்கீர்த்தியில் இரண்டாம் இராஜராஜனின் சிம்மாசனம் செம்பொன் வீரசிம்மாசனம் என்றும், அவனது பட்டத்தரசி புவன முழுதுடையாள் என்றும், பாண்டியன், சிங்களன், சேரன், இரட்டர், பல்லவர் முதலான மன்னர்கள் இவனால் தோற்கடிக்கப்பட்டனர் என்றும் குறிக்கப்படுகிறது.

28. சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி (கி.பி. 1251 – 1270)

பூமலர் வளந் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப
நாமலர் வளர் கலைவஞ்சி நலிமிகுமா மனத்துறையச்
சிமையவரைத் திறல்மடந்தை திருத்தோளின் மிசைவாழ
விமையவர்கோ னன்றிட்ட வெழிலாரங் கழுத்திலங்கப்
பகிரதிபோற் றுய்யபுகழ்ப் படர்வல்லி கொழுந் தோட்டத்
திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவத்
தண்டரள மணிக்கவிகை தெண்டிரைசூழ் பார் நிழற்ற
வெங்கோபக் கலிகடந்து செங்கோலெண் டிசை நடப்பச்
செம்முரசின் முகில் முழங்கச் சிலையகன்று விசும் படையத்
திறற்புலி போய் வனமடையக்
கயலிரண்டு நெடுஞ்சிரேக் கனவரையின் விளையாட
வொருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்
தருமறையோ ரைவேள்வி யாறங்க முடன் சிறப்ப
வருந்தமிழு மாரியமு மறுசமயத் தறநெறியுந்
திருந்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்கக்
குச்சரரு மாரியரும் கோசலரும் கொங்கணரும்
வச்சிரருங் காசியரு மாகதரும் . . . . .
அருமணருஞ் சோனகரு மவந்தியரு முதலாய
விருநில மாமுடிவேந்தரி றைஞ்சிநின்று திறைகாட்ட
வடிநெடு வாளும் வயப்பெரும் புரவியுந்
தொடிநெடுந் தோளுமே துணையெனச் சென்று
சேரனுந் தானையுஞ் செருக்களத் தொழிய
வாரசும் புலரா மலைநாடு நூறப்
பருதிமா மரபிற் பொருதிறல் மிக்க

சென்னனியைத் திறைகொண்டு திண்டோள் வலியிற்
பொன்னிநாட்டுப் போசலத் தரைசர்களைப்
புரிசையி லடைத்துப் பொங்கு வீரப் புரவியுஞ்
செருவிற லாண்மைச் சிங்கணன் முதலாய
தண்டத் தலைவருந் தானையு மழிபடத்
துண்டித் தளவில் சோரிலெங்கலுழிப்
பெரும்பிணக்குன்ற மிருங்கள லிறைத்துப்
பருந்தும் காகமும் பாறுந்(த) சையும்
அருந்தி மகிழ்ந்தாங்க கமர்க்கள மெடுப்பச்
செம்பொற் குவையுந் திகழ்கதிர் மணியு

விளக்க உரை :

கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தி எழுதும் பழக்கம் சோழர் காலத்தில் சிறப்படைந்தது அல்லவா. அதனைத் தொடர்ந்து பாண்டியர் காலத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்பெறும் மெய்க்கீர்த்திகள் சோழர் காலத்தில் இருந்ததைவிட தமிழ் நடையில், பா வடிவில் சிறந்து விளங்குகின்றன.

இங்கே கொடுக்கப்பட்டுள்ளது பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி. இம்மன்னன் கி.பி. 1251 முதல் 1270 வரை அரசாண்டுள்ளான். இம்மன்னனுக்கு நான்கு வகையான மெய்க்கீர்த்திகள் எழுதப்பட்டுள்ளன. அவைகளிலே அதிக அளவில் காணப்படுவது 'எம்மண்டலமும் கொண்டருளிய' என்று ஆரம்பமாகும் மெய்க்கீர்த்தியாகும். அவனுடைய மிக நீளமான மெய்க்கீர்த்தி இக்கல்வெட்டில் ஆரம்பமாகியிருப்பது போன்று "பூமலர் வளர் திகழ்" என்று தொடங்கும். இவனுடைய கல்வெட்டுகளில் சில "சமஸ்தஜகதாதார" என்ற வடமொழி உரைநடையோடு ஆரம்பமாகும்.

இம்மன்னனின் காலத்தில் பாண்டிய நாடு இழந்திருந்த தன் பெருமையை மீண்டும் நிலை நிறுத்திக் கொண்டது. இவன் ஆந்திர தேசத்தில் உள்ள நெல்லூர் கடப்பைப் பகுதி வரை தனது ஆட்சிப் பகுதியை விரிவாக்கினான். "அருந்தமிழும் ஆரியமும் அறுசமயத் தறநெறியும் திருந்துகின்ற மனுநெறியும்" திறம்பாமல் இவன் ஆட்சி செய்ததையும் இவனது படைப் பெருமையைக் கண்டு பகைமன்னன் அஞ்சி நடுங்கியதையும் இம்மெய்க்கீர்த்தி விரித்துக் கூறுகிறது.

29. விஜயநகர மன்னர் வீரப்பிரதாப சதாசிவராயர் காலத்தியக் கல்வெட்டு

ஸேதுவந்த ஸகலஸாரஸ்ய ஸ்ரீமாந் வேங்கடதேசிக:। விநாமணி மஹாமா[ம்] ஸ்ரீரங்கேஸாயத்தவாந் ॥

ஸாஹஸ்ர [॥] ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ மந் மஹா இராஜாதிஇராஜ இராஜ[ப]ரமேஸ்வர ஸ்ரீவீரப்ரதாப ஸ்ரீ ஸதா ஸதாஸிவ இராய மஹாஇராயர் ப்ருத்வி இராஜ்யம் பண்ணி அருளா நின்ற ஸகாப்தம் ஆசாகூடின இதன் மேல் செல்லாநின்ற விஸ்வாவஸு ஸம்வத்ஸரத்து மார்கழி மாஸத்து பூர்வ பக்ஷத்து ஸப்தமியும் ஸோம வாரமும் பெற்ற ரோஹிணி நக்ஷத்ரத்து

தென்கரை பாண்டிகுலாசனி வளனாட்டு விழாவறாவீதி (வீதி) வளனாட்டு திருவரங்கந் திருப்பதி *ஸ்ரீரங்கநாய* தேவர் ஸ்ரீபண்டாரத்துக்கு *ஸ்ரீஸௌம்ய ஜாமாதுயதாநு தாதாசார்ய*ரான ஔவுக்குத் திருவேங்கடயங்கார் *ஸிலாஸாஸநம்* பண்ணி சமர்ப்பித்த படி

தென்கரை இராஜகம்பீர வளநாட்டு தஞ்சாஊர் உசாவடி உறையூர் கூற்றத்து கீழ்பலாற்று தேவதானத்துக்கு மேற்கு திருச்சிராப்பள்ளி மண்கோட்டைக்கு வடக்கு

கிருஷ்ணராய அலவந்தபுரம் உறையூர் வெட்டிக்கு கிழக்கு

திருக்காவேரிக்கு தெற்கு

இன்னாங்கெல்லைக்குள்பட்டு முன்னாள் திருவரங்கன் திருப்பதி பிடாகையாக்கி பின்பு நலந்திகழ் நாராயண ஜீயர் திருவரங்கன் திருப்பதியை யாறு கொள்ளுகிறது கண்டு

மேல்முகம் ஆனைக் காத்தான் கரைக்கு யுந்ஸ்தாபநமும் பண்ணி *ஸாஸ்தா*வையும் *ப்ரதிஷ்டி*த்து

கிழியாறுங் கிழித்து தென் திருக்காவேரி மலடு செய்வித்து மலடனாறு கெட வடகரை நாணல் நடவும்

கிழியாற்றுக்கு தென்கரை னாணல் நடாமல் சிந்தாம[ணியில்] இடங் கொடுக்க[வும்] கட்டளை இட்டு சிந்தாமணி மஹாராஜனங்களுக்கு கொளகுட்டை *க்ரா*மம் பரிவர்த்தனை பண்ணிக் கொடுக்கையில்

சோழன் அழைப்பித்து சந்நியாசியானவன் *ஸவபூஹூத ஸௌஹார்த்த*முண்ட[ாய்] இருக்க வேண்டி இருக்க இப்படி *ப்ராஹ்மண ஹிம்*சை பண்ணலாமோ என்று கேழ்க

*ப்ராஹ்மண ஹிம்*சைக்கு ஆக்ஞை இடுகிற பரதேவதை தானே . . . . *நிஷித்தக்ரத வாவஷ்(வி)யஷ்ராய* கஹூதே என்று *ஸ்ரீபகவத்* கீதையிலே சொன்னது கண்டு செய்தோங் காணுமென்ன

அது கேட்டு சோழன் சந்தோஷித்து இதுவே நினைவாநால் இந்தப் பாவம் அடிக்கழங்சு பொன்பெறுமென்று ஸ்ரீஇரங்கநாததேவர்க்கு தாரைவாத்து கொடுத்ததுக்கு பின்பு

நெடுநாளைக்கு மேலாகச் சி[ல] காலம் பண்டார வாடையாய் திறந்து போன சிந்தாமணி *க்ரா*மம் க-க்கு தானமாநியம் நிலம் நஞ்செ நிலம் 7 1/4–1/10 புன்செ நிலம் [7]1 3/4 ஆக நிலம் 14 1/10 இதுக்கு பொன் ரா*சய*க

---

1. 6 இருக்கவேண்டிய இடத்தில் 7-ஐயோ அல்லது 15 இருக்கவேண்டிய இடத்தில் 14-ஐயோ தவறாக எழுதப்பட்டுள்ளது போன்று தெரிகிறது.

சிந்தா[மணி] நத்தம் செய்த்தலைத்திடர் வாஸ்துவாஸ்துசேஷம்[1] ஆறுப்ராப்தி[2] வெள்ளாங்குடி இருப்பு [க] மற்றும் எப்பேர்பட்ட சகல சமுதாய ப்ராப்தியும்[3] உட்பட நிதி நிக்ஷேப[4] ஜலபாஷாணாதி அஷ்டபோக தேஜஸ்வாம்யங்களும்[5] உள்பட

நமக்கு நம்முடைய ப்ரியசிஷ்யநாய[6] ஸ்வஸ்தி [।] ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வர சோமகுலதிலகாயமான[7] நான் இராம இராஜா சதாசிவராய மஹாஇராயர் கையில் ஏகபோகமாய்[8] தாரைவார்பித்து தருகையில்

நான் பூர்வந்[9]நலந்திகழ் நாராயண ஜீயர் இட்ட கட்டளைப் படியிலே பெருமாளுக்கே பொலிஊட்டாக இராயற்கும் இராஜாவுக்கும் தர்ம்மமாக சமர்பித்து

இந்த கிலோத்தாரணம் பண்ணின க்ராமத்தில்[10] உபையங் கொண்டு

பெருமாள் தினம் நாலு தளிகை அமுது செய்தருளி

இதில் நிபத்திக் கட்டளை அற்றபடி விட்டவன் விழுக்காடு சதுர்த்தாம்ஸம்[11] நாலு தளிகையிலே ஒரு தளிகையும் [ஔக்கு திருவேங்கடயங்கார் சந்தாந பரம்பரை ஆக சந்த்ராதித்ய[12] வரையும் அனுபவித்துக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள்[13] அமுது செய்தருளும் படிக்கு நடக்கக் கடவதாகவும்

இப்படிக்கு இந்த சிலாசாஸந[14] [மெழுதின] மைக்கு கோயில்க் கணக்கு ஸ்ரீரங்கநாராயணப்ரியன்[15] எழுத்து

---

1 வாஸ்துவாஸ்துசேஷம்
2 ப்ராப்தி
3 ப்ராப்தியும்
4 நிக்ஷேப
5 அஷ்டபோக தேஜஸ்வாம்யங்களும்
6 ப்ரியசிஷ்யநாய
7 ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வர சோமகுலதிலகாயமான
8 ஏகபோக்யமாய்
9 பூர்வந்
10 க்ராமத்தில்
11 சதுர்த்தாம்ஸம்
12 சந்த்ராதித்ய
13 ஸ்ரீவைஷ்ணவர்கள்
14 சிலாசாசந
15 ப்ரியன்

விளக்க உரை :

இக்கல்வெட்டு திருச்சி மாவட்டத்திலுள்ள திருவரங்கநாதர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. காலம் கி.பி. 1545. கல்வெட்டில் சக ஆண்டான 1467-உம் அதற்கு ஈடான தமிழ் விசுவாவசு ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஔக்குத் திருவேங்கடயங்கார் என்பவர் திருவரங்கநாதருக்காகத் தரப்பட்ட திருப்பதியைக் காவிரியாறு மூழ்கடிப்பதைக் கண்டு அதைத் தடுப்பதற்காக எடுத்த நடவடிக்கைகளை இக்கல்வெட்டு குறிக்கிறது. அவ்வாறு எடுத்த நடவடிக்கைகளில் நமது கவனத்தைக் கவருவது யந்திர ஸ்தாபநம் செய்ததும், காவிரியின் வடகரையில் நாணல் நட்டதுமாகும்.

நாராயண ஜீயர் அத்தகைய வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கையில் திருச்சிக்கு அருகில் உள்ள சிந்தாமணி கிராமத்தாருக்கு இன்னல் விளைவிக்கும் போல் இருந்தது. சிந்தாமணி கிராமத்தார் அரசனிடம் முறையிட, அரசன் ஜீயரை அழைத்து 'சந்நியாசியாக இருக்கும் நீங்கள் இப்படி பிராமணஹிம்சை செய்யலாமோ' என்று வினவினான். ஜீயர் 'ஒரு நல்ல காரியம் செய்ய சில தவிர்க்க முடியாத பாவம் செய்யலாம்' (நிமித்த க்ருதம் பாபம், தர்ம்மாய கல்பதே) என்று கீதையில் உள்ளது என்று விடை பகர்ந்தார். அரசன் அதைக் கேட்டு மகிழ்ந்து ஜீயர் செய்தது சரி எனத் தீர்ப்பளித்தான்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பகவத் கீதையிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டிருப்பதிலிருந்து அக்காலத்தில் பகவத்கீதை எந்த அளவிற்கு போற்றப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது.

30. திருஈங்கோய் மலைமீதுள்ள கிருஷ்ணதேவமகாராயரின் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ நமஸ்துங்க சிரச்சும்பி
சந்த்ர சாமரசாரவே ।
த்ரைலோக்ய நகராரம்ப
மூலஸ்தம்பாய சம்பவே ॥

ஸ்வஸ்திஸ்ரீ விசயாப்யுதய சாலிவாகன சகாப்தம் ௲௪௱௩௰௯ இதின்மேல் செல்லாநின்ற ஈசுவர[பிலவங்க] சம்வத்ஸரம் [புஷ்ய மாசத்துப் பௌர்ணமி நாள்] ஸ்ரீமன் மஹாமண்டலேசுவர, அரியராயரவிபாடன் பாஷைக்குத் தப்புவராயரகண்டன், கண்டநாடு கொண்டு, கொண்டநாடு கொடாதான், பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சதுச்சமுத்திராதிபதி, ஸ்ரீவீரப்பிரதாப ஸ்ரீவீர கிருஷ்ணதேவமகாராயர், சோழ மண்டலத்து விஷ்ணுஸ்தானம், சிவஸ்தானம், முதலான தேவஸ்தானங்களுக்கு சோடி, சூலவரி, புறவரி, அரசுபேறு மற்றும் உண்டானது எல்லாம் சர்வமானியமாக திருவுளம் பற்றின தர்மசாசன ராயசம், நாம் விசயநகரத்திலிருந்து புறப்பட்டு, பூர்வ திக்குவிசையார்த்தம் எழுத்தருளி உதயகிரி துர்க்கமும் யிரிசிக் கொண்டு, திருமலை ராகுத்தராயனையும் பிடித்துக் கொண்டு, வினிகொண்டை வெல்லம கொண்டை, நாகார்ச்சுன கொண்டை, கொண்டை வீடு, கொண்டை பள்ளி, ராசமகேந்திரவரம் முதலான துர்க்கங்களும் இரிசிக் கொண்டு, பிரதாபருத்திர கசபதிகுமாரன் வீரபத்திரனையும், பிரதாபருத்திர கசபதி பிரகலாதன், சிரச்சந்திரன், மல்லூகான், உத்தண்டகான் முதலான பாத்திர சாமந்தரையும் சீவக்கிராகமாகப் பிடித்துக்கொண்டு, பிரதாபருத்திர கசபதியையும் முறிய வெட்டி சிங்காத்திரிக்கு எழுந்தருளி, பொட்டு நூரில் ஜயஸ்தம்பம் நிறுத்தி, சோள மண்டலத்தில் தேவஸ்தானம் திருச்சிராப்பள்ளி, திருஈங்கோய்மலை சந்தலைகை, திருக்காட்டுப்பள்ளி, திருமழவாடி, வல்லம், தஞ்சாவூர், திருநல்லூர், திருவாரூர், திருநகரி, திருவையாறு, திருவெழுந்தூர், இராசுராமப்பாளையம், திருவாஞ்சியம், திருப்புகலூர், திருப்பனந்தாள், திருநாங்கூர், தாடாலங்கோயில், சீர்காழி, அரிகண்டபுரம் உள்பட இரண்டாற்றுப் பற்றுச் சீர்மை புவனேகவீரன் பட்டணச் சீர்மை, ராசராசச்சுரச் சீர்மை, தஞ்சாவூர்ச் சீர்மை, வீரமடக்குச் சீர்மை, வழுதலம்பட்டுச் சீர்மை,

வழுவத்தூர்ச் சீர்மை, பெரம்பூர்ச் சீர்மை, குழித்தண்டலைச்சீர்மை உட்பட்ட விஷ்ணுஸ்தானம், சிவஸ்தானம் தேவஸ்தானங்களில் பூர்வம் முதலாக அரைமனைக்கு இறுத்து வருகிற சோடி, சூலவரி, ஆயம் ஸ்தலயாதிக்கம் பதினாயிரம் பொன்னிலே [அந்தந்த தேவஸ்தானங்களுக்கு மகரசங்கராந்தி புண்ணிய காலத்திலே கிருஷ்ணவேணி தீரத்திலே] உண்டவல்லி அநந்தசாயி சந்நிதியிலும் விசயவாடை மல்லிகார்ச்சுனதேவர் சந்நிதியிலுமாக தாராபூர்வமாகச் சர்வமானியமாக விட்டு [தர்மசாசன ராயசமும் பாவித்தோம் இந்த ராயசப் பிரமாணத்திலே எல்லா தேவஸ்தானங்களிலும்] சிலாசாசனம் எழுதிவிச்சு பூஜை புனஸ்காரமும் அங்கரங்க வைபோகமும், திருப்பணிகளும் சாங்கோபாங்கமாக ஆசந்திராதித்த ஸ்தாயியாக நடத்திக் கொண்டு சுகத்திலே இருக்கவும், இந்த தர்மத்துக்கு அகிதம் நினைத்தவன் தங்கள் தங்கள் மாதாபிதாவையும் கோ பிராமணரையும் வாரணாசியிலே கொன்ற பாவத்திலே போகக் கடவராகவும்.

ஸ்வதத்தாத்விகுணம் புண்யம்
பரதத்தானுபாலனம் ।
பரதத்தாபஹாரேண
ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது ॥

விளக்க உரை :

திருச்சி மாவட்டத்தில் திருஈங்கோய் மலை மீதுள்ள மரக தாசலேசுவரர் கோயிலில் இக்கல்வெட்டு உள்ளது. கல்வெட்டின் காலம் சக ஆண்டு 1439; அதாவது கி.பி. 1517. இறைவணக்கமாக் கல்வெட்டின் துவக்கத்தில் உள்ள சம்ஸ்கிருதச் செய்யுள் பரமசிவனின் அருள் வேண்டுகிறது. கிருஷ்ணவேணி ஆற்றங்கரையில் மகரசங்கராந்தித் திருநாளன்று மன்னன் எழுந்தருளியிருந்த போது, சோழ மண்டலத்தில் உள்ள சிவன், திருமால் கோயில்களுக்குப் பத்தாயிரம் வராகன் பொன் அளித்ததைக் குறிக்கிறது. மேற்படி கோயில்களுக்குச் சோடி, சூலவரி, புறவரி, அரசு பேறு ஆகிய வரிகள் விலக்கப் பட்டிருப்பதையும் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் சிறப்பு யாதெனில் கிருஷ்ணதேவராயர் மேற்கொண்ட போர் நிகழ்ச்சி பற்றிய செய்தியாகும். விசயநகரத்தினின்று புறப்பட்ட

மன்னர் எந்தெந்தக் கோட்டைகளைக் கைப்பற்றினார்; எந்தெந்த மன்னர்களையெல்லாம் வென்றார்; எவர்களையெல்லாம் உயிருடன் சிறைப்படுத்தினார் என்பவற்றைக் குறித்து விட்டு, மன்னர்இவ்வெற்றிகளைக் குறிக்கும் வண்ணம் பொட்டுநூரில் வெற்றித் தூண் நிறுவியதையும் அறிவிக்கிறது. இக்கல்வெட்டு கிருஷ்ணதேவராயர் தெலுங்கு தேசத்தில் பெற்ற வெற்றிகளைக் குறிப்பதில் சிறப்பு வாய்ந்தது. கல்வெட்டின் இறுதியில் இடம்பெறும் சம்ஸ்கிருதச் செய்யுள், "தான் அளித்ததைக் காட்டிலும், மற்றவர் அளித்ததைத் திறம்பட நிர்வகிப்பது இரு மடங்கு நலன் பயக்கும்; பிறர் அளித்ததை அபகரித்தால் தான் அளித்ததும் பயனற்றதாகி விடும்" என்று கூறுகிறது.

அருஞ்சொல் பொருள் குறிப்பு

அகநாழிகை – கர்ப்பகிருகம்
அட்டிக் கிடந்த் – வகுக்கப்பட்ட
அட்டுதல் – இடுதல், செலுத்துதல், தானசாஸனமளித்தல்
அத்தனையும் – அனைத்தும், அவ்வளவும்
அதிட் அனம் – இருக்கை
அநுஷ்டுப் – ஒருவகை யாப்பமைதி
அமண் சேர்க்கை – அமணர் சேர்கின்ற இடம், ஊர்
அமராலயம் பல செய்தும் – அமர ஆலயம் பல செய்து; நிலைபேறுடைய (அ) தெய்வத் தன்மை பொருந்திய கோயில்கள் பல எடுப்பித்து.
அயிந்தே கால் – ஐந்தே கால்
அருமறை விதி நெறி – அரிய மறை நூல்கள் விதித்துள்ள வழிகள்
அலைகடாம் – அலைஒலி
அவநிகாந்தநே – உலகின் காந்தனால்
அறவோலை – தர்மசாசனம், அறமாக எழுதிக்கொடுத்த ஆவணம்
அறுபித கல் – அறுபித்த கல் ; படுக்கைக்கேற்ப மெத்தெனச் செதுக்கிய கல்
அறையோலை – அறஒலை, வரையறை செய்யும் சாஸனம்
அன்சனம் – சமணரின் உண்ணா நோன்பு
ஆசிரிகர் – ஆசிரியர்
ஆடவல்லான் - நடராசப் பெருமான்
ஆணத்தி – அரச ஆணையைச் செயல்படுத்தும் அதிகாரி
ஆணியம் – நாட்படி, நாட்கூலி
ஆணை ஒழுக்கு – ஆணை செலுத்துதல், அதன்படி நடத்தல்
ஆரியம் விராய்த் தமிழ் தொடுத்த மதி ஒற்கும் – வடமொழி கலந்து தமிழ் எழுதிய மதியுடையோர்க்கும்

ஆறுபல தலை கண்டும் – கால்வாய் பல வெட்டியும்
இடைப்பாட்டம் – இடையர் மீது விதிக்கப்படும் பழைய வரிவகை
இந்துகிரணன் – திங்களன்ன தன்மையன்
இருபத்தைந்து பங்காயி – இருபத்தைந்து பங்காயிற்று
இவர் நம்பிராட்டியார் – மேலே காட்டப்பட்ட ஆடவல்லார் தேவியார்
இழிச்ச – இறக்க
இறங்கல் – அரசிறையின்மை
இறையிலி – வரி நீக்கப்பட்ட நிலம்
ஈழம் பூட்சி – பழைய வரி
ஈழவர் – கள்ளிறக்குவோர்
உசாவடி – விஜயநகர மன்னர் கால நாட்டுப் பிரிவு
உடும்போடி ஆமைத் தவழ்ந்தது – மேடும் பள்ளமுமாக உள்ள நிலம்
உண்ணிலம் – உள்நிலம்
உண்ணிலன் ஒழிவின்றி – உள்நிலங்கள் யாவும் ஒழிவு இல்லாமல்
உத்தர மந்திரி – தலைமையமைச்சன்
உததி – கடல்
உபாய பகுளன் – பல உபாயங்களையுடையவன்
உள்ப்பட்ட – உள்-பட்ட உட்பட்ட என்பதன் அக்காலத்திய வழக்கமைவு
உழுதூட்டுதல் – உழுது கொடுத்தல்
உல்கு – சுங்கம்
ஊடுபோக்கு – ஒரு பழைய வரி
ஊராள்சி – வரி
ஊற்றுக்கால் – ஊற்றுத் தோண்டி அமைத்த வாய்க்கால்
எல்லை தெரிச்ச – எல்லை அறுதியிட்ட, எல்லை கண்ட
ஏகபோக – தனி ஒருவருக்குக்கொடுத்த
ஏகபோக பிரம்ம தேயம் – தனி ஒருவருக்களிக்கப்பட்ட பிரம்மதேயம்
ஒப்பினால் – ஏற்றுக் கொண்டு
ஒழுக்கவி – கோயிலில் நாடோறும் படைக்கும் சமைத்த உணவு

ஒற்றி – அடமானம் வைத்தல்

ஓடக்கூலி – ஓடத்திற்குச் செலுத்தும் வரி

ஓலைக் கூலம் – ஒருவகை வரி

ஓலை நாயகன் – சோழருடைய தலைமைக் காரிய நிர்வாகி

கண்டரொள் கண்டன் – பட்டப்பெயர்

கண்டார் காணா உலகு – இன்று கண்டாரை நாளை காண இயலா உலகு

கண்ணாலக் காணம் – திருமண வரி

கண்காணி – மேற்பார்வையாளர்

கணம் – வேதம் சொல்லும் ஒரு முறை

கணி முற்றூட்டு – சமண சங்கத்துக்கு அளிக்கப்பட்ட சர்வ மானியம்

கத்திக் காணம் – ஆயுத வரி

கரடிகை – கரடி கத்தினால் போலும் பறை வகை

கரணத்தான் – ஊர்க்கணக்கன்

கல்பதே – செய்யப்படுகிறது

கல்லின – தோண்டின

கல்லும் கள்ளியும் நாட்டி – பிடிசூழ்ந்து பிடாகை நடந்து அளவையிட்ட நிலத்திற்கு கல்லும் கள்ளியும் எல்லையாக இடுதல் மரபு.

கலம்பாடுதடி – கல வித்துப்பாடு நிலம்

கலைவஞ்சி – கலைமகள்

களர் – ிளைச்சலுக்கு உதவாது நீர் கோர்த்துள்ள உவர் நிலம்

கற்பம் – நானூற்று முப்பத்திரண்டு கோடி ஆண்டு

கன்று மேய் பாழ் – கால்நடை மேய்ப்பதற்காக ஊரகத்தே விடப்பட்ட பொது மேய்ச்சல் நிலம்

காகளம் – எக்காளம்

காராண்மை – நிலத்தைப் பயிரிடுங் குடியுரிமை

கிளான் – (கிழான் என்பதன் திரிபு) உரிமை உடையவன்

குட்டு – தலையில் குட்டுதல்

குடிநிலன் - குடியிருக்கும் மனை நிலம்

குடிநீக்கி – உழும் குடிகளை அகற்றிவிட்டு

குணந்த — கொண்டு வந்த, கொணர்ந்த என்பதன் திரிபு
குசக் காணம் — குயவர் செலுத்தும் வரி
குசை கொண்டு — கடிவாளமாக்கி — வென்று
குத்துக்கால் — தடை
குற்றேத்தம் — குற்றேற்றம் (சிறு ஏற்றம்)
குறங் கறுத்து — கால்வாயினின்று வேறு தனிக்கால் பிரித்து
கூத்தி கால் — நாட்டிய மகள் மீது இடும் வரி
கூலம் — தானிய வரி
கூற்றம் — ஒருவகை நாட்டுப் பிரிவு
கெயிக் கொடுத்து — கையில் கொடுத்து
கொக்கு வாய் — ஒருவகை அணிகலம்
கொட்டகாரம் — நெல் முதலிய பண்டம் வைக்கும் அறை
கொத்தம் — எல்லை
கொடுதுது — கொடுத்தது
கோட்டு — கலியுகக் கோட்டு, கலி ஆண்டு
கோத்தொட்டுண்ணப் பாலது — அரசன் பெறும் வரிகள்
கோவிந்த (ந்) நாந்மா — கோவிந்தன்-நால்-மா
கோவும் பொறியும் மாற்றி — அரசன் பெறுவதையும் பெயரையும் மாற்றி
சடிகன் — சினேகிதன் (அல்) மைத்துனன்
சண்பங்காறை — தாலியின் உருவகை
சத்திமுகம் — அரசனது ஆணைப் பத்திரம்
சதுர்ப்பேதிகள் — நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்கள்
சதுர் புஜன் — நாற்கரத்தன்
சதுர்வக்த்ரன் — நான்முகன்
சந்தரிதன் — பெயர்
சந்தி காந்தியாயன சூத்திரத்து — காத்தியாயன மரபு
சம்வத்சரம் — ஆண்டு
சவை — அவை
சரணத்தார் — ஒருவகை வேதசாகையை ஓதுவோர்
சரணம் — பாதம்

சாசனமுமறையோலையும் – அரசாணையும், அறவோலையும்
சாலா – சாலை, பயிலிடம்
சித்தி – துஞ்சிய
சிமய வரைத் திறல் மங்கை – மலைமகள்
சிரிநிகேதநஞ் – திருமகளின் இருப்பிடம்
சிலாசாசனம் – தானம் முதலியவற்றைக் குறித்து வரையப்படும் கல்வெட்டு
சிலைச் செதிர்ந்த – சிலைத்தெதிர்ந்து; ஆராவாரித்து அல்லது சினந்து எதிர்ந்து
சிற்ப மாத்தாண்டன் – சிற்பிகளில் ஞாயிறு போன்றவன்
சிறுபோவில் இளயர் – (சிறுபோசில் இளையர்) சிறுவாயில் எனும் ஊரைச் சார்ந்த வீரர்.
சுட்டோட்டால் – செங்கல்லால்
சுத்த சீலா சாரனாகி – தூயு ஒழுக்கம் ஒழுகுவோன்
செக்கு – செக்கு வரி
செஞ்சொரி – செஞ்சொரி என்பது செய்யுள் நோக்கி 'செஞ்சொரி' ஆயிற்று, குருதி
செறு – நிலம், குளம், பாத்தி
சென்னடை – நித்திய படித்தரம்
சென்னீர்ப் பொதுவினை – ஒருவகை வரி
சோமபாந மனோசுத்தராகிய – சோமபாநம் செய்து மனத் தூய்மையானவன்
தசவதனன் – தசமுகன்
தட்சிணை – குரு முதலிய பெரியோர்க்குக் கொடுக்கப்படும் பொருள்
தட்டழி – ஒருவகை இசைக் கருவி (வாத்தியம்)
தட்டார்பாட்டம் – தட்டார் கொடுக்கும் வரி
தடி – நிலம்
தம்மம் – தர்மம்-அறம்
தம்மி – தாமரை
தமனகம் – மருக்கொழுந்து
தலைப்பேழை – வாய்க்காலின் தலைப்பு மதகு
தலைவாய் – முதல்மடை

தரம் – நிலப் பண்புக்கேற்றபடி வரி விதிக்கப்பெற்ற கிராம நிலப் பிரிவு (அ) தீர்வை

தரகு – தரகரிடமிருந்து கொள்ளும் வரி

தறி – தறி வரி

தறிப்புடவை – ஒரு பழைய நெசவு வரி

ஆச்வலாயன சூத்ர – ஆச்வலாயனரின் சூத்ர மரபு

தானமாநியம் – மானியமாக இடப்பட்ட நிலத்திற்கு விதிக்கப்பட்ட தீர்வை

திசைமுகன் – நான்முகன்

திருக்கைக் காறை – கடவுளர்க்குச் சாத்தும் கை அணிவகை

திருமுகம் – அரசனது சாசனம்

தீயெரி – எரி பொருளுக்கு இடப்படும் வரி

துரவு – பாசனத்திற்குதவும் பெருங்கிணறு

தூணி ஏற்றுதல் – நான்கு மரக்கால் அளவு

தெற்கின்னும் – தெற்கில் என்பது பொருள். இதே போன்று மேற்கின்னும், கிழக்கின்னும் என்பது நோக்கி அறிக

தென் மடலாய் – தென்வடலாய்

தேசு கொள் – புகழ் கொள்

தேவகருமம் – வழிபாடு

தேவதானம் – கோயிலுக்கு விடப்படும் இறையிலி நிலம்

நடுகல்லின் மாடு – எல்லைக் கல்லின் பக்கல்

நண்ண வந்து – பொருந்த வந்து; சிறிது வந்து

நந்தீட்டின்படி – நம்முடைய ஓலைப்படி

நல்லா – நல்லஆ - நல்ல பசு, ஒருவகை வரி

நல்லெருது – நல்ல எருது

நவக்கண்டங் குடுத்து – புதிய தசை கொடுத்து

நவகருமம் – புதுப்பிக்கும் பணி

நாட்டாண்மையோருடன் – நாட்டுப் பிரிவின் தலைவருடன்

நாடாழ்ச்சி – நாடாட்சி, நாட்டை ஆளுகை

நாடுகாவல் – நாட்டுக் காவலுக்காக வாங்கப்படும் வரி

நம் தீட்டின் படி — நாம் ஒப்புக் கொண்டு எழுதிய பத்திரப்படி
நாரைக்கண்பட்டி — காதில் அணியும் ஒருவகை அணி
பஞ்சக்கம் — ஐவர் செய்த தீர்ப்பு
பட்டன் — அர்ச்சகன்
பட்டான் — இறந்து பட்டான்
பட்டோலை — அரசன் ஆணையை அறிவிக்கும் கருவி
படாகை — கொடி, நாட்டின் உட்பிரிவு நிலச்சாகுபடிக்கு வசதியாகக் குடிகள் நிலத்திற்கருகாக ஊர்ப்புறத்தில் அமைத்துக் கொள்ளும் குடிசைகள் கூட்டம்
படுகண் — நகையில் கொக்குவாய் மாட்டப்படும் உறுப்பு
பண்டார வாடை — குடிபாத்தியமான ஊர்
பண்டித தாசன் — புலவர்கட்கடியவன்
பண அன் — பாண்டியன் என்பதன் திரிபு
பத்தல் — ஏற்றநீர் செல்லும் வாய்க்கால்
பரிகாரம் — நீக்குகை
பள்ளிச்சந்தம் — சமண பௌத்தக் கோயில்களுக்கு விடப்பட்ட ஊர்
பழவிளப்பான் ஓடை — ஒரு ஓடையின் பெயர்
பறையோடை — ஒரு ஓடையின் பெயர்
பாத்தொகு — பாட்டுகளின் தொகுதி
பாதஸ்பர்சனை — கால்வருடி இருத்தல்
பார்த்திபர் — அரசர்கள்
பால்குண மாசம் — மாசி சுக்கில பிரதமை முதல் பங்குனி அமாவாசை முடிய உள்ள சாந்திரமான மாதம்
பிதா நாழி — (புதா நாழி) பழைய வரிவகை
பிடாகை — உட்கிடையூர்
பிடி சூழ்ந்து பிடாகை நடப்பிப்பது — தானங் கொடுக்கும் நிலத்தின் எல்லையைக் காட்ட, பெண் யானையோடு சென்று அதன் உள்ளகப்பட்ட நிலத்தை எல்லையிடல்
பியருடையச்சீர்திகள் — பெயருடைய மிகுபுகழ்
பிரதிஷ்டை — நிலை பெறுத்துகை

பிரம்மதேயம் — பிராமணருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்
புணருத்தான் — தொகுத்தவன்
புரவெழுதி — வரிக்கணக்கெழுதி
புரவுவரி — அரசிறை
புரவேறல் — அரசுவரிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளுதல்
புழுதிபாடு — தரிசு நிலம்
புறத்தன் — அந்நியன்
புறவூர் — புறத்தே உள்ள ஊர், வெளியூர்
புறனாஞ்சிலாலிருபூ — உழவினால் இரண்டு போகம் விளையும் நிலம்
புனற்பதி — வாழ்விடம்
பெருங்கால் — பெரிய வாய்க்கால்
பெருஞ்செக்கு — செக்கிற்கிடும் வரி
பொந்நாக்கி — பொன்-ஆக்கி, பொன்னிறமாக்கி
பொலி — நெற்குவியல், விளைவின் அளவு
பொன்றண்டம் — பொன் தண்டம்
பேர்த்தளிய — பேர்த்து — அருளிய எனற்பாலது பேர்த்தளிய என வந்துள்ளது.
பேர்த்தந்தோம் — அதிகாரம் அளித்தோம்
போத்தக — போகவும்
மகோத்திகள் — பெருங்கடல்கள்
மதுராபுரி பரமேசுவரன் — மதுரை நகரின் தலைவன்
மத்தளி — வாத்திய வகை
மத்யஸ்தன் — ஊர்ச்சபை நடவடிக்கைகளை நடுநிலையில் நின்று ஏற்படுத்துவோன், இவன் நடுவிருக்கை என்றும் குறிக்கப்படுவான்.
மதுரதரர் — இனிமையானவர்
மந்திரவோலை — அரசன் திருமுகம் எழுதும் அதிகாரி
மறைந — மனை
மரு — மணம்
மலடு — கருத்தரியாமை
மலைகடாம் — மலைபடுகடாம்

மயக்கல் – வயக்கல் என்பதன் திரிபு, திருத்தி உழப்பட்ட நிலம். இது வசக்கல், மசக்கல், மயக்கல் என்று வழங்கப்படும்.
மறக்கேடு – போரில் ஏற்பட்ட கேடு
மன்றுபாடு – தருமாசனத்தின் முன் இறுக்கும் தண்டப்பொருள்
மாட்டுக்கிறை – வரி
மாநிதி மகரகேதநன் – பெண்களுக்குக் காமன்
மாவிரை – வரிவகை
மால்களிற்றின் நாயகம் – கருமையான யானைக்குத் தலைவன்
மீயாட்சி – நிலம் முதலியவற்றின் மேலதிகாரம்
முரம்பு – பருக்கைக் கல்லுள்ள மேட்டு நிலம்
முற்றூட்டு – முற்றும் ஊட்டு, சர்வமானியம் முழு உரிமை செய்தல்
மூன்றுடங்கின – முன்பு சொல்லப்பட்ட
மூன்னிவரவை – ஒரு நிலத்தின் பெயர்
மூதா அமண்ணன் – மூத்த அமணன்
மெதுகு – ‘முதுகு’ என்பதின் திரிபு
மேந்து – மேய்து, வேய்ந்து
யந்திரஸ்தாபனம் – தகடு முதலியவற்றில் விரும்பிய பயனை விளைக்கும் மந்திர சக்கரம் தாபிக்கும் சடங்கு
யாண்டேய் – “இகர யகரம் இறுதி விரவும்” பார்க்க இவ்வோடைக்கேய்
வசுசாப – வசுவின் சாபம்
வசுதாதிப வாசுதேவன் – கொற்றவர்களில் திருமால்
வட்டி நாழி – வாங்குகின்ற வட்டியின் மீது இடப்படும் பழைய வரி
வடவரம்பேயுற்று – வடவெல்லையை அடைந்து
வண்ணாரப் பாறை – வண்ணார் செலுத்தும் வரிவகை
வயக்குதல் – திருத்துதல்
வியவஸ்தை – முடிவான ஏற்பாடு உடன்படிக்கைப் பத்திரம்
வரிப்பொத்தகக் கணக்கு – (அரசிறைக் கணக்குக் குறிப்பு) ஒரு பழைய அரசுப் பதவி
வரியிலி யீடு – வரிப் பொத்தகத்தில் பதியும் பதிவு, வரிப்பொத்தகப் பதிவு அதிகாரி

வளநாடு – நாட்டுப் பிரிவு
வன்னி – ஒரு மரம்
வா நெல்லையை – வான்-எல்லையை
வாய்க்காலுக்கேய் – வாய்க்காலுக்கு எனற்பாலது வாய்க்கேய் என வந்துள்ளது.
வானரத்வஜன் – குரங்குக் கொடியோன்
விகாரத்துப்பள்ளி – பௌத்த ஆலயம்
விநைய கஞ்சுகன் – விநயத்தைக் கவசமாகக் கொண்டவன்
விப்ரர் – அந்தணர்
வியாகம் – விசாகம், ஒரு திருவிழா
விராலுகள் – விரால் மீன்கள்
விலைக்காணம் – விலைப்பொன், விலைப் பொருள்
வெருவு மீன்கள் – வெற்றி கண்ட
வெருவு மீன்கள் – வெருவுதல் மருளுதல்
வெள்ளாட்டி – பணிப்பெண்
வெள் அறை நிகமது – வெள்ளறை ஊரைச் சேர்ந்த வணிகக்குழு, அல்லது வெள்ளறை என்னும் நகரம்
விற்பிடி – வில்வித்தைப் பயிலத் தொடங்கும் பொழுது செலுத்தும் தொகை
வேட்கோவன் – குயவன்
சுக்லபக்ஷம் – வளர்பிறைக் காலம்
சர்வபுத ஸௌர்ஹார்த்த முண்டாய் – எல்லா உயிரிடத்தும் அன்பு நிறைந்தவராய்
பட்டாய் நின்று – அரச ஆணையின் பிரதிநிதியாக நின்று
ஸகலன் – மனைவியின் உடன் பிறந்தாள் கணவன் (சகலன்)
ஜீயர் – சைவ, வைணவ சமயக் குரவர்களை ஜீயர் என்று விஜய நகரக் காலத்தில் அழைப்பது மரபு.
க்ஷத்திரிய சிகாமணி – இராஜராஜனின் பட்டப் பெயர்களுள் ஒன்று
ஸ்ரீ மாதவ சரண சேகரன் – திருமாலின் அடியை தலைமேற் கொண்டவன்
க்ஷத்ரியானு மதம் – அரசியலறிவு
ஹிதாக்னி – வேள்வி வேட்டவன்